எங்கெங்கு காணினும் சக்தியடா

சக்தி

பெண்ணிதழ்

பெண்கள் மேம்பாட்டு பன்மொழி மின்னிதழ்

மலர்-2 இதழ்- 08 | நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி | ஏப்ரல் 2026



அல்லையார் அதியமானின் மயிலோனிடம்
சினந்து எள்ளலுடன் பேசிய காட்சி

உலகளாவிய சிந்தனையுடன் வாழ்க!
முனைவர். இல.ஜெயந்தி

தமிழ் என்னும் பீனிக்ஸ் பறவை
அ.திவ்யகுமாரி கண்ணம்மா

இஸ்லாமியப் பெண் ஆளுமைகள் - அன்னை அம்ரா
சம்சுல் ஹுதா பானு

ராவணனின் இரண்டாவது மனைவி தான்யமாலினி
இரா. சைலஜா சக்தி

கால் நாழிகை வானம்
மேனகா நரேஷ்

ஜெயஸஞ்ஜீவி
வை.மு.கோதைநாயகி அம்மாள்

ARANYANI
VIJENI

பெண் என்பவள் வெறும் உடலா?
வசை மொழிகளில் பெண்கள்
சோஃபியா சாக்ரட்டிஸ்

மலர் -2 இதழ் - 08 ஏபரல் 2026

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் :
முனைவர் செ.ராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர் :
முனைவர் சந்திரிகா சுப்ரமணியன்(சிட்னி)

சிறப்பாசிரியர் :
முனைவர் தேமொழி (USA)

துணை ஆசிரியர் :
கவிஞர் மேனகா நரேஷ் (NJ)

உள்ளடக்கம்

1. **Oh gatekeeper (கவிதை)** 2
In English - Dr. C. Rajeswari

2. **உலகளாவிய சிந்தனையுடன் வாழ்க!** 3
முனைவர். இல.ஜெயந்தி

3. **அந்தி** 11
இரம்யா நடராஜன்

4. **இந்தியப் பெண் விஞ்ஞானிகள் டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி** 17
மேனகா நரேஷ்

5. **ஈரம் காயும் முன்னே (கவிதை)** 25
அர்ஷா

6. **சம்பாத்தியம் (சிறுகதை)** 26
அன்னபூரணி தண்டபாணி

7. **தமிழ் என்னும் பீனிக்ஸ் பறவை** 33
அ.திவ்யகுமாரி கண்ணம்மா

8. **இஸ்லாமியப் பெண் ஆளுமைகள் - அன்னை அம்ரா** 40
சம்சுல் ஹுதா பானு

9. **பொய்யில்லை (கவிதை)** 42
ரிஸ்கா முக்தார்

10. **அவள் என்றும் வேண்டுவது அன்பு (கவிதை)** 43
கவிஞர் மாலதி இராமலிங்கம்

11. **ராவணனின் இரண்டாவது மனைவி தான்யமாலினி** 44
இரா. சைலஜா சக்தி

12. **கால் நாழிகை வானம்** 49
மேனகா நரேஷ்

13. **நிழல்தேடும் வேர்கள்** 50
அ.திவ்யகுமாரி கண்ணம்மா

14. **ஆங்கிலத் தேன் கவிதைகள் (நூலாய்வு)** 57
வித்யா மனோகர்

15. **தமிழக அமைச்சரவையின் முதல் பெண் அமைச்சர் - லூர்தம்மாள் சைமன்** 63
லயன் MJF வெங்கடேசன்

16. **ஜெயஸஞ்ஜீவி (தொடர்கதை)** 66
வை.மு.கோதைநாயகி அம்மாள்

17. **மரணித்த மலர் (மொழிபெயர்ப்பு கவிதை)** 79
மொ.பெ. முனைவர் செ. ராஜேஸ்வரி

18. **ARANYANI (தொடர்கதை)** 80
VIJENI

19. **பெண் என்பவள் வெறும் உடலா? வசை மொழிகளில் பெண்கள்** 88
சோஃபியா சாக்ரட்டிஸ்

Shakthi Pennithazh
Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)
3/422, Dinamani Nagar, Madhurai,
Tamil Nadu - 625 018.
Ph : +91 7871123226, +91 7010997630

கட்டுரைகள் அனுப்ப..
sakthipennithazh@gmail.com
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம்பெற்றுள்ளகருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும்.
அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை

Avvaiyar shouting at the gate keeper

Oh gatekeeper
Oh gatekeeper
Who never close the gate for the donees
Who come here for gifts
Strong minded in succeeding their plans
By sowing good words
In the ears of the donors-
Didn't Neduman Anji with a fast horse
Know himself
Or didn't he know me?
The world has not yet gone dry and arid
As men with knowledge and also fame
Gone dead
So
I packed all my utensils
I tied my bag of utensils
Like a carpenter with an axe
Gone into a forest
We got food, in any direction; we go.

Tamil original - Avvaiyaar

In English – Dr. C. Rajeswari

உலகளாவிய சிந்தனையுடன் வாழ்க!

முனைவர். இல.ஜெயந்தி
சென்னை

ஒவ்வொருவரும் இன்பமான வாழ்வையே விரும்புகின்றனர். இயற்கை அழகை, வளத்தைக் கண்டு களித்துத் துய்த்து மகிழவே மனிதப்பிறவி பெற்றுள்ளனர்.

சிந்தனை அறிவே மனிதனை உயர்த்தியுள்ளது. உலக ஒற்றுமையை வலியுறுத்தும் சிந்தனைகளே உயர்ந்தவைகளாகும்.

முன்னோர் உலகளவு விரிந்த மனதுடன் வாழ்ந்தனர். ஆராய்ந்து கண்டவைகளை உலகுக்கு எடுத்துரைத்தனர்.

உலகத்து உயர்ந்தவரை நட்பாக்கிக் கொள்வது சிறந்த அறிவு.
'உலகம் தழீஇயது ஒட்பம்' (திரு. 425)
உழவுத் தொழில் செய்பவரே உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்.
'உழுவர் உலகத்தார்க்கு ஆணி' (திரு. 1032)

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாய் கொண்டிருப்பது போல், உலகம் இருப்பாற்றலான மெய்ப்பொருளை அடிப்படையாகக் கொண்டது.

‘அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முற்றே உலகு’ (திரு. 1)

என உலகத்தை முன்னிலைப்படுத்திக் கூறுவார் திருவள்ளுவர்.

வாழிய வையகம் வாழிய!

தான் பெற்ற இன்பத்தை உலகுக்கு வழங்கி மகிழ்ந்தனர் அருளாளர்கள்.

நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே’ (திருமந்திரம் - 85)

அதிகாலையில் எழுந்து இனிய தமிழிசையில் வையகத்தை வாழ்த்திப் பாடுவதை பாரதிதாசன் குடும்பவிளக்கின், காலைப்பாட்டாக அறிவித்தார்.

‘யாழின் உறையினை எடுத்தாள் இசையில்
வாழிய வையகம் வாழிய!’ என்று
பாவலர் தமிழிற் பழச்சுவை சேர்த்தாள்
தீங்கிலாத் தமிழிற் தேனிசைக் கீதம்!’

என்றார்.

உலகில் உள்ள அனைவரும் மகிழ ஞாயிறு தோன்றுவதாக.

‘உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதிரு
பலர் புகழ் ஞாயிறு’

என்று திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் பாடலைத் தொடங்குவார்.

‘உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்’

என்று உலகை முதலாக வைத்து பெரியபுராணத்தைத் தொடங்குவார் சேக்கிழார்.

‘உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே’

உலகத்தை இயக்குவதும், ஒடுக்குவதுமான விளையாட்டைச் செய்யும் தலைவர்க்குப் பணிவதாகத் தொடங்குவார் கம்பர்.

உலகமே உறவு

எல்லா ஊர்களும் நம்முடையதே! உலகினர் யாவரும் நம் உறவினர்களே!

‘யாதும் ஊரே! யாவரும் கேளிர்!’ (புறம். 192)

என்று விரிந்த மனதால் உலகத்தையே உறவால் இணைத்துக் கொண்டார் கணியன் பூங்குன்றனார்.

மனம் விரிந்த நிலையிலுள்ள சான்றோர், தான் அறிந்ததை உலகுக்கும் அளித்து, துன்பமின்றி இன்பமாக வாழ்தலை,

‘அறிவ தறிந்தடங்கி அஞ்சுவதஞ்சி
உறுவ துலகுவப்பச் செய்து பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்பினர் - எந்நான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது! (நாலடி 74)

என்கிறது நாலடியார்.

அறியாமையும் அறிவுடைமையும்

ஒன்றுபடுத்தி இணைத்துப் பார்ப்பது அறிவுடைமை. பிரித்து, பேதப்படுத்திப் பார்ப்பது அறியாமை.

‘பகுத்துணர்வில் தொகுத்துணர்வு பண்பாட்டை உயர்த்தட்டும்’ என்பார் வேதாத்திரி மகரிசி.

ஒற்றுமையையும் ஒழுக்கத்தையும் வலியுறுத்தும் அருளாளர்களை, சிந்தனையாளர்களை ஒதுக்கி விட்டு, மதத்தின் பெயராலும் செல்வாக்காலும் மக்களை துன்பத்துக்கு ஆளாக்கும், அரசியல் தலைவர்கள், மதத்தலைவர்கள் செயலால் மக்கள் அல்லல் படுகின்றனர்.

விலங்கு குணம்

பரிணாமத் தொடரில் இறுதியாக வந்த மனிதரிடம், விலங்கினப் பண்புகள் மீதமாக உள்ளன.

ஆக்கத் துறையில் அறிவைச் செலுத்தாமல் பகையையும், போரையும் விரும்பும் விலங்கு மனம் எஞ்சியுள்ளதால் தன்னலமும், தன்முனைப்பும் மிகுந்து மனித குல அமைதியைக் கெடுக்கும் அத்தகைய மனிதர்களால் மக்களுக்குத் துன்பம் நேர்கிறது.

அறிவு விளங்குவதற்குக் காரணமான நூல்களைக் கற்றவரோடு கல்லாதவர், மக்களோடு விலங்குகளுக்கு உள்ள அவ்வளவு வேற்றுமை உடையவர்களாவர்.

‘விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்’ (திரு. 410)

என்பார் திருவள்ளுவர்.

இனப் படுகொலை

விலங்கு மனம் கொண்டவர்களால் பகையும், போரும் உண்டாகிறது. மனிதனையே மனிதன் கொன்று குவிக்கும் இனப்படுகொலை எனும் கொடுமை போரால், உண்டாகிறது. அணு ஆயுதத்தால் மொத்த மொத்தமாக மக்கள் கொல்லப்படுகின்றனர்.

போர் என்பது சமுதாய விலங்குணர்ச்சி என்பார் உளவியலின் தந்தை, செக்மண்ட் ப்ராய்டு. போரின் விளைவை எடுத்துரைத்தார் லியோ டால்ஸ்டாய். (போரும் அமைதியும் *(War and Peace)*

மற்ற உயிரின் துன்பத்தைத் தன் துன்பம் போல் கருதிக் காப்பாற்றாவிட்டால், பெற்றுள்ள அறிவினால் ஆகும் பயன் உண்டோ?

> *'அறிவினான் ஆகுவது உண்டோ பிரிதின் நோய்*
> *தம்நோய்போல் போற்றாக் கடை?' (திரு. 315)*

என்றே வினவுகிறார் திருவள்ளுவர்.

சாதி, மத, இன, மொழி பேதமின்றி யாவருக்கும் உணவளித்து பசிப் பிணியைப் போக்கினார் அருட்பிரகாச வள்ளலார்.

இந்திய விடுதலைக்கு அறப்போர் புரிந்தார் காந்தியடிகள்.

அன்பையும், ஒற்றுமையையும் எடுத்துரைத்த ஏசுபிரான், அல்லாவின் பெயரால் தொடரும் போர்கள் ஓயவேண்டும்.

எங்கோ ஒரு மூலையில் போரால் மக்கள் துன்பப்பட்டாலும், அந்தத் துன்ப அலையும், விளைவும் உலகம் முழுவதும் பரவுவதை அறியலாம்.

'அரக்கரே! மனிதஅறிவெனுங் கோயிலை
விட்டுநீ ரொழிந்தால்
மேவிடும் பொன்னுலகம்'

என்றார் பாரதியார்.

உலகுக்கு இந்தியாவின் நன்கொடை

'ஆன்மிகமே உலகுக்கு இந்தியாவின் நன்கொடை' என்றார் சுவாமி விவேகானந்தர்

ஆன்மா எனும் உயிர் பற்றிய அறிவே மக்களை இணைக்கவல்லது.

பல்வேறு மதம், இனம், மொழி இருப்பினும் இந்தியர்களை ஒற்றுமையுடன வாழ வைப்பது, முன்னோரின் அறக் கருத்துக்கள் ஆழமாக மனதில்

இருப்பதனாலாகும். 'வேற்றுமையில் ஒற்றுமை' (Unity in Diversity) என உலகம் வியக்க காரணமாகிறது.

'உலகிலுள்ள பொறுப்புடைய தலைவ ரெல்லாம்
உயிரறிவை உள்ளுணர்வாய்ப் பெறுதல் வேண்டும்.
உலகனைத்து நாடுகளின் எல்லை காக்க
ஒருலகக் கூட்டாட்சி வலுவாய் வேண்டும்.
உலகில் போர் பகை அச்சமின்றி மக்கள்
உழைத்துண்டு வளம் காத்து வாழ வேண்டும்.
உலகெங்கும் மனிதகுலம் அமைதியென்னும்
ஒரு வற்றாத நன்னிதி பெற்றுய்ய வேண்டும் (ஞா.க. 1602)

'வாழ்க வையகம்! வாழ்க வையகம்! என வாழ்த்தும் உலக அமைதிக்கான திட்டங்களை, உலக சமாதானமாக வகுத்தளித்தார் வேதாத்திரி மகரிசி.

ஆட்சி செய்யும் அரசரைப் பொறுத்தே உலகின் வளர்ச்சியும், வீழ்ச்சியும் அமைவதை,

'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' (புறம். 186)

என்றார் புலவர் மோசிகீரனார்

போரைத் தூண்டும், விரும்பும் உலகத் தலைவர்களை இந்தியாவுக்கு அழைத்து வர வேண்டும். அவர்களுக்கு அன்பையும் அறத்தையும், உயிர் அறிவையும், கற்பிக்க வேண்டும். புத்தரின் பொன்மொழிகளைப் புகட்ட வேண்டும்.

அணு சக்தியை அறிவியலுக்கும், ஆக்கத் துறைக்கும் மட்டும் பயன் கொள்ளவும், போரே இல்லாத நல்லுலகம் அமையவும் எண்ணங்களை வலுப்படுத்துவோம்.

முன்னாள் குடியரசுத் தலைவர், ஆ.ப.ஜெ. அப்துல்கலாம் கூற்றுப்படி பிரார்த்தனை செய்வோம்.

எண்ணங்களுக்கப்பால் எதுவுமில்லை. போர் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பதால்தான் உலகினைப் போர் சூழ்கிறது என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

உலக அமைதியைச் சிந்திப்போம். உலகில் அமைதி நிலைக்க வேண்டுவோம்.

உலகளாவிய சிந்தனையுடன் வாழ்க!

அந்தி

இரம்யா நடராஜன்

மகிழ்வுந்து அந்தச் சாலையில் ஊர்ந்து கொண்டு சென்றது. முன்னால் பின்னால் என வாகனங்களின் இரைச்சல் காதுகளைக் குடைந்தது. அது ஒரு வகையான எரிச்சலாக இருந்தாலும், மேனகாவிற்கு அது ஒரு பாதுகாப்பு உணர்வையே தந்தது. அரைமணி நேரம் ஓடிவிட்டது. இன்னும் அரைமணி நேரப் பயணம் தான் என்று தன் மனதிற்கு தானே சமாதானம் செய்து கொண்டாள். எப்படியும் குறித்த நேரத்தில் ரயிலை பிடித்துவிட வேண்டும் என்ற படபடப்பு வேறு ஒரு பக்கம்.

ஓட்டுனரின் பக்கத்து இருக்கையில் அமர்ந்திருந்தவள் சாளரத்தை ஒட்டினாற்போல அமர்ந்திருந்தாள். கையில் இருந்த அலைபேசியை பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் என்ன பார்க்கிறோம் என்பதில் எண்ணம் இல்லை. தவித்துக் கொண்டிருந்த அவளிடம் ஓட்டுனர் ''மேனகா மேடம்.. கவலை படாதிங்க. கரெக்ட் நேரத்துக்கு போயிடலாம். நீங்க இப்ப என் பொறுப்பு. தேவதை கணக்கா இன்னைக்கு உங்க தரிசனம் கிடைச்சிருக்கு எனக்கு பாக்கியம் மேடம்''. கனத்த உருவத்திற்கு ஏற்றாற்போல கரகரத்த அந்தக் குரல் ஒரு வித மிரட்சியாக இருந்தது.

உள்ளுக்குள் ஊறல் எடுக்கத்தொடங்கியது மேனகாவிற்கு. எதற்காக அவனிடம் பெயரைச் சொன்னோம் என்று இருந்தது. வாகனத்தில் ஏறப் போனப்போது பின்பக்க இருக்கை பழுதாகியுள்ளது, அது சரியில்லை என்று தன்னை முன்னால் அமரச் சொல்லி கேட்டுக் கொண்ட போது கூட எதும் தோன்றவில்லை.

பொதுவாகவே அறிமுகமற்றவர் என்ற போதும் சிறு பயணத் துணை என்று ஆகும் போது இயல்பாக ஒரு புன்னகையும் விசாரிப்புகளும் நிகழும். அது போல தான் ஆரம்பித்தது. பெயர் கேட்டுத் தெரிந்து கொண்டதும் எந்த ஊருக்கு எந்த ரயில் என்றும் தெரிந்து கொண்டதும் அப்டித்தான்.

பேச்சில் எவ்வளவு சுவாரஸ்யம் இருந்தாலும் பெண்களின் மனதில் எப்போதும் ஒரு விழிப்பு இருந்து கொண்டேதான் இருக்கிறது. நாள்தோறும் தொலைகாட்சியிலும் இதழ்களிலும் காணும் செய்திகளின் உபயம் அது என்று கூட சொல்லலாம்.

''மேனகா மேடம்..உங்க அப்பார்ட் மெண்ட்ல நிறைய பேரு எனக்கு கஸ்டமர் தான். அந்த நாலாவது ப்ளாக்ல இருப்பாங்களே.. செக்கச்செவேல்னு..கண் மை கூட நிறைய போட்டு..நல்லா அழகா..இருப்பாங்களே..அவங்க எப்பவும் என் வண்டில

தான் வருவாங்க. இப்படி முன்னால சீட்ல உக்காந்து வருவாங்க மேடம். அன்னைக்கு முழுக்க அவங்க வாசனை தான் வரும் வண்டியில". அவருடைய பேச்சு எங்கோ சுர் என்றது மேனகாவிற்கு. அமைதியானாள்.

அதுவரை நட்பாக பேசிக்கெண்டு வந்த மேனகா சட்டென அமைதியானதை உணர்ந்தாரோ என்னவோ, ஐந்து நிமிடத்திற்கு ஒரு முறை அவள் முகத்தை திரும்பி திரும்பிப் பார்த்தார். நெளிந்தாள் மேனகா.

"நீங்க கூட அவ்ளோ அழகு மேடம். திருத்தமா தலைசீவி சின்னதா பொட்டு வச்சு.. தேவதை போல இருக்கிங்க" மேனகாவிற்கு சற்று கோபம் எட்டிப்பார்த்தது. வாகனம் யாருமில்லா சாலையில் சென்றுக் கொண்டிருப்பதை கருத்தில் கொண்டு அமைதியானாள். தன் அலைபேசியில் ஒரு குறுஞ்செய்தி அனுப்பினாள்.

"லைவ் லொக்கேஷனா மேடம்...கரெக்ட் தான் மேடம். எப்பவும் இப்படி தான் உஷாரா இருக்கனும். அதும் உங்களப் போல அழகான பெண்கள்னா இன்னும் உஷாரு.."என்று சிரித்து வைத்தார். மேனகாவின் அலைபேசி அழைத்தது. எடுத்து பேசினாள். அதையும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வந்தார் ஓட்டுனர்.

சற்று நேரத்தில் வாகனம் குறுக்கு சந்தில் நுழைவதை உணர்ந்த மேனாகா,"இது என்ன வழி. மெயின் ரோட்ல போங்க சார். மேப் அது தான காட்டுது". சிரித்துக் கொண்டார். அது ஏனோ நரி ஊளையிடுவது போல் இருந்தது மேனகாவிற்கு.

"இது குறுக்கு வழி மேடம். மெயின் ரோட்ல போனா டைம் ஆகிடும்.சரியான நேரத்துக்கு கொண்டு சேர்த்துடுவேன் மேடம். கவலை படாதிங்க. ஆமா போன் வால்

பேப்பர்ல யாரு உங்க பொண்ணா. அழகு மேடம் உங்களப் போலவே".முறைக்க மட்டும் தான் தோன்றியது.

"உங்களுக்கு ஒன்னுத் தெரியுமா மேடம் என் பொண்ணு கூட அம்சமா இருப்பா. அவ அம்மா போல நிறம். ரொம்ப சுட்டி. நல்லா படிப்பா. இப்ப வேலையில இருக்கா. அவளுக்கு ஒரு இடம் பேசிருக்கோம். சொல்றோம்னு சொல்லிருக்காங்க. பாக்கறிங்களா..இருங்க என் இன்னொரு போன்ல இருக்கு".என்று மேனகா பக்கம் நன்றாகச் சரிந்து தன் கால்ச்சராயிலிருந்த அலைபேசியை எடுத்தார். வியர்த்தது மேனகாவிற்கு.

"நீங்க ரோட்ட பாத்து ஓட்டுங்க சார்" .

"அதெப்படி மேடம். பக்கத்துல என் அதிர்ஷ்ட தேவதைய வச்சிகிட்டு ரோட்ட மட்டும் பாக்கறது. இந்தாங்க போன்..சும்மா திறந்து பாருங்க".

நீட்டிய அலைபேசியை வாங்குவதா வேண்டாமா என்று யோசித்துக்கொண்டே இருந்தாள். வாகனம் இன்னும் குறுக்குச் சாலையில் தான் இருந்தது. ஆங்காங்கே வீடுகள் இருந்தாலும் மென் இருட்டும் தனித்துவிட பட்டதுமாகத் தான் இருந்தது. அலைபேசியை எழுப்பினாள். அவர் சொன்னது போலவே அவரது முக ஜாடையில் ஒரு பெண்ணின் படம் இருந்தது. உடன் அவர் மனைவி போலும். அழகான சிறு குடும்பப் படமாத் தான் இருந்தது. ஏதோ ஒரு சிறு மூச்சு வந்தது மேனகாவிற்கு.

"நல்லாருக்கு. உங்க மனைவியும் நல்லாருக்காங்க" என்று அலைபேசியை நீட்டினாள்.

"அட மேடம் அடுத்து அடுத்து பாருங்க சும்மா". அவரைப் பார்த்துத் திகைத்தாள். "மேடம் நான் எல்லார் கிட்டயும் இப்படி இருக்க மாட்டேன். நீங்கனதுனால தான். உங்க முகத்துல அப்படி ஒரு கலை மேடம். சிலை மாதிரி இருக்கிங்க. அதும் இந்த சிவப்பு சுடிதாருல..ம்ம்ம்ம்...அள்ளுது போங்க".

அய்யோ என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டாள். அவரது அலைபேசியை ஏதும் ஈடுபாடின்றி பார்த்துக் கொண்டிருந்தாள். சட்டென ஒரு படம் கண்ணில் பட்டது. அதில் அவர் மனைவி நவநாகரீக உடை அணிந்திருந்தாள். அந்த உடை சற்றும் பொருந்தாமல் இருந்தது. கணவருக்காக ப்ரத்யேகமாக எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றியது. சட்டென அலைபேசியை அவரிடம் கொடுத்தாள்.

அதுவரை அவளைப் பார்த்துக்கொண்டே வந்த ஓட்டுனர், அலைபேசியை வாங்கிக் கொண்டார்.அதில் இருந்த தன் மனைவியின் படத்தில் முத்தமிட்டார். மேனகாவின் இதயம் படபடத்துக் கொண்டது.

"என் பொண்டாட்டி மேடம். ஊரில இருக்கா..ஹ்ம்ம்ம்..இங்க நான் பொண்டாட்டி இருந்தும் ப்ரம்மச்சாரியாவே..என்னத்த சொல்ல மேடம். உங்க கிட்ட சொல்றதுல என்ன. நைட் ஆனாவே அவ நினப்பு தான் மேடம். தூங்க முடில. இந்த தொழில்ல தூக்கம் பாதிச்சா என்ன பண்ண முடியும் மேடம். மனசு வேற கடந்து தவிக்கும். அதெப்படி மேடம் நீங்க பொண்ணுங்களாம் மட்டும் அடக்கமா இருக்கிங்க" என்று அவளின் முகத்தை எட்டிப் பார்த்தார்.

மேனகா சாளரப் பக்கமாக முழுவதுமாக திரும்பி அமர்ந்திருந்தாள். சட்டென வண்டியை நிறுத்தினார்.

"மேடம் மெடிக்கல் ஷாப் இதோ அங்க இருக்கு. போயிட்டு வந்தர்ரேன்" என்று புன்னகைத்துவிட்டுச் சென்றார். மேனகா உடனடியாக அலைபேசியைப் பார்த்தாள். அந்த இடத்தில் இணைப்புக் கிடைக்கவில்லை. சுற்றிப் பார்த்தாள். வீடுகள் இருந்தது. ஆனால் பெரிதாக ஆள் நடமாட்டம் இல்லை. வீதி விளக்குகள் கூட மினுக்கிக் கொண்டு தான் இருந்தன.

மேனகாவின் இதயம் பன்மடங்கு துடித்தது. கைகால்கள் நடுக்கம் கண்டுவிட்டன. தூரத்தில் ஏதோ இரண்டு மூன்று உருவம் வருவது போல இருந்தது. கத்தி கூச்சலிட்டால் தேவலாம் போல இருந்தது ஆனால் வாய் எழவில்லை. கதவைத் திறக்க முயறிசித்தாள். முடியவில்லை. சாளரக் கண்ணாடியை இறக்கிவிட நினைத்தாள். அந்த வசதியே அந்த வண்டியில் இல்லாதது போல இருந்தது. சுற்றும் முற்றும் பார்த்தாள்.

வாகனத்திற்குள் இருப்பது பாதுகாப்பா அல்லது வெளியேறுவதா. வெளியே ஓடினால் இது அந்தாளுடைய இடமாக இருந்தால்..இங்குள்ளவர்கள் அவனுடைய ஆட்களாக இருத்தால். வாகனத்திற்குள் எதாவது வழி உண்டா என்று பார்த்தாள்.

அவள் வைத்த முதுகுப் பை மட்டும் பின் இருக்கையில் நடுங்கிக் கொண்டிருந்தது. அதை எடுத்து தனக்குத் துணையென அணைத்துக் கொண்டாள். கண்களை இறுக மூடிக்கொண்டாள். அவள் தலையை ஒரு கை வருடியது. திடுக்கிட்டுப் பார்த்தவள் முன் சிரித்துக் கொண்டிருந்தார் ஓட்டுனர். அவரின் கைகள் திமிற முடியாத படி அவளை இறுக அணைத்திருந்தது.

அய்யோ இப்படியே பூமி பிளந்து விடாதா...யாராவது வந்து சாளரத்தை உடைத்துவிடமாட்டார்களா...மூளைக்குள் ரத்தம் பாய்ந்துக் கொண்டிருந்தது. உடல் வியர்க்கத் தொடங்கியது.கண் கலங்கி கலங்கி வழிந்தது. தன்னை விடுவித்துக் கொள்ள போராடினாள்.இதுவரை இணையத்தில் பார்த்து வைத்திருந்த தற்காப்பு வழிமுறைகள் அத்துணையும் மனத்திரையில் விரிந்து வந்து குழப்பின.கனத்த அந்த ஆசாமியை எதிர்ப்பது எப்படி என்றும் விளங்கவில்லை.

சட்டென ஒலிப்பானை அழுத்தலாம் என்ற எண்ணம் தோன்ற ,அழுத்த முயற்சித்த போது கதவை திறந்து உள்ளே வந்தார் ஓட்டுனர்.

"என்ன மேடம். ரொம்ப தலைவலி அதான் மாத்திரை வாங்கினேன். நீங்க பயப்படாதிங்க கரொக்ட் டைம்ல் கொண்டு விட்ருவேன்". என்று அவளை ஏற இறங்கப் பார்த்து புன்னகைத்துக் கொண்டே வண்டியை ஓட்டினார். வாகனம் குறுக்குச் சாலையை விட்டு ப்ரதான சாலைக்குத் திரும்பியது. மேனாகா பையை அணைத்தபடி சாளரத்தை பார்த்துக் கொண்டே வந்தாள்.

"மேடம். நீங்க என் அதிர்ஷ்ட தேவதை தான் மேடம். இந்தா பாருங்க என் பொண்ணுக்கு பார்த்த வரன் செட் ஆகிருச்சு. பையன் சும்மா ஹீரோ மாதிரி இருக்கான். நல்ல இடம் மேடம். பாருங்க"என்று மறுபடி அலைபேசியை நீட்டினார்.

படபடப்பும் தவிப்பும் அடங்காத போதும் நிலைமையை சமாளிக்க திரும்பிப் பார்த்தாள். அவளை பார்த்தார் ஓட்டுனர்.

"பையன் ஓகே தான மேடம்". மேனகா பதில் அளிக்கவில்லை.

"மேடம்..மேனகா மேடம்...மேனகா...மேடடடம்" அழைத்துக் கொண்டே இருந்தான். வாகனம் ப்ரதான சாலையில் பல வண்டிக்களுக்கு இடையில் மிதந்துக் கொண்டு சென்றது.

"சார் கொஞ்சம் வண்டி ஓட்றீங்களா. டைம் ஆகுது" பொறிந்தாள். சிரித்துக் கொண்டார்.

"ஓட்டிட்டு தான மேடம் இருக்கேன். இப்ப பத்து நிமிஷம். போய் சேர்ந்துடுவோம். மேடம். உங்க கூட இப்படி கொஞ்சம் மணிநேரம் வரும் போதே என் வாழ்க்கையில் நல்லது நடக்குதே வாழ்க்கை முழுதும் நீங்க என் கூட நட்பா இருந்தா எப்படி இருக்கும்". பதிலை எதிர்பார்த்து அவளை எட்டிப் பார்த்தார்.

மேனகா அலைபேசியை எடுத்துப் பார்த்துக் கொண்டே வந்தாள்.

"சரிங்க மேடம். அடிக்கடி வேண்டாம். அப்ப அப்ப நான் எதாவது மெஸேஜ் அனுப்பினா பதில் மட்டும் குடுங்க மேடம் போதும். நான் எல்லார் கிட்டயும் இப்படிலாம் இருக்க மாட்டேன் மேடம். நீங்க எனக்கு அப்டி மனசுக்கு நெருங்கிட்டிங்க. அவ்வளவு இது உங்க கிட்ட".

அவர் சொல்வதை கேட்டும் கேளாதது போல தன் அலைபேசியில் இருந்தாள் மேனகா.அவர் மேலும் தொடர்ந்தார்.

“உங்கள பிக்அப் பண்ண வரும்போதே எனக்குத் தோணுச்சு மேடம் நீங்க தான் என்...என்...இதுன்னு...தேவதைன்னு...எத்தனை பேரை வண்டியில ஏத்திருக்கேன். அப்பலாம் ஒன்னும் தோணாது மேடம். உங்கள பாத்ததும் அப்படி ஒரு தெய்விகம் மேடம். உங்க கூட இருந்தா என் பயணம் அற்புதமா இருக்கும்னு நினச்சேன்.. அதான் முன்னால உக்கார வச்சிக்கிட்டேன்”.சிரித்தார்.

திடுக்கிட்டாள் மேனகா. சட்டென அவரைப் பார்த்தாள். வண்டி ஏறும் போது அலைபேசியில் பேசிக் கொண்டே இருந்தவளை பின்பக்க இருக்கை பழுது என்று சொல்லி முன்னால் அமரச் சொன்ன சம்பவம் நிழலாடியது. திட்டமிட்ட வேலையா இது என்று நெஞ்சம் அலறியது. தன் முகத்தில் எந்த சலனமும் காட்டிக் கொள்ளாமல் ஐந்து நிமிடத்தை எண்ணத் தொடங்கினாள்.

வண்டி ரயில்நிலையத்தை அடைந்தது. ஜன நெருக்கடியும் சத்தமும் காவல் சீருடைகளும் மேனகாவிற்கு ஒரு வித ஆசுவாசத்தைத் தந்தது.சட்டென வண்டியை விட்டு இறங்கி உள்ளே குனிந்து “எவ்வளவு” என்றாள். அதற்குள் வண்டியை விட்டு இறங்கி அவளுக்கு பக்கத்தில் வந்து நின்றார் ஓட்டுனர். “மேடம் ப்ளாட்பாரம்வரை வரட்டுமா..துணைக்கு”.என்றார்.

“சார் எவ்வளவு ஆச்சு மட்டும் சொல்லுங்க. எனக்கு வழித் தெரியும்”

“அறுநூறு மேடம். போன்ல அனுப்புறீங்களா” என்று அவளின் அலைபேசியை எட்டிப்பார்த்தார்.

மேனகா எவ்வளவு முயன்றும் அனுப்ப முடியவில்லை. இதென்ன தொல்லை என்று தன் தோழியை அழைத்து அனுப்பச் செய்யலாமா என்று நினைத்தாள். வேண்டாம் என்று ஏதோ உந்துதலில் தன் கைப்பையில் அவ்வப்போது சொருகி வைக்கும் ரூபாய் நோட்டுகளை எடுத்து எண்ணினாள். சரியாக இருந்தது. எடுத்து அவரிடம் நீட்டினாள்.

இருகைகளாலும் வாங்கிக் கொண்டு கண்களில் ஒற்றிக் கொண்டார்.

“மேடம் பத்திரமா போயிட்டு வாங்க. உடம்ப பாத்துக்கோங்க” என்று அவர் பேச பேசவே காதில் வாங்கிக் கொள்ளாமல் விறுவிறு என்று நடந்தாள் மேனகா.

அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த ஓட்டுனரின் முகத்தில் ஒரு புன்னகை அரும்பியது. கைகளைத் தட்டி சிரித்துக் கொண்டே வண்டியை எடுத்தார். அந்த சிரிப்பில் எதையோ சாதித்த திருப்தி இருந்தது.

இந்தியப் பெண் விஞ்ஞானிகள்- 10

டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி

மேனகா நரேஷ்
நியூஜெர்சி

"மங்கையாராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா" என்பதை சமூகத்திற்கு உணர்த்தியவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி. பெண்கள் மீது விதிக்கப்பட்ட ஒடுக்குமுறை, அடக்குமுறை ஆகியவற்றை அஞ்சாது எதிர்த்து நின்ற துணிச்சல்மிக்கப் போராளி அவர். அவரது வாழ்க்கை சாதனைகளால் நிரம்பிய ஒரு வரலாற்றுப் பதிவாகத் திகழ்கிறது.

ஆண்கள் கல்லூரியில் சேர்க்கப்பட்ட முதல் பெண் மாணவி, அரசு மகப்பேறு மற்றும் கண் மருத்துவமனையில் முதல் பெண் ஹவுஸ் சர்ஜன், பிரிட்டிஷ் இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர், மாநில சமூக நல ஆலோசனை வாரியத்தின் முதல் தலைவர், சட்டமன்ற கவுன்சிலின் முதல் பெண் துணைத் தலைவர், மதராஸ் மாநகராட்சியின் முதல் ஆல்டர்வுமன் எனப் பல முதன்மைச் சாதனைகள் அவரது பெயருடன் இணைந்துள்ளன. மனிதநேயச் சேவைகளில் முழுமையாக ஈடுபட்டு, காந்தியக் கொள்கைகளை வாழ்க்கை முழுவதும் கடைப்பிடித்தார். இன்று இந்தியாவின் மிகப் பெரிய புற்றுநோய் சிகிச்சை மையங்களில் ஒன்றாக விளங்கும் அடையார் புற்றுநோய் நிறுவனம் உருவாகக் காரணமான முதன்மை சக்தி அவரே.

எண்ணற்ற தடைகளை மீறி, பெண்களின் முன்னேற்றத்துக்கும், சமூக முன்னேற்றத்துக்கும் டாக்டர் முத்துலட்சுமி ஆற்றிய பணிகள், புரட்சிகர மாற்றத்துக்கான உந்து சக்தியாக அமைந்தன.

ஆரம்ப வாழ்க்கை, கல்வி

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் கல்வித்துறை இயக்குநராகவும் அரசரின் ஆலோசகராகவும், அரசினர் கல்லூரி முதல்வராகவும் இருந்த நாராயணசாமி ஐயருக்கும், சந்திரம்மாளுக்கும் 30.7.1886ல் முதல் குழந்தையாகப் பிறந்தார் முத்துலட்சுமி. பெண்கள் மீதான சமூகக் கட்டுப்பாடுகள் அதிகமாக இருந்தச் காலகட்டத்தில் அவர் பிறந்தார்.

கட்டுப்பாடுகளையும் , சமூகத் தடைகளையும் பொருட்படுத்தாமல், முத்துலட்சுமி தனது அறிவுத்திறனாலும், உறுதியான மனப்பான்மையினாலும் முன்னேறினார். சாதி மற்றும் பாலின வேறுபாடுகள் அவரது வளர்ச்சிக்குத் தடையாக இருக்க அவர் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. கல்வியின்மீது அவர் காட்டிய ஆழ்ந்த ஆர்வத்தையும் ஆர்வமிக்க மனநிலையையும் உணர்ந்த அவரது தந்தை, அவருக்குச் சிறந்த கல்வியை வழங்க முடிவுசெய்தார்.

சிறு வயதிலிருந்தே அவரது கூர்மையான புத்திசாலித்தனமும், பாடங்களை விரைவாகக் கற்றுக் கொள்ளும் திறனும், பள்ளிக் கல்வியில் அவர் சிறந்து விளங்க காரணமாக அமைந்தன. தந்தை நாராயணசாமி வீட்டிலேயே இருந்து பாடங்களைக் கற்பித்து வந்தார். பதிமூன்றாம் வயதில், ஆண்கள் கல்வி கற்கும் பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை படித்துத் தேர்ச்சி பெற்றார். அதன் பின்னர், தந்தையார் ஒரு ஆசிரியரை வீட்டிற்கு அழைத்து, முத்துலட்சுமி தனிப்பட்ட முறையில் கல்வி கற்க ஏற்பாடு செய்தார். தொடர்ந்து மெட்ரிக்குலேஷன் தேர்வை எழுதி வெற்றிகரமாகத் தேர்ச்சி பெற்றார்.

உயர்கல்வி பெற வேண்டுமென்ற கனவைத் தைரியமாகத் துரத்திய ஒரு பெண்ணாக இருந்ததால், பழமைவாத சிந்தனைகளில் ஊறிய சமூகவெளியில் மறைமுகமான எதிர்ப்புகளையும் அவமதிப்புகளையும் அவர் சந்திக்க வேண்டியிருந்தது. அபாரமான கல்விச் சாதனைகள் இருந்தபோதிலும், பெண் என்ற காரணத்தால் மகாராஜா கல்லூரி ஆரம்பத்தில் அவரது விண்ணப்பத்தை நிராகரித்தது. ஆனால் பெண்கல்வியின் அவசியத்தை உணர்ந்து, முன்னேற்றச் சிந்தனையுடன் செயல்பட்டு வந்த புதுக்கோட்டையின் ராஜாவான மார்த்தாண்ட பைரவத் தொண்டமான் தலையிட்டு, அந்தக் கல்லூரியில் முத்துலட்சுமியைச் சேர்க்க வற்புறுத்தினார். இதன் மூலம் தனது காலத்தில் நிலவிய ஆணாதிக்கச் சிந்தனைகளையும் சமூகப் பாகுபாடுகளையும் உடைத்தெறிந்த முத்துலட்சுமி, ஆண்களுக்கே ஒதுக்கப்பட்டிருந்த புதுக்கோட்டை மகாராஜா கல்லூரியில் சேர்க்கப்பட்ட முதல் பெண்ணாகி, இந்தியக் கல்வி வரலாற்றில் ஒரு மறக்கமுடியாத மைல்கல்லை நாட்டினார்.

மருத்துவப் படிப்பு

இளங்கலைப் படிப்பை முடித்த பின்னர், 1907 ஆம் ஆண்டில் மெட்ராஸ் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். அந்தக் கல்லூரியில் படித்த முதல் பெண் முத்துலட்சுமி தான் . அவருடைய அர்ப்பணிப்பும், செயல்திறனும், மெட்ராஸ் அரசினர் பெண்கள் மற்றும்

குழந்தைகள் நல மருத்துவமனையின் மூத்த பேராசிரியரும் அறுவைச் சிகிச்சை நிபுணருமான கர்னல் கிப்ஃபோர்டின் கவனத்தை ஈர்த்தது. 1912ல் முத்துலட்சுமி மருத்துவப் பட்டம் பெற்றார். இதைத் தொடர்ந்து, தென்னிந்தியாவிலேயே மருத்துவப் பட்டம் பெற்ற முதல் பெண்மணி என்ற சாதனையை அங்கீகரிக்கும் வகையில், கர்னல் கிப்ஃபோர்ட் அவரை ஹவுஸ் சர்ஜனாக நியமித்தார். இதற்கு முன்பு அந்த மருத்துவமனையில் எந்தப் பெண்ணும் அந்தப் பதவியை வகித்ததில்லை.1913 ஆம் ஆண்டு, சுப்பலக்ஷ்மி அம்மாளின் விதவைகளுக்கான பிராமணர் விடுதியில் குடியிருப்பு மருத்துவராக (ரெசிடென்ஷியல் டாக்டர்) மற்றொரு பொறுப்பையும் ஏற்றார்.

திருமணம்

மருத்துவக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோது, முத்துலட்சுமியின் தந்தை அவரைத் திருமணம் செய்துகொள்ள வற்புறுத்தினார் . ஆனால் முத்துலட்சுமி இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. "திருமணம் செய்ய மாட்டேன்" என்ற உறுதியுடன் இருந்த அவர், பல வற்புறுத்தல்களைத் தொடர்ந்து சம்மதித்தார். முத்துலட்சுமியை மணப்பதற்காக டாக்டர் சுந்தரரெட்டி முன்வந்தார். சுந்தரரெட்டி சென்னை மாகாண முதல்வராக இருந்த சுப்பராயலு ரெட்டியின் சகோதரி மகன், விசாகப்பட்டினத்தில் டாக்டராகப் பணியாற்றியவர். லண்டன் சென்று எம்.ஆர்.சி.எஸ் படித்த முதல் இந்தியர். முத்துலட்சுமி அவரிடம்,

"நீங்கள் எனக்குச் சமமான மரியாதையை வழங்க வேண்டும். என் விருப்பங்களுக்கு நீங்கள் இடையூறு செய்யக்கூடாது." என்று கூறினார்.

டாக்டர் சுந்தரரெட்டி இதற்கு ஒப்புக் கொண்டதால், 1914 ஆம் ஆண்டு ஏப்ரலில் பிரம்மசமாஜ முறைப்படி அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள். திருமணத்திற்குப் பிறகு, டாக்டர் ரெட்டி புதுக்கோட்டை அரசு மருத்துவமனையின் தலைமை மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றினார்; முத்துலட்சுமியும் அவருடன் இணைந்து தனது மருத்துவப் பணியைத் தொடர்ந்தார். இவர்களுக்கு இரண்டு மகன்கள் பிறந்தனர். 1925-ல் முத்துலட்சுமி மேல்படிப்புக்காகக் கணவர், குழந்தைகளுடன் லண்டன் சென்றார்.

1926-ல் பாரிஸில் 43 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட அகில உலகப் பெண்கள் மாநாட்டில் இந்தியாவின் சார்பில் முத்துலட்சுமி ரெட்டி கலந்து கொண்டார். பெண்களுக்கான சம உரிமை, இளவயது திருமணம், விதவை மறுமணம் குறித்துப் பேசினார்.

இலக்கிய ஆர்வம்

முத்துலட்சுமி ரெட்டி தமிழிசை இயக்கம், தமிழ் வளர்ச்சி, தமிழாசிரியர்களின் ஊதிய உயர்வுப் போராட்டத்தில் பங்காற்றினார். மகாகவி பாரதியார் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்தியா இதழில் கட்டுரைகள் எழுதினார். இந்திய மாதர் சங்கம் நடத்திய பெண்களுக்கான 'ஸ்திரீ தருமம்' என்னும் மாத இதழின் ஆசிரியராக இருந்தார்.

இந்திய மாதர் சங்கம் *(Women's Indian Association – WIA)*

கல்லூரி காலத்தில் சரோஜினி நாயுடுவை சந்தித்து, பெண்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளத் தொடங்கினார் முத்துலட்சுமி. இது அவரது வாழ்க்கையில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியது. 1917 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்திய மாதர் சங்கத்தின் *(Women's Indian Association – WIA)* ஆரம்ப உறுப்பினர்களில் ஒருவராக அவர் ஆனார். WIA-வின் முக்கிய உறுப்பினர்களில்அன்னிபெசண்ட், மார்கரெட்கசின்ஸ்போன்றோர்குறிப்பிடத்தக்கவர்களாக இருந்தனர். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி இந்தச் சங்கத்துடன் கொண்டிருந்த பிணைப்பும், அதன் மூலம் ஆற்றிய சமூகச் சேவைகளும் மிகவும் குறிப்பிடத்தக்கவை.

முத்துலட்சுமி ரெட்டியின் இந்திய மாதர் சங்கம் *(WIA)* சம்பந்தப்பட்ட முக்கியப் பங்களிப்புகள் :

1. ஸ்தாபக உறுப்பினர்: 1917-ல் இந்திய மாதர் சங்கம் தொடங்கப்பட்டபோது, அதன் ஆரம்பகால உறுப்பினராகவும், பின்னர்ப் பல ஆண்டுகள் அதன் தலைவராகவும் பணியாற்றினார்.

2. 'ஸ்த்ரீ தர்மம்' இதழ் ஆசிரியர்: இந்தச் சங்கத்தின் அதிகாரப்பூர்வ வெளியீடான 'ஸ்த்ரீ தர்மம்' *(Stree Dharumam)* என்ற மாத இதழின் ஆசிரியராக 1931 முதல் 1940 வரை பணியாற்றினார்.

3. தேவதாசி ஒழிப்புப் போராட்டம்: தேவதாசி முறையை ஒழிப்பதற்கான சட்டப் போராட்டத்தை முன்னெடுத்தார். இதற்காகத் தமிழ்நாடு முழுவதும் பொதுக் கூட்டங்களை நடத்தினார்.

4. அவ்வை இல்லம் *(Avvai Home)*: ஆதரவற்ற பெண்களுக்காக 1930-ல் 'அவ்வை இல்லத்தை' நிறுவினார்.

5. புற்றுநோய் மருத்துவமனை: 1925-ல் தனது சகோதரியை புற்றுநோயால் இழந்த பிறகு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவமனை என்ற கனவை இந்திய மாதர் சங்கத்தின் உதவியுடன் நனவாக்கினார். 1954-ல் அடையாறு புற்றுநோய் நிறுவனத்தை *(Cancer Institute)* நிறுவினார்.

6. சட்டமன்ற உறுப்பினர் : பிரிட்டிஷ் இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினராக 1927 இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1926-30 வரை இந்தப் பதவியில் நியமிக்கப்பட்டார். உலகின் முதல் பெண் துணைச் சட்டமன்றத் தலைவர் என்ற பெருமையையும் அவர் பெற்றார்.

சுதந்திரப் போராட்ட வீராங்கனையாக ஆற்றிய பங்களிப்பு

இந்திய சுதந்திரப் போராட்டம் டாக்டர் முத்துலட்சுமயின் உள்ளத்தில் ஏற்படுத்திய தாக்கத்தால் மகாத்மா காந்தியின் ஆற்றல்மிக்கத் தலைமைத்துவத்தைப் பின்பற்றி,

நாட்டின் விடுதலைக்காகக் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கினார். காலனிய ஆட்சியிலிருந்து இந்தியாவை விடுவிக்கத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்தார். 1932 ஆம் ஆண்டு, டாக்டர் முத்துலட்சுமி, காந்தியுடன் இணைந்து லண்டனில் நடைபெற்ற மூன்றாவது வட்டமேசை மாநாட்டில் (Third Round Table Conference) இந்தியாவின் சார்பில் பங்கேற்று பெரும் கவனத்தைப் பெற்றார். பின்னர், 1934 ஆம் ஆண்டு, சிகாகோவில் நடைபெற்ற முதல் சர்வதேச மாநாட்டிலும் பங்கேற்றார்.

சட்டமன்ற உறுப்பினராக அவர் ஆற்றிய பணிகள்

சட்டமன்றத்தில் அவர் ஆற்றிய சேவைகளையும், சாதனைகளையும் முழுமையாக ஆவணப்படுத்தும் வகையில் எழுதப்பட்ட நூலாகத் அவரது "My Experience as a Legislator" (ஒரு சட்டமன்ற உறுப்பினராக எனது அனுபவங்கள்) என்ற நூல் திகழ்கிறது .

சட்டமன்ற உறுப்பினராக அவர் நிகழ்த்திய மிகச் சிறப்பான சாதனையாக, சமூகத்தில் நீண்ட காலமாக நிலவி வந்த தேவதாசி முறையை ஒழிக்கும் தீர்மானத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியதையே குறிப்பிடலாம். இந்த மசோதாவே 1947 சென்னை தேவதாசிச் சட்டம் என்ற பெயரில் சட்டமானது. இதன் மூலம் தேவதாசிகள் திருமணம் செய்து கொள்ளச் சட்டப்படி உரிமை கிடைத்தது.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலனை முன்னிலைப்படுத்தி, அவர்களுக்கெனச் சிறப்பு மருத்துவமனை அமைக்க வேண்டும் என்ற தீர்மானத்தையும் அவர் முன்வைத்து நிறைவேற்றினார்.

அதன் பயனாகத் திரிப்ளிகேனில் உருவான கஸ்தூர்பா மருத்துவமனை, அவரது சமூக அக்கறைக்கும் தியாகப் பணிக்கும் நிலையான நினைவு சின்னமாக விளங்குகிறது.

மேலும், மாணவர்களின் உடல்நலத்தைப் பாதுகாக்கும் நோக்கில், அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் முறையான மருத்துவப் பரிசோதனை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் சுரண்டலைத் தடுக்கும் வகையில், விபச்சார நிலையங்களையும் அநாகரிகக் கடத்தலையும் ஒழிக்கும் மசோதாவை அவர் சட்டமாக்கினார். இதன் தொடர்ச்சியாக, பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாதுகாக்கும் மீட்பு இல்லம் ஒன்றும் அவரது முயற்சியால் தொடங்கப்பட்டது.

திருமணத்திற்கான சட்டபூர்வ வயதை உயர்த்த வேண்டும் என்ற கருத்தை உறுதியாக முன்வைத்த அவர், பெண்களின் அடிப்படை தேவைகளைக் கருத்தில் கொண்டு பெண்களுக்கான கழிப்பிடங்கள் அமைப்பதில் முக்கியப் பங்காற்றினார். குடிசைப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களின் நலனை கருத்தில் கொண்டு, அவர்களுக்கான மருத்துவ வசதிகளை மேம்படுத்தும் திட்டங்களையும் அவர் முன்னெடுத்தார்.

சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக இருந்த காலத்தில், எட்டாம் வகுப்பு வரை சிறுமிகளுக்கு இலவசக் கல்வி வழங்கும் திட்டத்தை அவர் நடைமுறைப்படுத்தினார். அதோடு, ஏழை குடும்பங்களைச் சேர்ந்த சிறுமிகளுக்கான உயர்நிலை கல்விக் கட்டணங்களைக் குறைக்க அவர் பாடுபட்டதுடன், வயது வந்த பெண்களுக்குக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களுக்கு மானியங்களைப் பெற்றுத் தந்தார்.

அவ்வை இல்லம்

அவ்வை இல்லத்தின் தோற்றமே ஒரு மனதைத் தொடும் கதையாகும். தேவதாசி முறை ஒழிக்கப்பட்ட பின்னர், 1930ஆம் ஆண்டு ஒரு மாலை நேரத்தில் மூன்று இளம் பெண்கள் டாக்டர் ரெட்டியின் இல்லத்தை நாடி வந்தனர். அவர்களை ஏற்றுக்கொள்ள எந்த விடுதியும் முன்வரவில்லை; உறவினர்களும் கை கொடுக்கவில்லை. பாதுகாப்பும் புகலிடமும் தேவைப்பட்ட நிலையில், இயல்பான வாழ்க்கையை வாழும் ஆசையுடன் அவர்கள் டாக்டர் ரெட்டியிடம் அடைக்கலம் தேடி வந்தார்கள். அப்போது நேரம் இரவு 9 மணி. அது உடனடி செயல்பாடு தேவைப்பட்ட முக்கியமான தருணம். இந்தச் சவாலை டாக்டர் ரெட்டி தயக்கமின்றி ஏற்றுக் கொண்டு, முழு அர்ப்பணிப்புடன் பெண்களின் நலனுக்காகச் செயல்பட்டார். அவரது சொந்த இல்லத்திலேயே 'அவ்வை இல்லம்' உருவாக்கப்பட்டது. காலப்போக்கில் அந்த மூன்று பெண்களில் ஒருவர் மருத்துவராகவும், ஒருவர் ஆசிரியராகவும், மற்றொருவர் செவிலியராகவும் உயர்ந்து, சமூகத்தில் தங்களுக்கான அடையாளத்தை ஏற்படுத்திக் கொண்டனர் . தற்போது, அவ்வை இல்லத்தில் ஒரு பள்ளியும், ஆசிரியர் பயிற்சி நிலையமும் செயல்பட்டு வருகிறது. பொருளாதாரத்தில் பின்தங்கிய பள்ளி மாணவிகளுக்கும், பெண்களுக்கும் உதவும் வகையில் இந்த நிறுவனம் தொடர்ந்து சேவையாற்றி வருகிறது.

அடையார் புற்றுநோய் மருத்துவமனையின் துவக்கம்

1922ல் தனது சகோதரிக்கு புற்றுநோய் வந்திருப்பதை அறிந்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அதிர்ந்து போனார். அந்தக் காலகட்டத்தில் இருந்த சிகிச்சைகளை வழங்கியும்கூட, அடுத்த ஆண்டே அவரது சகோதரி இறந்துபோனார். நாட்டிலேயே முதல் பெண் மருத்துவர், சட்டமன்ற உறுப்பினர் எனச் சாதனை படைத்துக் கொண்டிருந்தாலும், இந்தச் சம்பவத்திற்குப் பிறகு புற்றுநோய் சிகிச்சைக்கெனத் தனியாக ஒரு மருத்துவமனையைத் துவங்க வேண்டும் என்பதுதான் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் ஒரே கனவாக இருந்தது. இதன் முதற்கட்டமாக இந்தியப் பெண்கள் அமைப்பின் சார்பில் 1949ல் புற்றுநோய் நிவாரண நிதி என்ற நிதி திரட்டலைத் துவங்கினார் முத்துலட்சுமி ரெட்டி.

தொடர்ச்சியான முயற்சிகளால் பிரதமர் ஜவஹர்லால் நேருவால் 1952ல் அடிக்கல் நாட்டப்பட்டு, 1954 ஜூன் மாதம் கூரைவேய்ந்த ஒரு கட்டடத்தில் 12 படுக்கைகளுடன் செயல்படத் துவங்கியது அடையாறு புற்றுநோய் மருத்துவமனை. தென்னிந்தியாவில் புற்றுநோய்க்கெனத் தனியாக ஒரு மருத்துவமனை துவங்கப்படுவது அதுதான் முதல் முறை.டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டியின் மகனான டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தியும்,

டாக்டர் வி. சாந்தாவும் இந்த மருத்துவமனையின் தரத்தை உயர்த்த அயராது உழைத்தனர். டாக்டர் சாந்தா, முத்துலக்ஷ்மியை "அன்னை" எனக் குறிப்பிட்டதோடு, அவரது மகனான டாக்டர் கிருஷ்ணமூர்த்தியை தன் வழிகாட்டியாகவும் கருதினார்.

விருதுகளும் அங்கீகாரங்களும்

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஒடுக்கப்பட்ட பெண்கள், குழந்தைகள் மற்றும் பின்தங்கிய சமூகங்களில் உள்ளவர்களின் மேம்பாட்டிற்காக மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டும் விதமாக , 1947 ஆம் ஆண்டு டெல்லி செங்கோட்டையில் ஏற்றப்பட்ட முதல் தேசிய கொடியில் அவரது பெயர் பொறிக்கப்பட்டிருந்தது.

தமிழ்நாடு அரசு, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாட்டின் வெற்றிகரமான பெண் மருத்துவர்களில் ஒருவரான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 30ஆம் தேதியை மருத்துவமனை தினமாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்துள்ளது.

கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தைகளின் நலனுக்காகத் தமிழ்நாடு அரசு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நலத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

அவரது சிறப்பான சேவைகளைப் பாராட்டும் விதமாக, 1956 ஆம் ஆண்டு இந்தியாவின் மூன்றாவது உயரிய குடியியல் விருதான பத்ம பூஷண் விருது அவருக்கு வழங்கப்பட்டது.

இந்தியாவின் முதல் பெண் மருத்துவர்களில் ஒருவரும், நாட்டின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் 133வது பிறந்தநாளை நினைவுகூர்ந்து கூகுள் டூடில் அவரைச் சிறப்பித்தது.

மறைவு

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி 1968 ஆம் ஆண்டு ஜூலை 22ஆம் நாள் மறைந்தபோது அப்போதைய இந்தியப் பிரதமராக இருந்த இந்திராகாந்தி வானொலியில் "டாக்டர் ரெட்டியும் டாக்டர் சரோஜினி நாயுடுவும் இல்லாமற்போயிருந்தால் நாம் இன்று இத்தகைய உயர்பதவிகளில் அமர்ந்திருக்க இயலாது" எனப் பாராட்டினார்.

கீழ்வரும் மிகச் சிறந்த அஞ்சலியைத் திருவனந்தபுரம் பல்கலைக்கழக மகளிர் சங்கம் செலுத்தியது.

"திருவனந்தபுரம் பல்கலைக்கழக மகளிர் சங்கம், பத்மபூஷண் டாக்டர் முத்து லட்சுமி ரெட்டியின் மறைவிற்கு ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. சமூக அரசியல் தளங்களில் இந்திய மகளிரின் உயர்வுக்குப் போராடிய முதல் பெண்ணாகிய அவருக்கு எங்கள் மகளிர் சங்கம் தன் அஞ்சலியைச் செலுத்துகிறது. இந்தியப் பெண்களின் ஓட்டுரிமைக்காகப் போராடி வென்றதைப் பாராட்டிப் பதிவு செய்யவும் விரும்புகிறது.30 ஆண்டுகளுக்கும் மேலாக அவர் இந்திய மகளிர் சங்கத்தின் தலைவராக இருந்திருக்கிறார். முழுமையான ஈடுபாட்டுடனும் நேர்மையுடனும் தன்னுடைய நாட்டின் சகமனிதர்களுக்கு அவர் செய்த சேவைக்கும் முழுமையான சிறந்த வாழ்க்கையை வாழ வாய்ப்பளித்த இறைவனுக்கும் நன்றி கூறுகிறோம். அவருடைய ஆத்மா சாந்தியடையட்டும்." இவ்வாறு அவருக்குப் புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

முடிவுரை

பெண்கள் மீது நடத்தப்படும் ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்களில் முதன்மையானவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி. தமிழ்நாட்டின் முதல் பெண் மருத்துவரான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, பெண்களின் முன்னேற்றம், சாதி மறுப்பு, சமூகச் சீர்திருத்தம், விடுதலைப் போராட்டம் போன்ற பல துறைகளில் தனது பங்களிப்பினை திறம்படச் செய்தார். அவரது வாழ்க்கை, விடாமுயற்சி, தன்னம்பிக்கை, அர்ப்பணிப்பபு ஆகியவற்றின் சிறந்த எடுத்துக்காட்டாகும். மருத்துவம், பெண்கள் சுகாதாரம் மற்றும் சமூக நீதிக்காக அவர் செய்த சேவைகள் பலருக்கு ஊக்கமாக அமைந்துள்ளன. ஒதுக்கப்பட்ட மக்களின் நலனுக்காகத் தொடர்ந்து பாடுபட்ட அவரது சேவை மனப்பான்மை இந்திய சமூகத்தில் நிலையான மாற்றங்களை ஏற்படுத்தியோடு மட்டுமல்லாமல் , ஒரு தனிநபர் நினைத்தால் சமூகத்தில் பெரிய மாற்றத்தை உருவாக்க முடியும் என்பதையும் நிரூபிக்கிறது.s

ஒரம் காயும் முன்னே
இதயத்தின் நிலவறையை
எல்லாப் பக்கமும் பூட்டிவிட்டு
எங்கே ஓடுகிறாய் நீ...

வீசியெறிந்த
அந்த ஒரு துளிப் பிரியம்
இன்னமும் என் உள்ளங்கையில்
உயிரோடு துடித்துக்கொண்டிருக்கிறது.
உனக்குத் தெரியுமா...

புறக்கணிப்பின் திரைகளுக்குப் பின்னால்
இங்கே ஒரு ஜீவன் மூச்சுத் திணறிச் சாகிறது.
நூறு ஜன்னல்கள் திறந்திருக்கும்
இந்த மகா பிரபஞ்சத்தில்
நீ சாத்திய அந்த ஒரே ஒரு கதவுதான்
என் உலகத்தையே இருட்டாக்கிப் போனது.

நான் கத்துகிறேன்... கதறுகிறேன்...
ஆயிரம் கைகள் கொண்டு
உன் மௌனத்தின் சுவரை இடிக்கிறேன்.
ஆனால் உனக்குக் கேட்காது.
ஏனெனில்,
நீ ஓடிக்கொண்டிருப்பது – என் குரல் எட்டாத
வன்மத்தின் திசையிலல்லவா?

விளக்கத்தை
யாசகமாகக் கேட்டால் கூட தராமல்
பிணத்தைச் சுற்றித் தையல் போடுவது போல
எல்லாப் பக்கமும் தைத்துவிட்டுப் போகிறாய்.

இதயம் கல்லாகி இறங்கும் பாரம்
மண்டை ஓட்டின் இடுக்கெங்கும்
உறைந்து வழியும் கூர்வாள் வலி...
ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்குத் தரும்
மிகப்பெரிய தண்டனை மரணமல்ல;
பதில் சொல்லாமல்

தொடர்புகளைத் துண்டித்துவிட்டு ஓடுவதுதான்.

நீ அடைத்த கதவுக்குப் பின்னால்
இப்போது நான் தனி...
வெறும் தனிமையல்ல,
உன் ஞாபகங்கள் தின்னக் காத்திருக்கும்
ஒரு பசித்த மிருகத்தின் முன்னே
கட்டப்பட்டிருக்கும் பலியாடு நான்.

அர்ஷா

சம்பாத்தியம்

அன்னபூரணி தண்டபாணி

அபிராமி போய்விட்டாள். அவளுக்கு வயது ஒன்றும் அதிகமில்லை. மருத்துவத் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்த இந்த நவீன யுகத்தில் அறுபத்தி ஐந்து வயதெல்லாம் சாகும் வயதா என்ன? இத்தனைக்கும், ஒரு ஜுரம் தலைவலி என்று ஒரு நாளும் அவள் படுத்ததே இல்லை. அப்படிப்பட்டவளுக்கு திடீரென்று இப்படி ஒரு முடிவு வருமென்று யாராவது எதிர்பார்த்தார்களா என்ன?

"தலவலி ஜொரம்னு எதுவும் வந்து அவள படுத்தல.. நோய் நொடின்னு வந்து அவ படுக்கல.. குளிச்சி கும்பிட்ட கையோட போய்ட்டா! புண்ணியவதி!"

"ஆமாமாம்! இப்டி ஒரு நல்ல சாவு யாருக்கு குடுத்து வெக்கும்.. எல்லாம் அவ நல்ல மனசுக்கு கெடச்ச பலாபலன்தான்!"

கூடத்தில் கூடியிருந்த அக்கம் பக்கத்துப் பெண்கள் பேசிக் கொண்டது சபாபதியின் காதில் தெளிவாக விழுந்தது.

பெயர் பெற்ற தனியார் வங்கி ஒன்றில் பெரிய பதவியில் இருந்து ஓய்வு பெற்றவர் சபாபதி. ஓய்வு பெற்றுவிட்டாலும் இன்னும் அவருடைய நிறுவனத்தில் அவரை அறிவுரை செய்யும் போர்ட் மெம்பரில் ஒருவராக வைத்துக் கொண்டிருந்தார்கள். அவருடைய மனைவிதான் இந்த அபிராமி. இல்லத்தரசி.

அபிராமி அதிகம் படித்தவளில்லை. அந்த காலத்து எஸ்எஸ்எல்சி! அதுவும் ஃபெயில். தாயில்லாப் பெண்ணை அவளுடைய அக்காள் கணவர் இவ்வளவு படிக்க வைத்ததே பெரிய விஷயம்தான்.

அவளுக்கு எப்போதடா இருபது வயதாகும். ஒருவனிடம் பிடித்துக் கொடுத்து தன் கடமையை முடித்து விடலாம் என்று காத்துக் கொண்டிருந்தார், அவளுடைய அக்காள் கணவரான சுப்பிரமணி என்கிற சுப்புணி.

நல்ல வேலையில் நல்ல சம்பளத்துடன் இருக்கும் நல்ல குடும்பத்து மணமகனான சபாபதி கிடைத்ததும் அவனுக்குத் தன் மச்சினி அபிராமியைக் கட்டி வைத்து நல்ல பெயர் எடுத்துக் கொண்டார் சுப்புணி.

"என் மச்சினிக்கு பெரிசா படிப்பில்லன்னாலும் தையல் எம்ப்ராய்டரில்லாம் கத்துண்டிருக்கா. கொழந்தேளுக்கு கௌவுன் பாவாடை பெரியவாளுக்கு ரவிக்கைல்லாம் நன்னா தைப்பா. ஆத்து காரியமெல்லாம் நன்னா பண்ணுவா! பெரியவா கிட்ட அன்பா நடந்துப்பா! அவ எதாவது தப்பு பண்ணினா பெரிய மனசு பண்ணி அவள மன்னிச்சிடுங்கோ. எடுத்துச் சொன்னா கேட்டுப்பா! பெத்தவா இல்லன்னு என் ஆம்படையாள் தன் தங்கைக்கு கொஞ்சம் செல்லம் கொடுத்து வளத்திருந்தாலும் அபிராமி ரொம்ப சமத்து பொண்ணு! ஏதோ என் சக்திக்கு உட்பட்டு என்னால முடிஞ்சத செஞ்சி இந்த கல்யாணத்த பண்ணியிருக்கேன்.. குத்தம் கொறயிருந்தா பெரியவா என்ன மன்னிக்கணும்.." என்று சபாபதியிடமும் அவருடைய பெற்றோரிடமும் அபிராமிக்கு சான்றிதழ் கொடுத்து தனக்கான நற்சான்றிதழையும் பெற்றுக் கொண்டார் சுப்புணி.

"இனி நீயாச்சு! அவனாச்சு! சண்ட போட்டுண்டு கண்ண கசக்கிண்டு வரதுக்கு நோக்கு அம்மா வீடுன்னு எதுமில்ல அபிராமி! புரியறதோன்னோ? ஏதோ சுப்புணி அத்திம்பேர் நல்ல மனசுக்கு ஒன்ன ரெண்டாந்தாரமா தானே கட்டிண்டுடாம, வேற கெழவன் யாருக்கும் ரெண்டாந்தாரமா கட்டி வெக்காம, பாத்து பாத்து நல்ல பையனா தேடி நோக்கு கட்டி வெச்சிருக்கார். பாத்து சமத்தா இருந்துக்கோ!" என்று பிறந்தகத்து பெரியவர்கள் அபிராமிக்கு அறிவுரை சொல்லி அனுப்பி வைத்திருந்தார்கள்.

அவளும் அவர்களின் அறிவுரைகளை மனதில் வைத்து அன்புடனும் பொறுமையுடனும் சபாபதியுடன் அழகாய் குடித்தனம் நடத்தி இரண்டு குழந்தைகளுக்குத் தாயானாள்.

மாமியார் மாமனாரிடம் பணிவாய் நடந்து கணவரிடம் பொறுமையைக் கடைபிடித்து இரண்டு குழந்தைகளிடம் அன்பையும் கண்டிப்பையும் அளவாய்ப் பொழிந்து எல்லாரிடமும் நற்பெயரெடுத்தாள் அபிராமி.

சபாபதிக்கு மனைவியின் மீது அபரிமிதமான அன்பு உண்டென்றாலும் அவள் அதிகம் படிக்கவில்லை என்ற குறை அவருக்கு இருக்கத்தான் செய்தது.

அதனால் அவளை மட்டம் தட்டிப் பேசுவார்.

"நோக்கென்ன தெரியும்? வாய மூடு!"

"இந்தாத்தில நாந்தான் சம்பாதிக்கறேன்! நீ என்ன சம்பாதிக்கற?"

"இதெல்லாம் ஒங்க சுப்புணி அத்திம்பேர் வாங்கிப் போடல! நா சம்பாதிச்சு வாங்கி போட்டது! புரியறதா?"

என்று அவளை மட்டம் தட்டிப் பேசுவார்.

இதையெல்லாம் கேட்டு ஆரம்பத்தில் அபிராமிக்கு அழுகையாய் வரும். பின்னர் அது அவளுக்குப் பழகிப் போயிற்று.

வீட்டுப் பெரியவர்கள் ஒருவர் பின் ஒருவராய் போய்ச் சேர்ந்து, பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாகி திருமணமாகி அவரவர் வாழ்க்கையைப் பார்த்துக் கொண்டு போன பின்னர், அவள் சும்மா இருக்கப் பிடிக்காமல் தனக்குத் தெரிந்த தையல் வேலையைச் செய்ய ஆரம்பித்தாள்.

எம்ராய்டரி கற்றிருந்ததால் தனக்குத் தெரிந்த பெண் ஒருத்தியின் தையல் கடையிலிருந்து ரவிக்கைத் துணி வாங்கி வந்து சமிக்கி மணி ஜர்தோசி வைத்து ரவிக்கைகளுக்கு டிசைன் செய்து தரும் வேலையைச் செய்ய ஆரம்பித்தாள்.

"இந்த வயசில நோக்கெதுக்கு இந்த வேண்டாத வேல?" என்று கிண்டலாகவும்,

"இதால அப்டி எவ்ளோ சம்பாதிச்சிட முடியும்ன்னு நெனக்கிற?" என்று ஏளனமாகவும்,

"என்னமோ இந்தாத்தில நீ சம்பாதிச்சி கொண்டு வந்துதான் நெறையணுமா? அந்த அளவுக்கு நா உன்ன நிர்கதியா வுட்டுட்டேன்னு எல்லார் கிட்டயும் நீ சொல்லிக்கதான் இப்டி பண்றியா? என்னைய எல்லாரும் தப்பா நெனக்கணுமா?" என்று கடுமையாகவும் சொல்லிப் பார்த்தார் சபாபதி.

ஆனால் அபிராமி,

"ஆத்தில சும்மா போரடிச்சிண்டு உக்காந்துடிருக்கறதுக்கு எதையோ பண்றேனே!" என்றும்,

"யார் என்ன சொன்னா என்ன? நீங்க என்ன நன்னா பாத்துக்கறேள்ன்னு இப்ப யார் நம்பணும்னு நீங்க எதிர் பாக்கறேள்! நீங்க நல்லவர்ன்னு நேக்கு தெரியும். நா உங்க பேர கெடுக்கறதுக்காக இதப் பண்ணலன்னு ஒங்களுக்கும் தெரியும்! அப்றம் மத்தவாளப் பத்தி நமக்கென்ன வந்தது?" என்றும் கூறி தன் வேலையைத் தொடர்ந்தாள்.

ஆரம்பத்தில் அந்தத் தோழியின் கடையிலிருந்து ரவிக்கைத் துணிகளை வாங்கி வந்து தன் வீட்டில் வைத்து தைத்துக் கொடுத்தாள். பின்னர் அவளுடைய கடைக்கே சென்று தைத்துக் கொடுத்துவிட்டு வரலானாள்.

இதற்காக தினமும் மூன்று அல்லது நான்கு மணி நேரங்கள் செலவிட்டாள். இதனால் அவள் பெரிதாகப் பணம் எதுவும் சம்பாதித்துவிடவில்லை என்றாலும் அது அவளுக்கு மிகுந்த புத்துணர்ச்சியைக் கொடுத்தது.

ஆனால் சபாபதிக்கு இது சுத்தமாகப் பிடிக்கவில்லை.

"இதால என்ன.. மாசம் ஒரு ஐயாயிரம் ரூபா சம்பாதிச்சிருப்பியா? இதுக்காக இப்டி ஓடம்ப வருத்திக்கணுமா?"

"ஒன்கிட்ட சக்கையாப் பிழிஞ்சி வேலய வாங்கிண்டு அவ ஒரு ரவிக்கைக்கு ஆறாயிரம் ஏழாயிரம்ன்னு வெச்சு லட்ச லட்சமா சம்பாதிக்கறா.. ஆனா ஒனக்கு

ஒண்ணும் தர மாட்டேங்கறா.. இது புரியாம நீ அவள ஒன் பெஸ்ட் ஃப்ரண்ட்டுன்னு சொல்லிண்டிருக்க.."

"வர வர ஒன் பிடிவாதத்துக்கு அளவில்லாம போறது!" என்றெல்லாம் சொல்லி அவளைத் தடுக்கப் பார்த்தார்.

அவளுடைய பிள்ளைகளும் கூட அவளை இந்தத் தையல் வேலையை விடச் சொல்லி வற்புறுத்தினார்கள்.

ஆனால் அபிராமி தனக்காகச் செலவு செய்யும் அந்த நான்கு மணி நேரத்தை யாருக்காகவும் எதற்காகவும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை.

அவள் தன் தையல் வேலையை மிகுந்த விருப்பத்துடன் செய்து வந்தாள்.

இந்த நிலையில் இன்று அவள் இறந்து போய் விட்டாள்.

'நல்ல வேளை! நா போய் அவ இருக்கணும்னு ஒரு நிலை வந்திருந்தா.. பாவம் அபிராமி! அவளுக்கு ஒண்ணும் தெரியாது! என் சேவிங்ஸ் இருக்குதான். ஆனா அத எப்டி செலவு செய்யறதுன்னு கூட தெரியாம முழிச்சிருப்பா.. எதுவும் தெரியாம இந்த ஒலகத்தில தன்னந்தனியா அவ நின்னிருந்தா அவ என்ன பண்ணியிருப்பாளோ! ஆண்டவன் அவள முன்னால கூட்டிண்டு போய் அவளுக்கு மிகப் பெரிய நன்மைய செய்திருக்கான்.. பூவோடும் பொட்டோடும் அவ நல்லபடியா போயிட்டா.. அவ இல்லாத வாழ்க்கை நன்னா இருக்காதுதான்! ஆனா என்னால அவ இல்லாம சமாளிக்க முடியற மாதிரி அவளால நா இல்லாம சமாளிக்க முடியுமாங்கறது சந்தேகம்தான்!' என்று தனக்குள் நினைத்துக் கொண்டார்.

அவள் போனது அவருக்கு வருத்தமாகத்தான் இருந்தது என்றாலும் அவருடைய கண்களிலிருந்து பெரிதாகக் கண்ணீர் எதுவும் வரவில்லை.

பெற்ற மகளும் மகனும் உட்பட வர வேண்டிய உறவினர்கள் எல்லாம் வந்தாயிற்று. ஆக வேண்டிய காரியத்தைச் செய்ய வேண்டுமென்று அவர்கள் ஒவ்வொன்றாய் ஆரம்பிக்க, திடீரென்று திபுதிபுவென்று பெண்களும் இளைஞர்களும் இளைஞிகளுமாய் நூற்றுக் கணக்கானோர் சபாபதியின் வீட்டு வாசலில் குழுமினார்கள்.

ஓவென்று ஓலமிட்டபடி வந்து அபிராமியின் உடலைப் பார்த்து ஒப்பாரி வைத்து அழுதார்கள்.

"அம்மா! இவ்ளோ சீக்ரம் போயிட்டீங்களே.. இனிமே எங்களுக்கெல்லாம் நல்ல வழி சொல்ல யார் இருக்கா.."

"உங்கள மாதிரி நல்லது சொல்ல யாரு இருக்காங்க மேடம்.."

"நீங்க இல்லாம இனிமே நாங்க என்ன பண்ணுவோம் மேடம்.." என்றெல்லாம் அவர்கள் அழுது புலம்பினார்கள்.

சபாபதிக்கும் அவர் மக்களுக்கும் அவர்கள் யாரென்றும் தெரியவில்லை. அவர்கள் எல்லாம் ஏன் இவ்வாறு அழுது புலம்புகிறார்கள் என்றும் புரியவில்லை.

அனைவரும் குழம்பித் தவித்தார்கள்.

சபாபதியின் மகள் மெதுவாக ஒரு பெண்ணை அழைத்து விவரம் கேட்டாள்.

அவள் சொன்னதைக் கேட்ட சபாபதிக்கும் அவர் மக்களுக்கும் மற்ற உறவினர்களுக்கும் அதிர்ச்சியாக இருந்தது.

"அம்மாதான் எங்களுக்கு ரெம்ப உதவி செஞ்சாங்க." என்று கோரசாக பதில் வந்தது.

"பண உதவியா?"

"பணம் இல்லங்க.. நா நாலு வீட்ல பத்து பாத்ரம் தேச்சிக்கினு ருந்தேன்.. அப்ப அம்மாதான் எனுக்கு புத்தி சொல்லி பூக்கட வெக்க உதவி செஞ்சாங்க.." என்றாள் ஒருத்தி.

"எம்பையன் பள்ளிக்கூடம் போவாம கெட்ட சகவாசம் பண்ணிகினு கெடந்தான்.. அப்ப கஞ்சா கேஸ்ல அவன போலீஸ்ல இட்டுனு போயிட்டாங்க.. அவன போலீஸ்ட்டேர்ந்து காப்பாத்தி.. வூட்டுக்கு இட்னு வந்து.. நல்லது எட்த்து சொல்லி புரிய வச்சாங்க.. இப்ப எம்மவன் மனுசனா ருக்கறதுக்கு காரணமே அம்மாதான்.." என்றாள் மற்றொருத்தி.

கூட்டத்தில் இருந்த இளைஞன் ஒருவன்,

"நா பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் பள்ளியில டீச்சரா இருக்கேன்.. எங்க பசங்களுக்கு பாடங்கள புரிஞ்சிக்கறதுல பல பிரச்சனைகள் வந்தது.. அப்ப மேடம்தான் வந்து பசங்களுக்கு பாடங்கள ஈசிய புரிஞ்சிக்கற மாதிரி சொல்லி குடுப்பாங்க.. எங்க பசங்களுக்கு படிக்க நிறைய புத்தகங்கள் மற்றும் தேவையான சாமான்களையும் வாங்கிட்டு வந்து குடுப்பாங்க.. எங்க பசங்களுக்கு எக்சாம் எழுதறதுக்கு கூட நிறைய நாள் உதவி செய்திருக்காங்க.." என்றான்.

"எங்க ஆதரவற்றோர் இல்லத்தில இருக்கற பெண்களுக்கு இலவசமா தையல் எம்ராய்டரி ரெண்டும் சொல்லி குடுத்து சொந்தமா தொழில் தொடங்க உதவியும் செய்திருக்காங்க.." என்றாள் ஒரு இளைஞி.

"அதே மாதிரி தையல் கத்துக்க முடியாதவங்களுக்கு அவங்களுக்கு என்ன செய்ய வருமோ அதையே நல்லா கத்துக்க வெச்சி அத வெச்சே அவங்கள வாழ்க்கையில முன்னேற பல உதவிகள் செய்திருக்காங்க. அப்டிதான் நா சமையல் கத்துகிட்டு மெஸ் ஆரம்பிச்சேன்.. ஆரம்பத்தில பத்து பேருக்கு சமையல் செய்து குடுத்த நா, இப்ப நூறு பேருக்கு சமையல் செய்து குடுக்கறேன்.. எனக்கு கீழ நாலு பேர் வேல செய்யறாங்க.." என்றான் ஒரு இளைஞன்.

"அபிம்மா இதச் செஞ்சாங்க.."

"அபிம்மா அதச் செஞ்சாங்க.."

ஒவ்வொருவரும் ஒவ்வொன்றாய் அடுக்கிக் கொண்டே போனார்கள்.

வந்திருந்த கும்பல் சொன்ன எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த சபாபதியின் உறவுக்காரப் பெண்மணி,

"ஹூம்! எல்லாரும் பணம் காசுதான் சம்பாதிப்பாங்க.. அபிராமி நல்ல மனசுக்கு நிறைய மனுஷாள சம்பாதிச்சிட்டா.. யார் யாருக்கோ நல்லது பண்ணி கூடை கூடையா புண்ணியத்த சம்பாதிச்சிட்டா.." என்று கண்ணீருடன் புலம்பியதைக் கேட்ட சபாபதிக்கு வாயடைத்துப் போயிற்று.

"என்ன.. மாசம் ஒரு ஐயாயிரம் ரூபா சம்பாதிச்சிருப்பியா? ஹூம்.." என்று அவர் அன்று கோபத்தில் கேட்ட வார்த்தைகள் இன்று அவர் காதுகளில் இடியாகத் தாக்கியதைப் போல உணர்ந்தார்.

அவருடைய கண்களிலிருந்து அனிச்சையாய் கண்ணீர் வழியத் தொடங்கியது.

தமிழ் என்னும் பீனிக்ஸ் பறவை

அ.திவ்யகுமாரி கண்ணம்மா
ஐயை உலக தமிழ் மகளிர் மன்றம்

தமிழ்நாட்டின் பல மேடைகளிலும், விவாதங்களிலும் இன்று ஒரு வரி மிகத் தவறாக மேற்கோள் காட்டப்பட்டு வருகிறது. அது, 'மெல்லத் தமிழினிச் சாகும்'. இந்தப் பாடலை பாடியது மகாகவி பாரதியார் என்பதால், அவரே தமிழைச் சபித்துவிட்டார் என்பது போலவும், தமிழின் எதிர்காலம் முடிந்துவிட்டது என்பது போலவும் ஒரு மாயை இங்கே பரப்பப்படுகிறது.

தமிழுக்காகவும், அதன் உயர்வுக்காகவும் தன் ஆயுள் முழுவதையும் அர்ப்பணித்த ஒரு கவிஞன், தன் தாய்மொழியைச் சாவச் சொல்வானா?

உண்மையில், பாரதி இந்த வரியைத் தன் கருத்தாகச் சொல்லவில்லை. மாறாக, ஆங்கில மோகத்தில் இருந்த ஒரு அதிகாரமிக்க அறிவற்றவன் தமிழை இழிவுபடுத்திச் சொன்னதைக் கேட்டு, கொதித்தெழுந்து பாடியதுதான் அந்தப் பாடல்.

பாரதியார் மீது சுமத்தப்பட்ட அந்த நூறாண்டு காலப் பழியைத் துடைக்கவும், அந்த வசைச் சொல்லுக்குப் பின்னால் இருக்கும் உண்மையான வரலாற்றுச் சம்பவத்தை காண்போம்.

பாரதி தமிழைச்சாகச்சொல்லவில்லை; சாகும் என்று சொன்னவனின் நாவடக்கத்தையே அவர் கேள்வி கேட்டார் என்பதே உண்மை!"

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் மொழி ஒரு திக்கற்ற நிலையில் இருந்தது. அன்று தமிழகத்தை ஆண்ட ஆங்கிலேய அரசு, தமிழை ஒரு 'Vernacular' (நாட்டுப்புற மொழி அல்லது கீழ்நிலை மொழி) என்றுதான் வகைப்படுத்தியிருந்தது.

படித்த தமிழர்கள் ஆங்கிலம் பேசுவதையே கௌரவமாகக் கருதினர். தமிழ்ப் புலவர்கள் வறுமையில் வாடினர்.

ஒருபுறம், தமிழ் மொழி தனித்து இயங்க முடியாது, அது சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தது (கிளை மொழி) என்று ஒரு சாரார் தீவிரமாக வாதிட்டனர். இதனால் தமிழின் தனித்தன்மை கேள்விக்குறியானது.

நவீன உலகிற்குத் தேவையான அறிவியல், புவியியல், மருத்துவம் போன்ற எந்தத் துறையிலும் தமிழில் புதிய நூல்கள் இல்லை. ஓலைச்சுவடிகளில் இருந்த பழைய இலக்கியங்கள்கூடப் பலருக்குத் தெரியாமல் கறையானுக்கு இறையாகிக் கொண்டிருந்தன.

இப்படித் தமிழ் மொழி தன் சொந்த மண்ணிலேயே அகதியாக இருந்த காலமது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், சென்னை பச்சையப்பன் கல்லூரியின் முதல்வராக பணியாற்றியவர் ஜான் ரோலோ *(John Rollo)*. சுமார் 27 ஆண்டுகள் அந்தப் பதவியில் இருந்தவர். ஒரு கல்லூரி ஆண்டு விழாவில் மாணவர்களிடையே உரையாற்றும்போது மிகக் கொச்சையாக ஒரு கருத்தை முன்வைத்தார்:

"Tamil is a dying language. It is a dead language of the future."

தமிழ் ஒரு சாகின்ற மொழி. எதிர்காலத்தில் அது ஒரு இறந்த மொழியாகவே கருதப்படும்.

நவீன கால மாற்றங்களுக்குத் தமிழ் ஈடுகொடுக்காது என்றும், அதனால் அது லத்தீன் போல வழக்கொழிந்துவிடும் என்றும் அவர் கணித்தார். ஒரு புகழ்பெற்ற கல்லூரியின் முதல்வரே இவ்வாறு பேசியது, அன்றைய படித்த வர்க்கத்தினரிடையே "ரோலோ சொன்னது சரிதான் போல" என்ற தாழ்வு மனப்பான்மையை வளர்த்தது.

இந்தச் செய்தியை அறிந்த பாரதியார், தனது "தமிழ்" என்னும் கவிதையில் ரோலோவை ஒரு 'அறிவற்றவர்' என்ற பொருளில் "பேதை" என்று சாடினார்.

"ஒரு அன்னியன் வந்து என் தாயை (தமிழை)ச் சாவாய் என்று சொல்வதா?" என்று சீறினார். அந்தச் சீற்றத்தின் விளைவாகப் பிறந்ததே இந்தப் பாடல் வரிகள்:

''மெல்லத் தமிழினிச் சாகும் - அந்தப்
மேற்கு மொழிபெயர்த்தார் சொல்லும்
மிசை"
"என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ!
இந்த வசை எனக்கெய்திட லாமோ?"

பாரதியார் ரோலோவின் பெயரை நேரடியாகக் குறிப்பிடாமல், அவரை "பேதை" (அறிவற்றவன்) என்று அழைத்தார். "மேற்கு

மொழிபெயர்த்தார்" என்று மேற்கத்திய அதிகாரிகளைச் சுட்டிக்காட்டிய பாரதியார், "இந்த வசைச் சொல்லைக் கேட்டுக்கொண்டிருக்கும் நிலைக்குத் தமிழன் தள்ளப்பட்டுவிட்டானே" என்று வேதனைப்பட்டார்.

வெறும் கோபத்தோடு மட்டும் பாரதியார் நின்றுவிடவில்லை. ரோலோ போன்றவர்கள் ஏன் அப்படிச் சொல்கிறார்கள் என்பதையும் அவர் சிந்தித்தார்.

ரோலோவைத் திட்டுவதை விட, அந்த நிலைக்குத் தமிழைத் தள்ளிய தமிழர்களைத்தான் பாரதியார் அதிகமாகச் சாடினார். அவர் தனது கட்டுரைகளில் மூன்று முக்கியத் தரப்பினரைப் பட்டியலிடுகிறார்:

ஆங்கில மோகம் கொண்ட 'மேல்தட்டு' தமிழர்கள்: வீட்டில் மனைவியிடமும் குழந்தைகளிடமும் கூட ஆங்கிலத்தில் பேசி, தமிழைச் சாமான்ய மக்களின் மொழியாக (Vernacular) ஒதுக்கியவர்களைப் பாரதியார் கடுமையாகக் கண்டித்தார்.

பழைய பஞ்சாங்கப் பண்டிதர்கள் தமிழை வெறும் பக்திப் பாடல்களுக்கும், கடினமான இலக்கணங்களுக்கும் மட்டுமே பயன்படுத்தி, கால மாற்றத்திற்கு ஏற்ப மாற்றாதவர்களைச் சாடினார்.

மொழிபெயர்ப்புத் தட்டுப்பாடு "உலகில் புதிய கண்டுபிடிப்புகள் எவை நிகழ்ந்தாலும் அவை உடனுக்குடன் தமிழில் வரவேண்டும். அப்படி வராதவரை ரோலோ போன்றவர்கள் நம்மை இகழ்வது தொடரத்தான் செய்யும்" என்று எச்சரித்தார்.

தமிழர்களிடம் அறிவுச்செல்வங்கள் இல்லை என்பதுதான் ரோலோவின் துணிச்சலுக்குக் காரணம் என்பதை உணர்ந்து, தமிழை மீட்டெடுக்கப் பாரதியார் சில அதிரடிக் கட்டளைகளைப் பிறப்பித்தார்:

எட்டுத்திக்கும் செல்வீர்"வெறும் பழைய பெருமைகளைப் பேசிக் கொண்டிருக்காதீர்கள். எட்டுத் திக்கிலும் உள்ள அறிவுச் செல்வங்களைத் தமிழுக்குக் கொண்டு வாருங்கள்."

மொழிபெயர்ப்புத் தீவிரம்: "பிற நாட்டுச் சாத்திரங்கள் (Science) மற்றும் கலைகளைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும்."

செந்தமிழ் உயர்வு: அக்காலத்தில் ஒரு சாரார், "சமஸ்கிருதமே உயர்ந்த மொழி, தமிழ் அதிலிருந்து கிளைத்தது" என்று வாதிட்டனர். இதற்குப் பதிலடியாக பாரதியார் ஒரு நுட்பமான அணுகுமுறையைக் கையாண்டார்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடி, தமிழ் எதிலிருந்தும் வரவில்லை, அது தனித்துவமான தெய்வ மொழி என்பதை உலகுக்குப் பறைசாற்றினார்.

ரோலோவின் பேச்சு தமிழுக்கு ஒரு சாபமாக அமையாமல், ஒரு வரமாக அமைந்தது. அவர் "சாகும்" என்று சொன்ன பிறகுதான், பாரதியார் போன்றவர்கள் தமிழை நவீனப்படுத்தத் துடித்தனர்.

பாரதியார் தனது "சுதேசமித்திரன்" கட்டுரைகளில் (குறிப்பாக 'தனித்தமிழ்' கட்டுரையில்) சில முக்கியமான தீர்வுகளை முன்வைத்தார்:

- கல்வி முறை: "ஆங்கிலம் ஒரு மொழியாகக் கற்கப்படட்டும், ஆனால் பாடம் கற்பிக்கும் மொழி (Medium of Instruction) தமிழாகவே இருக்க வேண்டும். அப்போதுதான் சிந்தனை வளரும்" என்றார்.

- பத்திரிகை மொழி: பத்திரிகைகளில் மக்கள் பயன்படுத்தும் எளிய தமிழைப் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் அறிவு சாமானியர்களிடம் சேரும் என்றார்.

- உலகத்தரம்: "பிற நாட்டுச் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்று கட்டளையிட்டார். ஷேக்ஸ்பியர் போன்ற உலக மகாகவிகளின் படைப்புகள் தமிழில் இல்லாததை ஒரு குறையாகவே கருதினார்.

அன்று "அறிவியல் மொழிப்பெயர்த்தல் தமிழில் இல்லை" என்ற குறையைத் தீர்க்க அரசு மற்றும் தனியார் அமைப்புகள் பெரும் முயற்சி எடுத்தன.

அறிவியல் தமிழ்: 1930-களில் இருந்தே 'கலைச்சொல் அகராதிகள்' உருவாகின. இன்று இயற்பியல், வேதியியல் முதல் விண்வெளி ஆராய்ச்சி வரை (Space Research) அனைத்துத் துறைகளுக்கும் நேரடித் தமிழ்ச் சொற்கள் உள்ளன.

ஆட்சி மொழி: 1950-களுக்குப் பிறகு தமிழக அரசின் ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும் தமிழ் மாறியது. நீதிமன்றங்கள் மற்றும் நிர்வாகத்தில் தமிழ் கலைச்சொற்கள் நிலைபெற்றன.

பாரதியாரின் அந்த ஆவேசமான வரிகளுக்குப் பிறகு, தமிழகத்தில் ஒரு மிகப்பெரிய "மொழிச் வளர்ச்சி" ஏற்பட்டது. ஜான் ரோலோ போன்றவர்கள் தமிழை இகழ்ந்ததை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு, தமிழ் மொழியை மீட்டெடுக்க பல ஆளுமைகளை அயராது உழைத்தனர்.

ரோலோ "தமிழ் சாகப்போகும் மொழி" என்றார். அதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக, உ.வே.சாமிநாதையர் அவர்கள் மண்ணுக்குள் புதைந்து கிடந்த தமிழின் பொக்கிஷங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார்.கறையானுக்கு இரையாகிக் கொண்டிருந்த சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி போன்ற காப்பியங்களை ஓலைச்சுவடிகளில் இருந்து மீட்டு அச்சுக்குக் கொண்டு வந்தார்

"தமிழ் வெறும் பேச்சு மொழி அல்ல; இது இரண்டாயிரம் ஆண்டுக்கால செழுமையான இலக்கியங்களைக் கொண்ட மொழி" என்று உலகிற்கு நிரூபித்தார்.

தமிழைச் சமஸ்கிருதத்தின் கிளை மொழி என்று சொன்னவர்களுக்கு, மறைமலை அடிகள் 1916-ல் தொடங்கிய 'தனித்தமிழ் இயக்கம்' ஒரு பெரிய பலமாக அமைந்தது.

தன் பெயரான வேதாசலம் என்பதை 'மறைமலை' என்று மாற்றிக் கொண்டு, தமிழுக்கு ஒரு தனித்துவமான அடையாளத்தைக் கொடுத்தார்.

தமிழ் தனித்து இயங்கும் வல்லமை கொண்டது என்பதை மொழிவாரியாக நிரூபித்தார்.

ஆங்கிலமும் சமஸ்கிருதமும் கலந்தால்தான் தமிழ் வாழும் என்ற நிலையை மாற்றி, தூய தமிழுக்கு ஒரு கம்பீரத்தைக் கொடுத்தார்.

பாரதியாருக்குப் பிறகு தமிழை ஒரு இயக்கமாக மாற்றியது பாரதிதாசன் தான்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சத்தமிடு!"

"தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத் தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

தமிழை இழிவுபடுத்தியவர்களை "செந்தமிழைச் சாகடித்த அந்தப் பேய்களைச் சாட வேண்டாமா?" என்ற தொனியில் பாடி, சாதாரண மக்களிடமும் தமிழ் உணர்வை ஒரு நெருப்பாகப் பரப்பினார்.

ரோலோவின் பேச்சுக்குப் பிறகு, பச்சையப்பன் கல்லூரியிலேயே பல மாற்றங்கள் நிகழ்ந்தன.

கா. நமச்சிவாய முதலியார் போன்ற அறிஞர்கள் கல்வித் துறையில் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கச் செய்தனர். பாடப்புத்தகங்கள் தமிழில் எழுதப்பட்டன.

"தமிழ் படிக்கத் தகுதியற்ற மொழி" என்ற பிம்பம் உடைக்கப்பட்டு, அது ஒரு தகுதியான பாடமாக (Academic Subject) மாறியது.

திரு.வி.க போன்றவர்கள் இதழ்களில் எளிய தமிழில் எழுதத் தொடங்கினார்கள்.

"தமிழ் நடை" என்பது கடினமான பண்டிதர்களுக்கு மட்டுமே உரியது என்ற நிலையை மாற்றியவர்.

ஆங்கிலம் கலந்த மணிப்பிரவாள நடை ஒழிந்து, அழகான தமிழ் நடை உருவானது.

அரசியல் மேடைகளிலும், பொதுக் கூட்டங்களிலும் தமிழ் முழங்கத் தொடங்கியது. இது தமிழுக்கு ஒரு பெரும் மக்கள் செல்வாக்கைத் தேடித் தந்தது.

தமிழை உலக மொழிகளின் தாய் என்று நிரூபிப்பதையே தன் வாழ்நாள் லட்சியமாகக் கொண்டவர் தேவநேயப் பாவாணர் (மொழிஞாயிறு)

தமிழ் ஒரு தன்னாட்சி கொண்ட மொழி (Sovereign Language) என்பதை மொழியியல் ரீதியாக நிறுவினார். ரோலோ போன்ற ஐரோப்பியர்களுக்குத் தமிழின் வேர்ச்சொல் சிறப்பைத் தனது ஆராய்ச்சிகள் மூலம் பதிலடியாக வழங்கினார்.

தமிழ் இன்று வெறும் தமிழ்நாட்டோடு மட்டும் சுருங்கவில்லை.

- செம்மொழி அந்தஸ்து: 2004-ல் இந்திய அரசு தமிழை 'செம்மொழி' (Classical Language) என அறிவித்தது.

- புலம்பெயர் தமிழ்: சிங்கப்பூர், இலங்கை ஆகியவற்றின் அதிகாரப்பூர்வ மொழியாகவும், கனடா, ஆஸ்திரேலியா, லண்டன் போன்ற நாடுகளில் கல்வி மொழியாகவும் தமிழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- ஆராய்ச்சி: அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக்கழகம் உள்ளிட்ட உலகப் புகழ் பெற்ற பல்கலைக்கழகங்களில் 'தமிழ் இருக்கைகள்' (Tamil Chair) அமைக்கப்பட்டுள்ளன.

- ஆரம்பத்தில் 'தமிழ் 99' (Tamil 99) விசைப்பலகை அரசு தரப்படுத்தியது. இன்று போனில் நாம் பயன்படுத்தும் Gboard (Google Keyboard) மூலம் தமிழ் குரல் தட்டச்சு (Voice Typing) வரை முன்னேறியுள்ளோம்.

- டச் மாடல் (Touch Interface): கையெழுத்து அங்கீகாரம் (Handwriting recognition) மூலம் திரையில் விரலால் எழுதினாலே அது எழுத்துக்களாக மாறும் வசதி இன்று தமிழில் உள்ளது.

- AI மற்றும் தமிழ்: கூகுள் டிரான்ஸ்லேட் (Google Translate) முதல் சாட் ஜிபிடி போன்ற AI கருவிகள் வரை தமிழ் சரளமாகப் பேசுகிறது. தமிழ் மொழிக்கான தரவுத் தொகுப்புகள் (Datasets) இன்று பிரம்மாண்டமாக வளர்ந்துள்ளன.

- உலகிலேயே மிக அதிகமான தொலைக்காட்சிகள் மற்றும் டிஜிட்டல் ஊடகங்கள் (YouTube/Podcast) கொண்ட மொழிகளில் ஒன்றாகத் தமிழ் திகழ்கிறது

ரோலோவின் அந்தப் பழைய பச்சையப்பன் கல்லூரியிலேயே இன்று தமிழ் வளர்ச்சித் துறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதும், அந்த மண்ணிலேயே ரோலோவின் கூற்று பொய்யாக்கப்பட்டது.

தமிழ் சாகும் என்று சொல்பவன் மூடன்; அதை வளர்க்காமல் இருப்பவன் துரோகி" என்ற கருத்தில் பாரதியார் தனது கட்டுரைகளைத் தொகுத்துவந்தார்.

ரோலோவின் அந்த அவதூறுதான், பாரதியாரை "வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி" என்று பாட வைத்தது. இன்று தமிழ் சாகவில்லை; மாறாக ரோலோ போன்றவர்களின் கணிப்புகள்தான் வரலாற்றில் புதைந்து போயின.

பீனிக்ஸ் பறவை சாம்பலில் இருந்து எழுவது போல, மேற்கத்தியவர்களால் மறைந்து போனதாகக் கருதப்பட்ட தமிழின் பெருமை எகிப்தின் மணல் பரப்பில் சிகை கொற்றனாக மீண்டும் உயிர்த்தெழுந்தது...

இறுதியில் நாம் ஒரு முக்கியமான உண்மையை உரக்கச் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்றும் பல மேடைப் பேச்சாளர்களும், இணையவாசிகளும் 'மெல்லத் தமிழினிச் சாகும்' என்ற வரியைப் பாரதியார் சொன்னதாகக் கூறி, அவர் தமிழைச் சபித்தது போன்ற ஒரு பிம்பத்தை உருவாக்கி வருகிறார்கள்.

J.C.Rollo, Principal, pachaiyappa's college, Maadras

ஆனால், பாரதியார் ஒருபோதும் அப்படிச் சொல்லவில்லை. மாறாக, ஜான் ரோலோ (John Rollo) சொன்ன அந்த வசைச் சொல்லை மேற்கோள் காட்டி, 'இப்படி ஒரு பேதை சொன்னானே... இந்த வசை எனக்கு வரலாமா?' என்று இரத்தம் கொதித்துப் பாடினார்.

'என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ!
இந்த வசை எனக்கெய்திட லாமோ?'

என்ற பாரதியின் அடுத்த வரியைப் படிக்காமல், முதல் வரியை மட்டும் பிடித்துக்கொண்டு அவர் மீது பழி போடுவது ஒரு வரலாற்றுத் துரோகம். பாரதி தமிழைச் சாவச் சொல்லவில்லை; சாகும் என்று சொன்னவனின் நாவடக்கத்தைத்தான் கேள்வி கேட்டார்.

எனவே, இனி எங்கேனும் யாராவது 'பாரதியார் மெல்லத் தமிழினிச் சாகும் என்று சொன்னார்' எனப் பதிவிட்டால், அவர்களுக்கு இந்த வரலாற்றைச் சுட்டிக்காட்டுங்கள்.

இஸ்லாமியப் பெண் ஆளுமைகள்

அன்னை அம்ரா

சமீஹா ஹுதா பானு
எழுத்தாளர்

பெண்கள் கல்வியிலும், பணியிலும், பொருளாதாரத்திலும் இன்று தங்களை மேம்படுத்திக் கொண்டுள்ளனர். இன்றைய பெண்களின் உயர்வுக்கு தங்களை அர்ப்பணித்த பெண் ஆளுமைகள், அவர்கள் கடந்து வந்த கடுமையான சோதனைப் பாதைகளை அறிந்து, அவர்களின் தியாகங்களுக்கு புகழஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டவர்கள் இந்தக் காலத்துப் பெண்கள்.

பெண்களுக்கான சட்டப் பாதுகாப்பு, சட்ட உரிமையை இன்றும் பல பெண்கள் அறியாமல், அறிந்து கொள்ளாமல் இருப்பது மிகப்பெரும் தவறு. பெண்களுக்கான சிறப்புச் சட்டங்களை கண்டிப்பாக பொதுத் தளங்களில் பகிரப்பட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பெண்களாகிய நமது கடமை. சட்டத்துறையில் இருக்கும் பல ஆளுமைப் பெண்கள் கொடுக்கும் தகவல்களை நாம் பகிர்ந்து அறிந்து கொள்வோம்.

பெண்களின் சொத்துரிமைக்கு 1400 ஆண்டுகளுக்கு முன்பே குரல் கொடுத்தவர் அமிரா அம்மையார். "வலிமை உள்ளவன் வகுத்ததுதான் சட்டம்" என இருந்த அந்தக் காலத்தில் தனது கணவரின் சொத்தில் தனக்கும், தன் பெண் மக்களுக்கும் உரிமை கேட்டு, இஸ்லாமிய மார்க் அறிஞர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த அண்ணல் முஹம்மது நபிகளிடம், சபையில் நியாயம் கேட்டு அம்ரா அம்மையார் முறையிட்டார்கள்.

இஸ்லாம் மார்க்கம் முஹம்மது நபிகள் மூலமாக பரவ ஆரம்பித்த சமயத்தில் பெண்களுக்கான சொத்துப் பங்கீடுச் சட்டம், குடும்ப சொத்தில் பெண்களுக்கான உரிமை, கணவர் சொத்தில் மனைவிக்கான உரிமை இல்லாமல் இருந்தது.

அம்ரா அம்மையாரின் கணவர் ஸஅத் இப்னு ரபீக் உஹுதுப் போர்க்களத்தில் வீரமரணம் எய்தினார். ஸஅத்தி வீர மரணம் அடைந்த சமயத்தில் அம்ரா அம்மையாருக்கு கைகளில் ஒரு மகளும், கர்ப்பத்தில் கருவைச் சுமந்தவராக இருந்தார்.

ஸஅத் அவர்களின் தம்பி, தனது அண்ணன் மரணம் அடைந்ததும் தனது அண்ணனின் சொத்து, தனது குடும்ப பரம்பரைச் சொத்துக்களை தன் வசப்படுத்திக் கொண்டார். அம்ரா அம்மையாருக்கு இரண்டாவது மகள் பிறந்து இரு மகள்களுக்கு போரில் மரணமடைந்த ஸஅத் அவர்களின் கருணைத் தொகை அண்ணல் நபிகளின், வழியில் தன்னை இணைத்துக் கொண்ட மிகப் பொறுப்புள்ள அபுபக்கர் சித்தீக் அவர்கள் மூலம் கொடுக்கப்பட்டு வந்தது.

அம்ரா அம்மையாருக்கும், இரண்டு பெண் குழந்தைகளுக்கு உணவு, உடை, உறைவிடத்துக்கு மிகக் கவனமாக செலவழித்ததால் கருணைத் தொகை காலத்தை ஓட்ட உதவியாக இருந்தது. தனது இரண்டு பெண் மக்கள் வளர்ந்து விட்டபோது, அவர்களுக்கு திருமணம், திருமணம் முடித்த பிறகு வருகிற செலவுகளை நினைத்து மிகக் கவலை கொண்டார் அம்ரா அம்மையார். தனது கணவரின் சொத்து, தனது கணவரின் குடும்பச் சொத்தில் தனக்கும், தன் மகள்களுக்கு உரிமை இல்லையா? என எழுந்த கேள்வி அவரை கோபம் கொள்ளச் செய்தாலும் துணிச்சலை, உத்வேகத்தை ஏற்படுத்தி ''பூனைக்கு யார் மணி கட்டுவது'' நானே அந்த மணியைக் கட்டுகிறேன் என்ற தைரியத்துடன் அண்ணல் முஹம்மது அவர்களின் இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் கூடும் சபைக்குக் கிளம்பிச் சென்றார்.

நாம் இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால்... துணிவும், தைரியமும், சொல் வளமும் கொண்ட ஒரு பெண்ணின் குரலால் பல பெண்களின் வாழ்வுநிலை சீரடைகிறது என்பதைத்தான். அம்ரா அம்மையார் சபையில் இறைவனின் தூதரே! இதோ என்னுடன் நிற்கிறார்களே.. எனது இரு மகள்கள், இவர்கள் இருவரும் உஹதுப் போர்களத்தில் உங்களுடன் பங்குகொண்டு வீரமரணத்தையடைந்த ஸஅதிக் புதல்விகள். இவர்களின் தந்தையின் சகோதரர் இவர்களின் தந்தையின் முழுச் சொத்தையும், இவர்களது தந்தையின் குடும்பச் சொத்துக்கள் அத்தனையையும் தனதாக்கிக் கொண்டார். தாங்கள் போர்களத்தில் இறந்தவர்களுக்கான கருணைத் தொகையால் இத்தனை காலமும் கடத்தி விட்டோம். இப்பொழுது திருமண வயதில் இருக்கும் எங்களது மகள்களுக்கு எனது கணவரின் சொத்தின் பாத்தியத்தை எங்களுக்கு வேண்டும்.

எனது கணவரின் சொத்தில் எனக்கும், எனது மகள்களுக்கும் உரிமை உள்ளது. அப்படி உரிமை உள்ள சொத்து இருக்கும்போது எனது மகள்களின் திருமணத்துக்காக நான் யாரிடமும் உதவி கேட்க மாட்டேன். அது என்னால் முடியாது. எனது கணவருக்கு சொத்தே இல்லையென்றால் அது எங்களின் 'விதி' என எடுத்துக் கொள்வேன். ஆனால், எங்களது சொத்துக்கள் இருக்கும்போது நான் எதற்காக யாரிடமும் உதவி கேட்கவேண்டும்? எங்களுக்கான சொத்தின் உரிமைப் பங்கை தாங்கள்தான் பெற்றுத் தர வேண்டும். இனி இதற்கான சட்டமும் வர வேண்டும் என அம்ரா அம்மையார் தீரத்துடன் இறைத்தூதர் முஹம்மதுவிடம் முறையிட்டார்.

அண்ணல் நபியவர்கள் அம்ரா அம்மையார் முறையீட்டை அமைதியாகக் கேட்டறிந்து நிச்சயமாக! உங்களுக்கு ஒரு தீர்வை இறைவன் வழங்குவான், நானாக உங்களுக்கு தீர்ப்பைக் கூற முடியாது. இறைவனின் தீர்ப்பு வரும் வரை அம்ரா அம்மையாரே பொறுத்திருங்கள் எனக் கூறி அனுப்பி வைத்தார்கள். இந்த நிகழ்வில் நமக்குத் தெரிவது என்னவென்றால் அதுவரை வாரிசுரிமைச் சட்டம் இல்லாதிருந்துள்ளது என்பதைத்தான். இறைவனால் பகுதி, பகுதியாக சூழலுக்கு ஏற்ப அருளப்பட்டது இறை வேதமான திருகுர்ஆன். அதில் வாரிசுரிமைச் சட்டத்துக்கும் இறைவனால் வஹி (இறை கட்டளை) இறக்கப்பட்டது.

‘அழுதபிள்ளை பால் குடிக்கும்’ என்பார்கள். ‘கேள்வி பிறந்தால்தான் நீதி கிடைக்கும்’ என்பதை இந்த நிகழ்வின் மூலம் அறிய முடிகிறது.

“இரண்டு பெண்களுக்குரிய பங்கு போன்று ஒரு ஆணுக்கு உண்டு என உங்கள் விடயத்தில் இறைவன் கட்டளையிடுகிறான். அவர்கள் இரண்டுக்கு மேற்பட்டவராக இருந்தால் இறந்தவர் விட்டுச் சென்றதில் மூன்றில் ஒரு பங்கு அவர்களுக்குண்டு” என்ற நீண்ட வாரிசுரிமை வசனம் இறைவனால் அருளப்பட்டதும், இறைவனின் தூதர் முஹம்மது ஸஅதின் சகோதரரை வரவழைத்து “ஸஅதின் இரு புதல்விகளுக்கும் அவரின் சொத்தில் மூன்றில் ஒரு பங்குகளையும் அவரது மனைவிக்கு (அம்ரா அம்மையாருக்கு) எட்டில் ஒரு பகுதியையும் கொடுக்கச் சொல்லி, குடும்ப சொத்துப் பங்குகளையும் முறைப்படி பிரித்து இறைக் கட்டளைப்படி கொடுத்தது போக எஞ்சியதை நீர் எடுத்துக்கொள்ளும் என உத்தரவிட்டார். அதன்பின் சொத்தின் வாரிசுரிமைச் சட்டம் இஸ்லாமிய மார்க்கத்தில் நடைமுறைக்கு வந்தது.

அம்ரா அம்மையார் தீரத்துடன் சென்று முறையிட்டதைத் தொடர்ந்து சொத்துரிமை செயல்பாட்டுக்கு வந்தது. பெண்களின் திறன் பெண்களுக்கே தெரிய வைத்த இஸ்லாமியப் பெண் ஆளுமைகளில் அம்ரா அம்மையாரும் மிகச் சிறப்புடையவர்.

அவள் என்றும் வேண்டுவது அன்பு

தானிருக்கும் இல்லத்தில்
தனித்தியங்கி யாவருக்குமாய்
தன்னையே தொலைத்துவிட்டு
தானியங்கியாய் உள்ளுணர்வில்
தனிமைக்குத் துணையானவள்!

இரு வீடு ஓருலகம்
இருப்பில் வேறுவிதம்
இருந்தாலும் இணங்கியே
இருப்பவள்!

வாழ்வென்பதில் தேர்வு செய்ய
விருப்பத்திற்கு வழியில்லை!
வாழ்ந்தே ஆகவேண்டிய
வலைப் பின்னலில்
வாழ்கிறாள் வழியின்றி!

கடமைக்குள் கட்டுப்பாட்டில்
கட்டிவைத்த கண்ணியத்துக்குள்
கணக்கு வாய்ப்பாட்டின் கட்டமைப்பில்
காலத்துடன் கடிகாரத்துடன்
கடுகிச் செல்கிறாள்!

பன்னிருகை ஏந்தியவளாய்
பல்நோக்குச் சிந்தையுடன்
ஆக்கங்கள் பல்வேறு!
அன்பே அவளின் முதல் கூறு!

உயிர்த்தசைக்குள் வளர்க்கையிலே
உன்னதமொழி தருகின்றாள்!
உடல்விட்டு வந்தாலும்
உயிராக வளர்க்கின்றாள்!
உணர்வுகளால் பின்தொடரும் அவளுள்ளம்
உயிர் மண்ணில் வாழும் வரை
உயர்வுக்காய்த் தொடரும்!

தானுற்ற பாதிக்கும்
தானீன்ற மகவுக்கும்

தனைச் சுற்றிய உறவுக்கும்
தனக்குள்ளே மருகும்
தையலின் உலகம்!

பட்டியலில் அடங்காது!
பட்ட பாடு விளங்காது!
சாதித்தே கரைபவளின்
சாதனைக்குச் சான்றுகள் எதற்கு?

தேடுவதற்கும் தெரிவு செய்வதற்கும்
புதிதாக ஏதுமில்லை!
பரிவுக்கும் பாசத்திற்கும்
பண்புகளில் முதலிருக்கும்
அன்பொன்றே அவள் முதல் விருப்பம்!
எத்திசைக்குச் சென்றாலும்
அவள் என்றும் வேண்டுவது
அன்பு மட்டும் ஆயுள் வரை!

கவிஞர் மாலதி இராமலிங்கம்
புதுச்சேரி.

ராவணனின் இரண்டாவது மனைவி தான்யமாலினி

இரா. சைலஜா சக்தி
சென்னை

ஒரு ஆண் செய்யும் தவறான காரியத்தால் அவன் மட்டும் பாதிக்கப்படுவதில்லை. அவனுடன் அவனது மனைவி, குழந்தைகளும் துன்பத்தை அனுபவிக்கின்றனர். இதுவே ஒரு நாட்டின் மன்னன் தவறு செய்தால் அவன் குடும்பத்தினர் மட்டுமல்ல, அந்நாட்டு மக்களும் பெருந்துன்பத்தை அனுபவிக்கின்றனர். இதற்கு மிகச் சிறந்த உதாரணம் ராவணன்.

ராவணன் சீதையைக் கவர்ந்து வந்ததால் சகோதரர்களையும், பெற்ற மகன்களையும் இழந்தான். மேலும் இலங்கை நகரமே தீப்பற்றி எரிந்தது. ராவணனின் புதல்வர்கள் இறக்கும்போது, ராவணன் மட்டுமல்ல, அவன் மனைவிகளும் அழுது புலம்பினர். இலங்கையின் மகாராணியாக இருந்தாலும்கூட நடப்பதை வேடிக்கை பார்க்க வேண்டிய நிலையில் இருந்தனர். அசோகவனத்தில் சீதை ராமனை நினைத்து அழுதாள். அந்தப்புரத்தில் ராணிகள் போரில் இறந்த வீர மகன்களை நினைத்து அழுதனர்.

அவ்விதம் கண்ணீர் வடித்த இலங்கையின் மகாராணிகளில் ஒருத்தி தான்யமாலினி. இந்திரஜித்திற்கு அடுத்தபடியாக மிகப் பெரும் வீரனாக கருதப்பட்ட அதிகாயனின் தாய் ஆவாள். தான்யமாலினி ராவணனின் இரண்டாவது மனைவி. இவள் ராவணனின் முதல் மனைவியான மண்டோதரியின் உடன் பிறந்த தங்கை.

தான்யமாலா, தன்யமாலா, தன்யமாலினி என்ற பெயர்களிலும் தான்யமாலினி அழைக்கப்படுகிறாள். ''தன்ய'' என்றால் ஆசீர்வதிக்கப்பட்ட என்று பொருள். ''மாலினி'' என்றால் மலர் மாலையை அணிந்தவள் என்று பொருள். எனவே தான்யமாலினி என்றால் ''வாடாத மணம் வீசும் மலர் மாலையை அணிந்த ஆசீர்வதிக்கப்பட்ட பெண்'' என்று பொருள்படும். தான்யமாலினி, அப்சரஸ் ஹேமாவின் மகள் என்பதால் எப்போதும் வாடாத மலர் மாலையை அணிந்திருந்தாள்.

சப்த ரிஷிகளில் ஒருவரான காஷ்யபருக்கு 21 மனைவிகள் உண்டு. அவர்களின் மூலம் தேவர்கள், அசுரர்கள், கருடர்கள், நாகங்கள், கந்தர்வர்கள், பறவைகள், விலங்குகள், ஊர்வன மற்றும் பிற வானுலக உயிரினங்கள் தோன்றியதாக புராணங்களில் கூறப்படுகிறது. காஷ்யபரின் 21 மனைவியரில் 13 பேர் தட்சனின் மகள்கள். அவர்களில் ஒருத்தியான முனி என்ற பெண்ணுக்கும், காஷ்யபருக்கும் அப்சரஸ்கள், கந்தர்வர்கள், கின்னரர்கள், யட்சர்கள், நீர் தேவதைகள் ஆகியோர் பிறந்தனர்.

முனிக்குப் பிறந்தவர்கள் அனைவரும் கலை, இசை, நடனம் மற்றும் அழகியல் உணர்வுடையவர்களாகத் திகழ்ந்தனர். இவர்கள் தெய்வீக இனத்தவர்களாகக் கருதப்பட்டனர். அந்த வகையில் ரம்பா, மேனகா, ஊர்வசி, ஹேமா போன்ற அப்சரஸ்கள் முக்கியமானவர்கள்.

ஒரு காலத்தில் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் இடையே நட்பு நிலவியது. அப்போது தேவலோகத்தில் ஒரு பிரம்மாண்ட நடன நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அசுரர்களின் தலைவனான மயனை தேவர்கள் அழைத்தனர். மாய தந்திரங்களில் வல்லவனான மயன் மிகச் சிறந்த சிற்பி ஆவார். இவர் மகாபாரதக் கதையில் இந்திரப்பிரஸ்தத்தில் பாண்டவர்களுக்காக மாயசபைகளைக் கொண்ட அரண்மனையை உருவாக்கியவர். அதில் நிலத்தை நீராகவும், நீரை நிலம் போலவும் மாற்றிக் காட்டி கண்களையும், அறிவையும் மயக்கும் மாயங்கள் நிறைந்திருந்தன. ஒவ்வொரு அறையிலும் நிஜம் எது, மாயை எது என்று கண்டுபிடிக்க முடியாமல் துரியோதனனும், அவன் சகோதரர்களும் அச்சமடைந்தனர். இதைக் கண்டு பாஞ்சாலி எள்ளி நகையாடினாள். இந்நிகழ்வே பாரதப் போருக்கு வித்திட்டது.

இந்திர சபையில் பல அப்சரஸ் பெண்கள் நடனமாடினர். அவர்களில் ஹேமா என்ற அப்சரஸின் அழகும், நடனமும் மயனை ஈர்த்தது. மயன் ஹேமாவின் மீது காதல் வயப்பட்டார். ஹேமாவும் மயன் மீது விருப்பம் கொண்டாள். இவர்களின் காதலை அறிந்த தேவர்கள் ஹேமாவை மயனுக்கு மணமுடித்துக் கொடுத்தனர். மயன் ஹேமாவிற்காக இமயமலைப் பகுதியில் ஹேமபுரம் என்று ஒரு அழகிய பொன்மயமான நகரத்தை உருவாக்கினார். ஹேமபுரத்தில் மயனும், ஹேமாவும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். அவர்களுக்கு மண்டோதரி, தான்யமாலினி என்ற இரு மகள்களும் மாயாவி, துந்துபி என்ற இரு மகன்களும் பிறந்தனர்.

மண்டோதரியின் அழகில் மயங்கிய ராவணன் அவளை மணக்க விரும்பினான். ராவணின் பராக்கிரமங்களை அறிந்த மயன் தன் மகள் மண்டோதரியை ராவணனுக்கு மகிழ்ச்சியுடன் திருமணம் செய்து வைத்தார். தன் மருமகன் ராவணனுக்காக இலங்கையில் அழகான மணிமண்டபங்களையும், சந்திரகாந்த மண்டபங்களையும் அமைத்துக் கொடுத்தார். இலங்கையில் பல அடுக்கு பாதுகாப்பு அரண்களை உருவாக்கினார். மேலும் சக்தி வாய்ந்த தெய்வீக அஸ்திரங்களையும் வழங்கினார். மண்டோதரியைத் தொடர்ந்து அவள் தங்கை தான்யமாலினியும் ராவணனை மணந்து கொண்டாள். இலங்கை அரண்மனையில் இரு சகோதரிகளும் மிகுந்த ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர்.

சிவன் எறிந்த ஈட்டியை கையில் பிடித்து தாக்கிய இராவணனின் மகன் அதிகாயன்

அப்சரஸ் ஹேமாவின் மகள் என்பதால் தான்யமாலினி எப்போதும் இளமையுடனும், அழகுடனும் திகழ்ந்தாள். மாயங்களில் வல்ல மயனின் மகளாகவும் இருப்பதால் தான்யமாலினி பல மாய சக்திகளைக் கொண்டிருந்தாள். பிறர் மனதை சுலபமாகத் தன் வசப்படுத்தும் மனோமாயசக்தி கொண்ட தான்யமாலினி தன் உருவத்தை மாற்றும் சக்தியும் கொண்டவள். இவள் ராவணனை மகிழ்விக்க பல வடிவங்களை எடுத்தாள்.

தான்யமாலினியின் இசையிலும், நடனத்திலும் மனதைப் பறி கொடுத்த ராவணன் அவள் மீது அளவற்ற காதலைக் கொண்டிருந்தான். தான்யமாலினிக்கு மிகச்சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட மாளிகையை ராவணன் உருவாக்கிக் கொடுத்தான். உலகில் அவன் ஈட்டிய செல்வங்கள், ஆடை, ஆபரணங்கள், விலைமதிப்பற்ற ரத்தினங்கள், தங்க நகைகள், முத்து மாலைகள் ஆகிய அனைத்தையும் அவள் காலடியில் கொட்டினான். இவர்களுக்கு அதிகாயன், நாராந்தகன், தேவாந்தகன் மற்றும் திரிசிரா என்ற நான்கு மகன்கள் உண்டு.

இவர்களில் அதிகாயன் மிகவும் புகழ்பெற்றவன். காயம் என்றால் உடல். பிறந்த உடனேயே மலை அளவு வளர்ந்ததால் அதிகாயன் என்று அழைக்கப்பட்டான். எவராலும் துளைக்க முடியாத தெய்வீக கவசத்தை பிரம்மாவிடமிருந்து அதிகாயன் பெற்றான். தனது அம்பு மழையால் இந்திரனின் வஜ்ராயுதத்தைச் செயலிழக்கச் செய்தான். சிவபெருமான் எறிந்த திரிசூலத்தை அந்தரத்திலேயே பிடித்தான். இதனால் மகிழ்ந்த சிவன் அதிகாயனுக்கு வில்வித்தை மற்றும் அஸ்திரங்களின் ரகசியத்தை உபதேசித்தார். அதிகாயன் போருக்கு வந்தபோது இறந்துபோன கும்பகர்ணன் மீண்டும் உயிருடன் வந்து விட்டானோ என்று வானரப் படைகள் அஞ்சின.

நராந்தகன், தேவாந்தகன் இருவரும் மாய வித்தைகளில் சிறந்தவர்கள். இவர்களால் ஆகாய மார்க்கமாகப் பறந்து சென்று போர் புரிய முடியும். தேவர்கள், கந்தர்வர்கள் மற்றும் யட்சர்கள் ஆகியோர் தங்களைப் போரில் வெல்லக்கூடாது என்ற வரத்தைப் பெற்றிருந்தனர்.

திரி என்றால் மூன்று. சிரம் என்றால் தலை. மூன்று தலைகளைக் கொண்ட வன் என்பதால் திரிசிரா என்று அழைக்கப்பட்டான். அவன் ஒரு தலையை வேதங்களைக் கூறவும், மற்றொரு தலையை மதுவை அருந்தவும், மூன்றாவது தலையை உலகைக் கண்காணிக்கவும் பயன்படுத்தினான். இவனும் தன் தந்தை ராவணனைப்போல தலைகளைத் தியாகம் செய்து சிவபெருமானிடம் இருந்து அரிய வரங்களைப் பெற்றான். இவர்கள் நால்வருமே ராவணனுக்காகப் போரில் ஈடுபட்டு வீர மரணம் அடைந்தனர்.

ராவணன் அசோகவனத்தில் இருந்த சீதையிடம் ''இரண்டு மாதத்திற்குள் என்னைக் கணவனாக ஏற்றுக் கொள். இல்லையெனில் உன்னைக் கொன்று விடுவேன்'' என்று மிரட்டினான்.

அதற்கு சீதை, ''நான் தபசில் இருப்பதால் உன்னை எரித்து சாம்பலாக்காமல் விடுகிறேன். என் கணவர் ராமன் யானையைப் போன்றவர். அவர் முன் நீயோ முயலைப் போன்றவன்'' என்றாள்.

அதைக் கேட்டு கோபத்தில் வெகுண்ட ராவணன் வாளை உருவி சீதையைக் கொல்லத் தயாரானான். அப்போது ஓடி வந்த தான்யமாலினி தன் அன்பான குரலாலும், வசீகரமான பேச்சாலும் ராவணன் மனதை நொடியில் மாற்றி சீதையைக் கொல்லாமல் தடுத்தாள். கணப்பொழுதில் அவனுடைய ஆத்திரத்தை அன்பாக மாற்றினாள். சீதையை கொல்ல வேண்டும் என்ற எண்ணத்தைக் கைவிட்டு ராவணன், தான்யமாலினியின் பின் சென்றான். இதுவே ஒருவர் மனதைத் தன் விருப்பத்திற்கேற்ப மாற்றும் அல்லது கட்டுப்படுத்தும் மனோ மாயா சக்தியாகும். இந்த சக்தியின் மூலம் ராவணனிடமிருந்து சீதையின் உயிரைக் காத்தாள். தான்யமாலினி சீதையின் மேல் அன்பு செலுத்தினாள். சீதையை ராமனிடம் திருப்பி ஒப்படைத்து விடும் படி தான்யமாலினி கூறிய அறிவுரையையும் ராவணன் நிராகரித்தான். இறுதியில் போரில் ராவணனும், அவனது மைந்தர்களும் மடிந்தனர்.

சீதையிடம் இணங்கி போ என்ற ராவணனை அவன் மனைவி தான்ய மாலினி தடுத்து நிறுத்துதல்

எத்தனை அழகும், அறிவும், சித்திகளும் உடைய பெண்ணாயினும் கணவனின் முடிவுகளில்தான் அவள் வாழ்வும், மகிழ்வும் அமைகிறது. ராவணனின் முடிவுகளைத் தடுக்க முடியாமல் ராவணனையும், பெற்ற மகன்களையும் இழந்து பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்ட தான்யமாலினி வரலாற்றில் பலராலும் அறியப்படாதவள்.

கால் நாழிகை வானம்

ஒவ்வொரு நாளும்
கனவுகளைத் தொலைத்து
வீடு திரும்புகிறாள்

மாலை வானத்தில்
சிறகடிக்கும் பறவைகள்
உவகையை நினைவூட்டுகின்றன

சூழ்நிலைக் கைதியாக
சிறைபட்டுக் கிடக்கும் மனதில்
விரிய மறுக்கிறது வானம்

அழுத்தத்தால் முதுகு
வளைந்து உடையாமல்
பெரும் சுமையின் பாரத்தில்
முழங்கால்கள் இடம் பெயராமல்
இருக்க வேண்டியே
பறக்க நினைக்கிறாள் !

சிறைப்படுத்தும்
வீட்டுச் சுவர்கள்
இன்னும் உயர்கின்றன
நிதர்சனம் அழுத்தமாய்க்
கிள்ளுகிறது

வேலைகள் பரபரக்கின்றன
காப்புக் காய்ச்சியச் கைகளால்
கழுவி ஊற்றுகிறாள்
சுதந்திரத்தை

கால் நாழிகை வானம்
இன்னும் சாத்தியப்படவில்லை
அவளுக்கு!

மேனகா நரேஷ்

நிழல்தேடும் வேர்கள்

அ.திவ்யகுமாரி கண்ணம்மா
ஐயை உலக தமிழ் மகளிர் மன்றம்

இந்திய சமூகக் கட்டமைப்பில் 60 வயதை தாண்டிய ஒரு ஆண்..

திருமணம் ஆகாமலோ அல்லது குடும்பம் இருந்தும் தனித்து விடப்படும்போதோ அல்லது மனைவியை இழக்கும் தருவாயிலோ...

அந்த ஆண் அடைவது

தனிமையை மட்டும் அல்ல அது வாழ்வின் பெரிய தடுமாற்றம்..

அவர்களது காலைப் பொழுதுகள் எப்படி விடுகின்றனவோ...

இரவு பொழுதும் அப்படியே மடிகின்றன..

காலை கண் விழிப்பது முதல் இரவு கண்ணுறங்கும் வரை ஒரு நிசப்தமான அமைதி அவர்களை எப்படியெல்லாம் அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது தெரியுமா...

அடுப்படியில் பாத்திரங்கள் உருளும் சத்தமோ..

காபி போடும் வாசனையோ...

மோட்டார் போட்டிங்களா... ??

என்ற குரலோ இல்லை ..

நிசப்தம் காதை அடைக்கிறது...

அம்மா இருக்கும் வரை எல்லாத்தையும் அம்மா பார்த்துக் கொண்டாள்... மனைவி இருக்கும் வரை மனைவி பார்த்துக் கொண்டாள்...

காலையில் காபி போட கூட அடுப்படியில் என்ன இருக்கிறது என்று தேட வேண்டி இருக்கிறது..

ஜன்னல் வழியாய் சுளீர் என வீசும் சூரிய ஒளியை பார்க்கிறேன்.

கை நிறைய வளையகளோடு ..

தலையிலோ ஈர துண்டு ...

முகத்தில் பூசிய மஞ்சள் ..

காதோரமாய் எட்டிப் பார்க்கும் நரைமுடியிலும் சிறிது மஞ்ச சாயம் அடிக்க ....

கையில் சூடான காப்பியை ஆற்றுகிறாள் எதிர்த்த வீட்டு பெண்..

மாணிக்கம் கடை டீயை விட இது என்ன நல்லா இருக்கவா !! போகுது...?? என்று பெருமூச்சு விட்டுக் கொண்டேன்...

மாதம் 30 நாளும் கடையில் குடிப்பது சவாலாக உள்ளதால்

இப்போது தான் அடுப்பங்கரையில் எல்கேஜி படிக்கிறேன்...

இத்தனை காலம் மனைவி செய்த அனைத்து வேலைகளும் (இன்விசிப்பில் லேபர்)..

அவள் இல்லாத போது தான் விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது..

மாத்திரை போட்டியா... குளிச்சிட்டியா..? என்று கேட்க ஆள் இல்லாத அந்த வினாடி தன்னைத்தானே தேவையற்ற மனிதராக உணர தொடங்குகிறேன்.

எப்படி ஒரு ஆண் துணை இல்லாத பெண் தனியாக வேலைக்குச் சென்று குடும்பத்தை முன்னேற்றுவது சவாலாக பார்க்கப்படுகிறதோ...

அதேபோல ஒரு ஆண் தனியாக சமைத்து சாப்பிடுவது என்பது இந்திய சமூகத்தில் ஒரு சவாலாக பார்க்கப்படுகிறது..

அதிலும் 60 வயதில் ஏதோ ஒன்றை சமைத்தோ அல்லது கடையில் வாங்கியோ உண்ண வேண்டிய நிர்பந்தம் இருக்கும்.

வேலை முடிந்து வீட்டிற்கு திரும்பும் போது வீடு ஒரு புகலிடமாக இருக்காது. வீட்டின் வெறுமையும் இருட்டும் தேங்கி கிடக்கும் காற்றுமே நம்மை வரவேற்கும்.

பூங்கா பெஞ்சுகளோ அல்லது டீக்கடையோ தான் இவர்களுக்கு தற்காலிக குடும்பம். அங்கே உரையாடுவது எதுவாக இருந்தாலும் சரி அதுதான் இவர்களை உயிர்ப்புடன் வைத்திருக்கிறது.

நள்ளிரவில் சிறியதொரு கேஸ் தொந்தரவு வந்தாலும் கூட பயத்தில் அன்றைய தூக்கம் அரோகரா ஆகிவிடும்.

வாழ்க்கையில் அனுபவித்த நேர்மறை அனுபவங்கள் மட்டும் மீண்டும் மீண்டும் ரிப்பீட் மோடில் ப்ளே ஆகிக்கொண்டே இருக்கும் ..

வாழ்கை முழுவதும் உழைத்து விட்டு இன்று எதுவு மற்ற நிற்பதை போல இருக்கும்.

கணவன் மனைவியாக இணைந்து இருக்கும் 40 ஆண்டு காலம் ...

ஆணுக்கு வீட்டில் ஒரு பொருள் தேடுவது கடினமாகிறது....

ஒரு பெண்ணுக்கு அடையாளம் தேடுவது கடினமாகிறது...

அதுவே...

மனைவி இல்லாதபோது, அந்த ஆணுக்குப் பொருள் தேடுவது சுலபமாகிறது....

, ஆனால் 'அடையாளம்' தேடுவது கடினமாகிறது.

60 வயதில் ஒரு ஆண் தன் மனைவியை இழப்பது என்பதுவெறும் உடல் ரீதியான நெருக்கம் (Physical Intimacy) மட்டுமல்ல, அதைத் தாண்டிய 'உணர்வுப் பகிர்வு' (Emotional Intimacy) என்கிற ஒரு பெரும் பிணைப்பைத்தான்.

இந்தியச் சமூகத்தில், ஒரு ஆண் வெளியே எவ்வளவு பலசாலியாகக் காட்டிக்கொண்டாலும், வீட்டுக்குள் அவன் ஒரு குழந்தையைப் போலத் தன் மனைவியைச் சார்ந்தே இருக்கிறான்.

60 வயதில் இன்டிமெசி என்பது உடலை விட உணர்வு சார்ந்ததாக இருக்கும்....

பகல் முழுக்க நடந்த விஷயங்களை சொல்ல ஆள் இல்லாதது.....

இன்னைக்கு ரொம்ப வெயிலுமா... உடம்பு ரொம்ப டயர்டா இருக்கு... ஆபீஸ்ல அந்த மேனேஜர் இருக்கானே...!

என்ற சிறு சிறு புலம்பல்களை கூட கேட்க ஆளில்லாத அந்த மௌனம் பெரும் சுமையாகவே மாறுகிறது...

20 வயதில் தொடுதல் சிற்றின்பம் 60 வயதில் தொடுதல் பேரின்பம்

என்னங்க காய்ச்சல் அடிக்குதா என்று நெற்றியில் வைக்கப்படும் அந்த தொடுதல்....

சோர்ந்து நிற்கும் போது தோள்களில் வைக்கப்படும் அந்த தொடுதல்.....

தன்னை அறியாமலேயே ஆறுதலோடு அக்கறையோடும் நீட்டப்படும் அந்த கைகளையும்..

கொடுக்கப்படும் அந்த தொடுதல் களையும் இவர்கள் தேடிக் கொண்டே இருப்பார்கள்.

ஒவ்வொரு கணவன் மனைவி இடையே ஒரு ரகசிய மொழி இருக்கும்.

சில குறியீட்டு மொழிகள் *(Private Jokes)* இருக்கும். ஒற்றைப் பார்வையிலேயே பல செய்திகளை பகிர்ந்து கொள்வார்கள்.

மனைவி பிரிந்து செல்லும்போது, அந்த ஆணின் அந்தரங்க உலகம் *(Private World)* அப்படியே முடங்கிப்போகிறது.

மற்றவர்களிடம் (நண்பர்களோ, பிள்ளைகளோ) சொல்ல முடியாத, பகிர முடியாத பல விஷயங்களைச் சுமந்துகொண்டே அந்தப் பழைய வீட்டில் நடமாடுவது ஒரு விதமான 'நடைப்பிணம்' போன்ற உணர்வைத் தரும்.

மனைவி பிரிந்த பிறகு, தான் யாருக்காக உழைக்க வேண்டும், யாருக்காக வாழ வேண்டும் என்கிற நோக்கம் *(Sense of Purpose)* சிதைந்துவிடுகிறது.

அவர் படுக்கையின் ஒரு பக்கம் காலியாக இருப்பது, அந்த அறுபது வயது நடை பிணத்தை தினமும் ஒருமுறை கொன்று பிறக்க வைக்கும்.

60 வயது ஆண் / பெண் தன் தேவைகளுக்காகப் புலம்பினால், இந்தச் சமூகம் அதை "பெரிய மனுஷன் மாதிரி நடந்துக்கோ" என்று அடக்கிவிடும்.

"மனைவி இல்லாம என்னால இருக்க முடியல" என்று ஒரு ஆண் வெளியே சொன்னால், அது தவறாகப் பார்க்கப்படும். இதனால் அவர்கள் தங்களுக்குள்ளேயே ஒரு கூட்டை உருவாக்கிக்கொண்டு, அந்த வெறுமையை மறைக்க 'வெற்றுச் சிரிப்பை' முகமூடி ஆக்கிக் கொள்கின்றனர்.

அந்த வயதில் ஒரு ஆண் தேடுவது உடலை அல்ல, 'உயிர் இருப்பை'.

தன் வீட்டில் இன்னொரு உயிர் நடமாடுகிறது, தன் குரலுக்கு ஒரு பதில் வரும் என்கிற அந்த உறுதிதான் அவர்களை வாழ வைக்கிறது.

அது இல்லாதபோது, அந்தத் தனிமை ஒரு மெதுவான ஸ்லோ பாய்சன் ஆக மாறுகிறது.

***

ஒரு மனைவி செய்யும் பணிகளிலேயே கவனிக்கப்படாத ஒரு பணி.....

.....

ஒரு ஆணின் மன ஆரோக்கியத்தைப் பராமரிப்பது தான்...

"இன்னைக்கு இந்த மாத்திரை போடணும்" என ஒரு நிழல் போலத் தொடரும் அந்த அரவணைப்பை மனைவியை தவிர யாராலும் தர முடியாது.

மனைவி பிரிந்த பிறகு, ஒரு ஆண் சந்திக்கும் அந்த 'ஆதரவற்ற நிலை' என்பது உண்மையில் ஒரு 'தாய்மை'யைத் தேடும் தவிப்புதான்.

ஆண்கள் எதற்கும் கலங்கமாட்டார்கள்" என்கிற அந்த போலி பிம்பத்தை உருவாக்கி

இப்படி ஒரு கட்டமைப்பில் ஆணை வளர்ப்பதும் வாழ வைப்பதும் ஆண்களுக்கு சமூகம் செய்யும் பெரும் அநிதியாக தான் பார்க்க வேண்டும்...

இப்படி தனித்துவிடப்பட்ட அறுவது வயதை கடந்த ஓய்வு பெற்ற ஒரு ஆண் தினமும் காலை 11 மணிக்கு மேல் என்ன செய்வது என்று அவனுக்கு தெரிவதில்லை..

மனைவி என்பள் ஒரு 'வேர்' போன்றவள். மரம் விழாமல் தாங்குவாள்.

அவன் விழும் பொழுது அங்கு வந்து தாங்குபவன் தான் நண்பன்..

நண்பன் என்பவன் ஒரு 'ஊன்றுக்கோல்' போன்றவன். மரம் சாய்ந்துவிடாமல் தற்காலிகமாக முட்டுக் கொடுப்பான். வேர் இல்லாத மரத்திற்கு அந்த ஊன்றுக்கோல் தான் இப்போது உயிர்.

மனைவி பிரிந்து சென்ற ஒரு வீட்டில், அந்த ஆண் சந்திக்கும் முதல் எதிரி - மௌனம். சுவர்கள் பேசும், கடிகாரச் சத்தம் இடியாய் முழங்கும். அந்த மௌனத்தை உடைக்க ஒரு சக மனிதனின் குரல் தேவைப்படுகிறது.

மனைவியின் இடத்தை நண்பனால் நிரப்ப முடியாதுதான். ஆனால்

இரத்த உறவுகள் "நேரமில்லை" என்று ஒதுங்கும் போது, ஒரு நண்பன் தன் தூக்கத்தைத் தியாகம் செய்து வந்து நிற்பது ஒரு 'மறுபிறவி'.

மனைவி செய்யும் போது அது 'கடமை' என்றும், அதே காரியத்தை ஒரு நண்பன் செய்யும் போது அது 'பெரிய மனசு' என்றும் பார்க்கப்படுவது இந்தியச் சமூகத்தின் ஒரு கசப்பான "இரட்டை வேடம்".

60 வயதைக் கடந்த ஓர் ஆணுக்கு, நட்பு என்பது வெறும் 'நேரம் போக்கு' அல்ல; அது ஒரு 'Life Support System'

பொதுவாக ஓய்வு பெற்ற ஆண்கள் இனி நான் யாருக்கும் தேவை இல்லாதவன் என்ற ஒரு மன அழுத்தத்திற்கு ஆளாவார்கள்,

" நாளைக்கு நாம அங்க போகலாம்... எனக்கு ஒரு வேலை இருக்கு கொஞ்சம் கூட வரியா..???"

என்ற நண்பனின் வார்த்தை தான் அவர்களை கவலையில் இருந்து காப்பாற்றுகிறது.

நள்ளிரவில் உடல்நிலை சரியில்லாமல் போகும்போது,

தயக்கமில்லாமல் கதவைத் தட்டவோ அல்லது ஒரு போன் காலில் ஓடி வரவோ ஒரு நண்பன் இருந்தால், அதுவே பாதி நோயைக் குணப்படுத்திவிடும்.

நண்பனிடம் மட்டும்தான் ஒரு ஆண் தன் இயலாமையை, தன் பயத்தை, தன் பழைய நினைவுகளைப் பகிர்ந்துகொள்ள முடியும். அந்தப் பகிர்வுதான் ஒரு 'Emotional Safety Valve' போலச் செயல்பட்டு, இதய அழுத்தத்தைக் குறைக்கிறது.

நண்பர்களோடு சேர்ந்து அரசியல் , பழைய கதைகளை பேசுவது சேர்ந்து ஒரு டீ குடிக்க நடப்பது - இவை எல்லாமே மூளையைச் சுறுசுறுப்பாக வைத்திருக்கும். அந்தச் சிரிப்பும், வாதங்களும் அவர்களை மனரீதியாக இளமையாக வைத்திருக்கின்றன.

60 வயதில் தனியான ஒரு ஆணுக்கு மாத்திரையை விட நண்பனே அதிகம் தேவைப்படுகிறான். அதுவே அவர்களை மரணத்தின் பிடியிலிருந்து தூரமாக வைக்கிறது.

ஆங்கிலத் தேன் கவிதைகள்

வித்யா மனோகரீ
வல்லினச் சிறகுகள்

மொழிபெயர்ப்பு என்பது நுட்பமான கலை வடிவம். ஒரு மொழியில் உள்ள தகவல் அல்லது இலக்கியத்தை அதன் பொருட்சுவைக குன்றாது மற்றொரு மொழிக்கு மாற்றிப் பதிவு செய்வது ஆகும்.

எளிதாகச் சொல்ல வேண்டுமெனில் ,ஒரு மொழியில் எழுதப்பட்டதை அதன் பொருள் மாறாமல் அதேசமயத்தில் சொற்களை மட்டும் மொழிபெயர்க்காது உணர்வுகளையும் உரிய வகையில் மற்றொரு மொழியில் சொல்வதை மொழிபெயர்ப்பு எனலாம்.

அவ்வகையில் முனைவர் செ. இராஜேஸ்வரி அவர்கள் படைத்திருக்கும் 'ஆங்கிலத் தேன் கவிதைகள்' என்ற இத்தொகுப்பு தமிழ் மொழிக்குக் கிடைத்திருக்கும் ஓர் ஒப்பற்ற மொழிபெயர்ப்பு நூல் எனலாம்.

95 கவிதைகள் கொண்ட இத்தொகுப்பு நூல் சந்திரோதயம் பதிப்பகம் வாயிலாக 2022 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.

36 ஆண்டுகளாக மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டு வரும் முனைவர் இராஜேஸ்வரி அவர்களின் துறைசார் அறிவு முதிர்ச்சியை இத்தொகுப்பில் அவர் பயன்படுத்தியிருக்கும் தேர்ந்த சொல்லாடல்கள் வழி நாம் உணரலாம். வில்லியம் வேர்ட்ஸ்வோர்த், கிறிஸ்டினா ராசெட்டி, ராபர்ட் பர்ன்ஸ், P.B. ஷெல்லி, மாயா எஞ்சலோ, பப்லோ நெருடோ, ஜான் டிரைடன், லார்ட் பைரன், ஜலாலுதீன் ரூமி, ஷேக்ஸ்பியர், இரவீந்திரநாத் தாகூர் என்று இத்தொகுப்பில் இடம்பெறும் கவிஞர்கள் அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பா, ஆசியா என்று வெவ்வேறு கண்டங்களை சார்ந்தவர்கள். வெவ்வேறு பண்பாடுகள் வெளிப்படும் மூலப் படைப்புகளை நுட்பமாக மொழிபெயர்த்து தமிழில் அளித்திருக்கும் முனைவர் இராஜேஸ்வரி அவர்களுடைய இப்படைப்பு மிகச் சிறந்த வாசக அனுபவத்தை அளிக்கிறது என்றால் அது மிகையல்ல.

பள்ளிப்பருவத்தில் ஆங்கிலத்தில் படித்த வில்லியம் வேர்ட்ஸ்வொர்த் கவிதைகளைத் தமிழில் படிக்கும் போது ஆனந்தம் பன்மடங்காகப் பெருகுவதை உணர முடிகிறது. "கதிரறுக்கும் ஒற்றைக் குமரி" கவிதையில் தன் சோகம் தணிக்கத் தனியாகக் கதிர் அறுத்துத் துன்ப கீதம் இசைக்கும் குமரியின் குரலினிமையைச் சொல்லுமிடத்தில்....



"அரேபிய பாலைவனத்தில் நடந்து சோர்ந்து

நிழல் தேடும் பயணக் குழுவை

வரவேற்கும் இருவாட்சி பறவை கூட

இவளைப் போல் பாடியதில்லை.

தொலைதூரத்து ஹெப்ரைடிஸ் தீவுகளின்

கடல் அமைதியைக் குலைக்கும்

இளவேனில் குயிலின் இன்னிசைக்கும் கூட

இவளது குரலைப் போன்ற

கிளர்ச்சி கிடையாது.

என்கிறார்.

அந்தப் பெண்ணின் பாட்டைக் கேட்டு வியக்கும் கவிஞரின் மனநிலையை மொழிபெயர்ப்பில்,

"அவள் பாடுவதை பார்க்கிறேன்

அதைk கேட்கும் போது செயலற்று நிற்கிறேன்".

என்று மிக அழகாக கொடுத்திருக்கிறார் மொழிபெயர்ப்பாளர்.

அடுத்து, "டேஃபடில் மலர்கள்" கவிதை;

சமவெளிகள், மலைகள், பள்ளத்தாக்குகளில் தனித்துத் திரிந்த கவிஞர், டாஃபடில் மலர்களின் அழகில் மயங்கும் அற்புதமான உணர்வை கூறக் கூடிய இக்கவிதையில் மொழிபெயர்ப்பாளர்

"அந்த மகிழ்ச்சித் துணைவருடன்

ஒரு கவிஞனால் கொண்டாடாமல் இருக்க இயலாது".

என்று மொழிபெயர்த்துள்ளார். இதில் "மகிழ்ச்சித் துணைவருடன்" என்ற

சொல்லாடலை மிகப் பொருத்தமாக கையாண்டிருப்பது சிறப்பு.

வென்றாலும், தோற்றாலும் காதல் என்ற உணர்வு வெவ்வேறு வடிவங்களில் நிலைபெற்றிருக்கும் என்பதே இத்தொகுப்பின் மையச்சரடு. அவ்வகையில் காதலின் நிலைபேறு குறித்த உலகக்கவிஞர்களின் கவிதைகள் பலவற்றைத் தமிழ் அன்பர்கள் சுவைப்பதற்கு அளித்திருக்கிறார் நூலாசிரியர்.

காதல் பெருமூச்சு விடக் கலங்குவோர் யார்?

அது ஓர் இன்பப் பெருமூச்சு

காதல் ஒரு பொக்கிஷம்

அதில் வீணாவது எதுவுமில்லை

காதலிக்கப்படுவதும் இனிமை

அதில் கணக்குப் பார்க்க வேண்டாம்

அளவு பார்க்காமல் காதலிப்பதே இனிமை"

(மரியானாவின் காதல்)

காதலின் இனிமையைப் பேசக்கூடிய 'கிறிஸ்டினா ராசெட்டி' வரிகள் இத்தொகுப்பிற்கு அழகூட்டுகின்றன.

"இன்பம் தரும் உன் சாயலின் கணங்களை

எத்தனை பேர் நேசித்தனர்?

உன் அழகை

எத்தனை பேர் காதலித்தனர்?

உண்மையாகவும்

போலியாகவும்

ஆனால்

ஒருவன் மட்டும்

உனக்குள்ளிருந்த

உன் தூய ஆன்மாவை

நேசித்தான்

முகத்தில் மாறி வரும்

உன் கவலைகளையும்

நேசித்தான்"

(வயதாகும் போது)

ஆன்மாவை நேசித்தல் என்பது உன்னதமான அன்பின் வெளிப்பாடு.

டபிள்யூ.பி. யீட்ஸ் கவிதை அதைத்தான் பேசுகிறது.

"ஒளி மிகுந்த நேரங்களில்

நம்பிக்கையை இறுகப் பற்றிக்கொண்டேன்

இருள் வந்து தன்னுடையதென

என்னை மீட்டெடுக்கும் வரை"...

(தொந்தரவாக அமைந்த ஒலியின் பயணம்) - மாயா ஏஞ்சலோ

இக்கவிதையில், "இருள் வந்து தன்னுடையதென எனை மீட்டெடுக்கும் வரை..." என்ற வரி மிகவும் வலிமையானது. இங்கு இருள் ஒரு சக்தியாக, உரிமை கொண்டாடும் ஒன்றாக உருவகிக்கப்படுகிறது. இதனை மனச்சோர்வு, தனிமை அல்லது மனிதனின் உள்ளார்ந்த பலவீனம் போன்றவற்றைக் குறிக்கும் படிமமாகக் கொள்ளலாம். எளிமையான மொழியாக்கம் என்றாலும் படிமங்களில் ஆழம் உள்ளது. அதுவே கவிதைக்குத் தனித்துவமான தாக்கத்தை அளிக்கிறது.

ஒரு நாள் கூட

என்னை விட்டு

வெகு தொலைவு போகாதே

ஏனென்றால்

எனக்குச் சொல்லத் தெரியவில்லை

ஒரு நாள் என்பது

நீளமானது

இரயில்கள் எங்கேயோ நிறுத்தப்பட

இரயிலுக்குக் காத்திருக்கும்

காலி இரயில் நிலையம் போல

நான் உனக்காகக் காத்திருப்பேன்

என்னை விட்டு

ஒரு கணமும் நீங்காதே

சோகத்தின் சிறு துளிகள்

ஒன்று சேர்ந்து அலைந்து

தனக்கென்று

ஒரு வீடு தேடும்

புகை போல

என்னுள் இறங்கும்

தொலைந்த என் இதயத்தை

மூச்சுத் திணறடிக்கும்

(ஒரு நாள் கூட வெகு தொலைவு போகாதே) -

பப்லோ நெருடோ

''ஒரு நாள் கூட என்னை விட்டு வெகு தொலைவு போகாதே'' என்ற தொடக்கமே, உளவியல் சார்ந்ததாக உள்ளது. காதல் வயப்பட்டவனின் உள்ளார்ந்த அச்சத்தையும் அவன் அனுபவித்துக்கொண்டிருக்கும் தனிமையின் தீவிரத்தையும் வெளிப்படுத்துகிறது.

இந்தக் கவிதை, காதலை ஒரு இனிமையான அனுபவமாக மட்டும் அல்லாமல்,

காத்திருப்பு, அச்சம் தனிமை ஆகியவற்றின் கலவையாகக் காட்டுகிறது.

படிமங்களின் மூலம் உள்ளார்ந்த வெற்றிடத்தை உருவாக்கும் விதம், சிலிக்குயில் நெருடோ கவிதைச் சிறப்பைத் தெளிவாக உணர்த்துகிறது.

''சோகத்தின் சிறு துளிகள் ஒன்று சேர்ந்து... புகை போல'' இவ்வரிகளில் சோகத்தைத் துகள்களாகக் கொண்டு, அது மெதுவாக மனத்தில் பரவி, ஒருவித அடர்த்தியான உணர்வாக மாறுவதை உணர்த்துகிறது. இக்கவிதையில் படிமங்கள் மிக அழகாகக் கையாளப்பட்டுள்ளன.

மொழிபெயர்ப்பு என்பது மூல நூலின் ஆன்மாவைப் படைப்பின் இறுதி வரி வரையிலும் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். இயல்பான, தடையற்ற நடையழகில் வாசகர் உள்ளத்தைக் கவர வேண்டும். மொழிபெயர்ப்பாளரின் புதிய சொல்லாக்கங்கள் மூல நூலுக்குச் சிறப்பு சேர்ப்பவையாக இருத்தல் வேண்டும். பண்பாட்டுக்கூறுகளை மாற்றுவதில் மொழிபெயர்ப்பாளர் சீரான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். முனைவர் இராஜேஸ்வரி அவர்கள் இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, திறம்பட இந்நூலை மொழியாக்கம் செய்தளித்திருக்கிறார். அவருடைய படைப்பாற்றல் நூலின் பல இடங்களில் மிளிர்வதை வாசிப்பவர் நன்கு உணர்வர்.

மொத்தத்தில், ''ஆங்கிலத் தேன் கவிதைகள்'' என்பது மொழிபெயர்ப்பு இலக்கியத்தில் ஒரு பாராட்டத்தக்க முயற்சியாகும். இது தமிழில் உலகக் கவிதைகளை அறிமுகப்படுத்தும் பாலமாகச் செயல்படுகிறது. அவ்வகையில் ஆசிரியருக்கு வாழ்த்துகளைச் சொல்லி மகிழ்கிறேன்..

தமிழக அமைச்சரவையின் முதல் பெண் அமைச்சர் - லூர்தம்மாள் சைமன்

லயன் MJF வெங்கடேசன்
நோபல் ஹாட்ஸ் அரிமா சங்கம், கோவை

தமிழகத்தின் முதல் மீனவப் பெண் அமைச்சர்: லூர்தம்மாள் சைமனின் வரலாற்றுப் பயணம்

தமிழக அரசியல் வரலாற்றில் விளிம்புநிலை சமூகத்திலிருந்து வந்து, அதிகாரத்தின் உச்சத்தைத் தொட்டு, மக்களுக்காகப் பணியாற்றிய ஆளுமைகளில் லூர்தம்மாள் சைமன் மிக முக்கியமானவர்.

'திலப்பியா மீன்களின் தாய்' என்றும், 'உள்ளாட்சித் துறையின் சீர்திருத்தவாதி' என்றும் போற்றப்படும் இவரது வாழ்க்கை ஒரு வரலாற்றுப் பாடம்.

பிறப்பு மற்றும் ஆரம்பகால வாழ்க்கை

லூர்தம்மாள் சைமன் 1912 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 அன்று கன்னியாகுமரி மாவட்டம் மணக்குடி என்னும் மீனவக் கிராமத்தில் பிறந்தார். இவரது தந்தை அலெக்சாண்டர் கொழும்புத் துறைமுகத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தவர். நாகர்கோவில் புனித ஜோசப் பள்ளியில் ஆங்கில வழியில் கல்வி பயின்ற இவர், அக்காலத்திலேயே சமூக விழிப்புணர்வு கொண்டவராகத் திகழ்ந்தார். அரசியலுக்கு வரும் முன் சில காலம் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

விடுதலைப் போராட்டமும் அரசியல் பிரவேசமும்

இவரது கணவர் ஏ.எம். சைமன் (அலெக்சாண்டர் மேனுவேல் சைமன்), குமரி மாவட்டம் தமிழகத்துடன் இணையக் காரணமாக இருந்த 'மார்ஷல்' நேசமணியின் நெருங்கிய நண்பர். கணவருடன் இணைந்து கன்னியாகுமரி விடுதலைப் போராட்டத்தில் லூர்தம்மாள் தீவிரமாகப் பங்கேற்றார். இவரது துடிப்பான சமூகப் பணிகளைக் கண்ட பெருந்தலைவர் காமராஜர், 1957 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் குளச்சல் தொகுதியில் போட்டியிட இவருக்கு வாய்ப்பளித்தார்.

அரசியல் பிரவேசம் மற்றும் அமைச்சரவை பதவி

1957-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் குளச்சல் தொகுதியிலிருந்து காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அப்போது முதலமைச்சராக இருந்த காமராஜர், லூர்தம்மாள் சைமனின் ஆளுமையைக் கண்டு வியந்து, அவருக்கு உள்ளாட்சித் துறை மற்றும் மீன்வளத் துறை அமைச்சர் பொறுப்பை வழங்கினார். இதன் மூலம் தமிழக அமைச்சரவையில் இடம் பெற்ற முதல் மீனவப் பெண்மணி என்ற பெருமையை அவர் பெற்றார்.

மீன்வளத் துறையில் புரட்சிகர மாற்றங்கள்

லூர்தம்மாள் சைமன் மீன்வளத் துறை அமைச்சராக இருந்தபோது செய்த சீர்திருத்தங்கள் தற்கால மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு அடித்தளமாக அமைந்தன:

திலப்பியா மீன்களின் அறிமுகம்: தமிழகத்தின் நன்னீர் நிலைகளில் 'திலப்பியா' (Tilapia) வகை மீன்களை அறிமுகப்படுத்திய பெருமை இவரையே சாரும்.

"மக்களின் மீன்" என்று அழைக்கப்படும் திலப்பியா, ஏழை மக்களின் புரதத் தேவையைப் பூர்த்தி செய்ய இவரால் கொண்டுவரப்பட்டது.

மீன்பிடி விசைப்படகுகள்: பாரம்பரியக் கடலோடி சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால், மீனவர்களின் சிரமங்களை நன்கு அறிந்திருந்தார். மீனவர்களுக்கு மானிய விலையில் விசைப்படகுகள் மற்றும் நவீன வலைகளை வழங்கும் திட்டத்தை முன்னெடுத்தார்.

மீன் பதப்படுத்தும் நிலையங்கள்:

பிடிபட்ட மீன்கள் வீணாகாமல் இருக்க குளிரூட்டப்பட்ட கிடங்குகள் மற்றும் பதப்படுத்தும் நிலையங்களை கடலோரப் பகுதிகளில் நிறுவினார்.

உள்ளாட்சித் துறைச் சீர்திருத்தங்கள்

அமைச்சராக இருந்தபோது, தமிழகத்தில் பஞ்சாயத்து ராஜ் சட்டத்தை *(Panchayat Act)* வலுப்படுத்துவதில் முக்கியப் பங்காற்றினார். கிராமப்புற மக்கள் தங்கள் பகுதியைத் தாங்களே நிர்வகிக்கும் அதிகாரம் பெற்றிடவும், பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் முக்கியத்துவம் கிடைக்கவும் அவர் பல சட்டத் திருத்தங்களை மேற்கொண்டார்.

சமூகப் பணிகள் மற்றும் ஆளுமை

அதிகாரத்தில் இருந்தபோதும் சாதாரண மக்களுடன் எளிமையாகப் பழகும் குணம் கொண்டவர். குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்துடன் இணைந்த பிறகு, அந்தப் பகுதி மக்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு மேம்பாட்டிற்காகப் பல திட்டங்களைக் கொண்டு வந்தார்.

மக்களுக்கான பணிகள்

அமைச்சராக இருந்தபோது மணக்குடி பாலம், தூத்தூர் பாலம் மற்றும் பல ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கட்டிக் கொடுத்தார். மண்ணரிப்பைத் தடுக்க கடற்கரையோரங்களில் அலையாத்தி காடுகளை *(Mangroves)* வளர்க்கும் திட்டத்தை முன்னெடுத்தார்.

.மறைவு மற்றும் கௌரவம்

சுமார் *90* ஆண்டுகள் நிறைவாழ்வு வாழ்ந்த லூர்தம்மாள் சைமன், *2002* ஆம் ஆண்டு மே மாதம் *4* ஆம் தேதி இயற்கை எய்தினார். *1997* ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றத்தின் வைர விழாவின் போது அன்றைய முதல்வர் கலைஞர் கருணாநிதி இவரை அழைத்து விருது வழங்கி கௌரவித்தார். அண்மையில், அவர் பிறந்த மணக்குடி பாலத்திற்கு இவரது பெயர் சூட்டப்பட்டு அரசு கௌரவித்துள்ளது.

முடிவுரை:

எளிய மீனவப் பின்புலத்தில் பிறந்து, கல்வியாலும் உழைப்பாலும் உயர்ந்த லூர்தம்மாள் சைமன், இன்றைய பெண் அரசியல்வாதிகளுக்கு ஒரு கலங்கரை விளக்கம். அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர் செய்த மாற்றங்கள் இன்றும் தமிழகத்தின் கடலோர மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் பிரதிபலிக்கின்றன.

ஜெயஸஞ்ஜீவி

வை.மு.கோதைநாயகி அம்மாள்

அதிகாரம் - 1

"தாமோதரன் வந்து விட்டான்! இனி நம் காரியத்தைத் துவக்கலாம்" என்றான் தாண்டவராயன். இதைக் கேட்ட மற்ற சகாக்கள் "ஹஹ்ஹஹா!" என்று பெரிதாக நகைத்து ஆரவாரித்து "வாருங்கள்! வாருங்கள்!" என்றார்கள்.

தாமோதரன் அந்த அற்புதமான சபையில் வந்து அமர்ந்தான். "நேயர்களே! இன்று என்ன வேலையைச் செய்யத் தீர்மானித்திருக்கிறீர்கள். இதை இப்போதே முடிவு செய்து கொண்டால் நமக்கு நிம்மதியாகிவிடும்" என்றான்.

தாண்டவ:- நண்பா! ஒவ்வொரு தினமும் நாம் புதிய புதிய வேலைகளைக் கண்டு பிடித்துச் செய்து வருகிறோம். இன்று நாம் செய்யப் போகும் வேலை இதுவரையில் செய்ததைவிட மிகவும் நூதனமான வேலை! வேடிக்கையும் தமாஷும் நிறைந்த வேலை; அதாவது நமது பிரபல வியாயாரி பீதாம்பரம் இருக்கிறாரே அவர் ஒரு நல்ல குட்டியைத் தமக்கு பார்த்துத் தரவேண்டுமென்று கேட்டார். அதற்கு யோசித்தேன்; நமக்கு முக்கியம் பணமல்லவா! பக்கத்துத் தெரு பார்வதியம்மாளின் மூன்றாவது மகளுக்கு ஒரு காது மூளி; அதோடு ஒரு காலும் சற்று சாய்கால்தான்; அந்தப் பெண்ணை யாரும் கட்ட மாட்டேனென்கிறார்களாம். அந்த அம்மாள் கவலைப் படுகிறார்கள். அந்த விடத்து காரியத்தை நாணயமாகவே முடித்துவிட வேண்டும். இன்றைய வேலை இதுதான்" என்றான்.

தாமோ:- நண்பா! அக்கிரமக்காரர்களுக்கு எதுவுமே அக்ரமம் செய்யலாம். பீதாம்பரம் அக்கிரமக்காரர் அல்லவே! அவருக்கு எவ்விதம் நீங்கள் கெடுதி செய்யலாம்; இது சரியா?

தாண்ட:- போடா போ! எந்த நேரமும் நீ தருமத்தையும், சாஸ்திரத்தையும் வைத்துக் கொண்டு மாரடிக்கிறாய்! அதுவெல்லாம் இக்காலத்தில் எடுக்காது; தர்மமாவது. நீதியாவது. நமக்கு இதுபரியந்தம் சோறு போடுவ தெல்லாம் தருமமா! அதர்மமா! அதர்மம்தான் அன்னமிடும்; தர்மம் தடிபோல நிற்கும் என்று பெரிய உபன்யாசம் செய்தான். இன்னும் சற்று நேரம் எல்லோரும் பேசிக் கொண்டிருந்து பின்னர் ஒரு வித தீர்மானத்துடன் கூட்டம் கலைந்தது.

தாமோதரன் வீட்டிற்கு வந்தான். அவனுக்கு மிகவும் இளம்பிராயத்திலேயே தந்தை இறந்து விட்டார்! அவனுடைய தாயார் அவனிடம் உயிரையே வைத்திருப்பவள். அவர்களுக்கு நிலம் புலம் முதலிய வேறு எதுவுமே கிடை யாது. அவன் பிதா கொல்லத்து வேலை செய்து கொண்டிருந்தார். அதில் வரும் சொல்ப தொகையில் குடும்பத்தைச் சிக்கனமாக நடத்தி வந்தார்கள்; அவர் இறந்துவிட்ட பிறகு சிறு குழந்தையை வைத்துக் கொண்டு விதவையான பொன்னம்மாள் என்ன செய்வாள் பாவம்! தாமோதரனுக்கு 5 வயது ஆகும் வரையில் பொன்னம்மாள் அந்தக் குழந்தையின்மீது கொண்டுள்ள பிரேமையின் பொருட்டு நாத்தியின் வீட்டில் பட்ட கஷ்டங்களைக் கூறத் திறமன்று.

கணவன் உயிருடனிருக்குங் காலையிலேயே நாத்தனார் என்கிற தேவதையின் தனியாட்சியின் பரிபவம் கூறத் திறமற்று உலகில் விளங்குகின்றது எல்லோரும் கண் கூடாகக்கண்டவிஷயமாகும். கணவனைஇழந்து, கதியற்றுத்தவிக்கும்பொன்னம்மாளை அந்த தேவதை என்ன பாடு படுத்தியிருக்கும் என்பதைக் கூற வேண்டுமா!

வீட்டில் ஒரு வேலைக்காரியை வைத்துக் கொண்டால் அவள் கூட இத்தனை வேலைகளுக்கும், கட்டுப்பாடுக்களுக்கும் உடன்பட மாட்டாள். நமது பொன்னம் மாளோ அதற்கும் கடையளான பதவியில் நடத்தப் பட்டாள். நாத்தனாரின் வீட்டிலிருக்கும் சகலரும் அவளை ஓர் மனித உருவம் என்றே எண்ணாமல் நாய், கழுதை முதலிய ஜந்துக்களைப்போல எண்ணி நடத்துவார்கள்! தாமோதரன் சிறு குழந்தை யாகையினால் அழுதால் அதுவும் ஓர் பெரிய குற்றமாகி விடும் ! உடனே நாத்தியாகிய நாகம்மாள் நாகப் பாம்பைவிட அதிகமான சீற்றத்துடன் பிரஸன்னமாகி "எண்டீ! பொன்னீ! வேலைக் கள்ளிக்குப் பிள்ளைமீது சாக்கு என்றதை நீரூபிக்கின்றாயா! இந்த பாச்சா இந்த நாகத்தினிடம் பலிக்காது. இந்த சனியனை அழ விட்டால் அழுதுகொண்டேதான் இருக்க வேண்டும். அழுது அழுது சாகட்டும்; இதனால்

வேலையைச் செய்யாது ஏய்த்து விடலாம் என்று எண்ணாதே!'' என்று வாயில் வந்தவாறெல்லாம் திட்டுவாள்.

இந்தச் சொல்மாரி பொன்னம்மாளுக்கு தினம் கிடைக்கும் பிரஸாதமாகி விட்டது. அவள் உரத்துப்பதில் கூறாது. தன் விதியை எண்ணிக் காலத்தைக் கடத்துவாள். தான் என்ன விதமான கஷ்டங்களை அனுபவித்தாலும் தன் குழந்தைக்கு ஒரு குறைவு மின்றிக் காப்பாற்றினால் போதும் என்பதே அவளுடைய கருத்து. அதற்காகவே அவள் சகல கஷ்டங்களையும் சகித்துக் கொண்டு தன் குழந்தையை 5 வயது வரையில் வளர்த்து வந்தாள்; வர வர இம்சை அதிகரித்து அவளால் தாங்கக் கூடாது போய்விட்டது. தன்னுயிரெனப் பாவிக்கும் குழந்தையைச் சதா திட்டுவதும் அடிப்பதும்,பட்டினி போடுவதுமாக வதைக்க வாரம்பித்தாள். இந்த சங்கடம் அவளால் சற்றும் சகிக்க முடிய வில்லை. தப்பித் தவறி என்றாவது ''அக்கா! நான்தான் செக்கு மாடு போல உழைக்கிறேனே! எந்த வேலையாயினும் என்னிடமே பெற்றுக் கொண்டு இந்த பால் மணம் மாறாத பாலகனை இம்சிக்காமல் விட்டு விடலாகாதா?'' என்று கூறி விட்டாலோ, அன்று வீட்டில் நடக்கும் அமர்க்களம் மித மிஞ்சிப் போய்விடும்.

பின்னும் சில காலம் சென்றது. ''நான் என்ன சித்திரவதைக் குள்ளாயினும் பொறுப்பேன்! என் குழந்தையைச் செய்யும் இம்சைக்கு நான் சற்றும் பொறுக்க மாட்டேன். நான் இந்த வீட்டில் சொந்த மனிதர்களின் முன்னிலையில் இப்படி கஷ்டப் பட்டுக் குழந்தையையும் வருத்துவதை விட நாலு வீடுகளில் பிச்சை வாங்கியோ, பெருக்கி சாணி தெளித்து மெழுகிக் கோலம் போட்டு வேலை செய்தோ, சுண்ணாம்பு இடித்தும், செங்கல் தண்ணீர் முதலியன தூக்கிக் கொடுத்துச், சித்தாள் வேலை செய்தோ நம் குழந்தைக்குக் கால் வயிறு கஞ்சியை வார்த்து சந்தோஷமாய் வளர்க்கலாம். இந்த சனியன் பிடித்த வீட்டில் இம்சைப் படவேண்டாம். ஓடிவிட்டாள் என்ற கெட்டப் பெயரை நமக்குச் சூட்டி விடுவார்களே என்று அஞ்சி இதுகாறும் சகித்தேன். கடவுளறிய நாம் நிரபராதியாய் – பரிசுத்தமாய் – இருந்தால் போதும்; இவர்களுடைய கொடிய சிறையிலிருந்து தப்பிக்கும் வழியை இனித் தேடவேண்டும்'' என்ற தீர்மானம் அவள் மனத்தில் வேரூன்றி விட்டது.

இதற்குச் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்; தாமோதரனுக்குத் திடீரென்று ஜுரமும், வயிற்றுப் போக்கும் ஏற்பட்டது. அதற்கு ஒரு கஷாயங் கூட கொடுக்கச் சம்மதிக்காத நாகம்மாள் பின்னும் திட்டவாரம்பித்தாள்: இதைக் கண்ட பொன்னம்மாள் மிகுந்த துக்கமடைந்து நாகம்மாளைப் பார்த்து ''அக்கா! நான் இந்த 6 வருட காலமாக என் விதியை எண்ணி பட்ட கஷ்டங்கள் முற்றும் என்னுடைய இச் சிறு குழந்தையின் பொருட்டாகவே யன்றி வேறல்ல. அத்தகைய குழந்தைக்கு இத்தகைய ஆபத்தான உடம்பு வந்திருக்கையில் கூட நான் இங்கு அதைக் கவனிக்க முடியாமல் அடிமை வேலை செய்ய இனி சகிக்கக் கூடவில்லை. இதுவரையில் என்னையும் என் குழந்தையையும் வைத்து சம்ரக்ஷித்ததற்காக மனப் பூர்வமான வந்தனத்தைச் செலுத்துகிறேன்: நான் இம்மட்டுடன் போகிறேன்: என் குழந்தை பிழைத்தால் எனக்குப் போதும்: இல்லையேல் அவனுடன் என்னுயிரையும் மாய்த்துக் கொள்கிறேன்'' என்று

கூறியவாறு அவர்களின் பதிலை எதிர்பார்க்காமல் குழந்தையைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டு விட்டாள்.

இதைக் கேட்ட நாகம்மாள் "ஆகா! அடீ நன்றி கெட்ட பன்றியே! நாணங் கெட்ட நாயே! உனக்கு இத்தனை தலைத்திமிரா! உன்னை நான் இத்தனை வருடங்களாக வைத்து தண்ட பிண்டங் கொட்டியது போதாமல் போது நான் படுத்தியதாக அவதூறையும் என்மீது சுமத்தி விட்டுப் போகிறாயா! நாணங் கெட்டவளே! இரு; இரு! உன் கதியைப் பார்க்கிறேன்:" என்று சரமாரியான வசைமாரியைக் கொட்டித் திட்டினாள்:

பொன்னம்மாள் பதில் பேசாமல் கண்ணீர் வடிய குழந்தையைத் தூக்கிக்கொண்டு போய்விட்டாள். நோய் கண்ட குழந்தையுடன் எங்கே செல்வாள் பாவம்! தர்ம ஆஸ்பத்திரிக்குச் சென்றாள்: அங்கு பட்டினியாய்த்தான் இரண்டு நாள் கிடந்தவாறு குழந்தைக்குச் சிகிச்சை செய்தாள்: குழந்தைக்குச் சற்று குணமாயிற்று. பிறகு கால் நடையாக வேறு ஒரு ஊரை அடைந்தாள். அங்கு சிலரை அண்டி சில வீடுகளில் வேலை செய்து வந்தாள்.

நாகம்மாளுக்கு இச் செய்தி தெரிந்ததும் அந்த வீடுகளில் இவளை வேலைக்கு வைத்துக் கொள்ளாமலிருக்க வேண்டி தன் வேலைக்காரர்கள் மூலம் அவர்களிடம் பொன்னம்மாள் பெரிய திருடி என்றும், திருடிவிட்டுப் பலவிடங்களில் செருப்படி பட்டுச் சிறைவாசமும் செய்த பேமானி என்றும் கூறச் செய்து வேலையிலிருந்து தள்ளிவிடச் செய்தான்.

இந்த சூழ்ச்சியைப் பொன்னம்மாள் முற்று மறியவில்லை எனினும் தன் நாத்தியால் விளைந்த கேடுதான் இது என்பது மட்டும் தெரிந்து கொண்டாள்: அதற்குமேல் என்ன செய்வாள்! சில வீடுகளில் பிச்சை எடுத்தும் சித்தாள் வேலை செய்தும், வீடு பெருக்கியும் காலத்தைக் கடத்தலானாள்: அதிலும் மண் விழுந்தது.

பொன்னம்மாளின் மகன் ஏழு வயதையடைந்தான்; எனினும் நற்சகவாஸமா, படிப்பா எதுவுமே இல்லாமல் வீதியில் திரியும் பிள்ளைகளுடன் கோலி விளையாடுவதும், பளிசப்பளாம் ஆடுவதும் வீணே திரிவதுமாக ஆய்விட்டான். சதா சர்வ காலமும் உழைப்பிலேயே காலத்தைக் கழிக்கும் பொன்னம்மாள் அந்த பிள்ளையை முற்றும் கவனிக்க முடிவதில்லை. எனினும் இராக்காலத்தில் அவனைக் கண்டித்து துஷ்ட சகவாஸம் செய்யாம லிருக்கும்படி நற்புத்தி கூறுவாள்:

அதனாலும் அவளது குழந்தையின் புத்தி திருந்தவில்லை. "ஐயோ! நாம் இத்தனை கஷ்டங்களை யனுபவித்தும் குழந்தையினால் நமக்கு நற்காலம் பிறக்காது போய்விடுமோ! துஷ்ட சகவாஸத்தின் தோஷம் அவனை யழுத்திப் படுகுழி யில் தள்ளிவிடுமோ!" என்று சதா சிந்தித்து வருந்துவாள். நற்சகவாஸம் படிவதற்காக அந்தப் பையனை திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தாள்: பையன் அங்கு செல்வது போல பாவனை காட்டிவிட்டு விளையாடுவதற்கே சென்று விடுவான்.

சில தினங்கள் கழித்து இந்த திருட்டைப் பொன்னம் மாள் அறிந்துகொண்டாள்: நல்லதனத்திலும், கோபத்திலும் கூறிப் பார்த்தாள்; பலனில்லை. அதற்குமேல் பையனை ஓர் கடினமான வேலையில் புகுத்தி அவனை திருந்தச் செய்ய வேண்டும் என்று எண்ணினாள். அவளுடைய எண்ணம் முற்றும் தன் மகன் நல்ல நிலைமையை அடையவேண்டும், சத் சகவாஸத்துடன் புத்திமானாய் விளங்கவேண்டும் என்பதே.

ஒரு தினம் பையனை அழைத்து "அப்பா! தாமோதரா! உன் பொருட்டு நான் பட்ட கஷ்டமும், அடைந்த துன்பமும் கூறத் திறமன்று. நீ இவ்விதம் படிப்பு மில்லாது துன் மார்க்கர்களுடன் சகவாஸம் செய்துத் திரிவது என் மனத்தைப் புண்படுத்துகின்றது. நான் மட்டும் எத்தனை நாளைக்குத் தான் வேலை செய்து சிரமப்படுவது? நீ என்னவோ படிக்க மாட்டே னென்கிறாய்: வேலையாவது செய்து சம்பாதித்துக் கொடுத்தால்தான் இனி சோறு உண்டு, இல்லையேல் பட்டினிதான். இன்று முதல் இந்த ஊரில் குப்பை வாரும் தொழிலில் உன்னைச் சேர்த்து உன் பெயரும் கொடுத்துவிட்டேன். காலையும் மாலையும் குப்பை வண்டியுடன் சென்று குப்பை வாரினால் மாதச் சம்பளமாக ஏதேனும் கொடுப்பார்கள். அதைக் கொண்டு உன் காலத்தைக் கடத்தலாம்: குப்பை வாரி பிழைப்பதற்கும் கையாலாக வில்லை என்றால் அவமானம்: ஜாக்ரதை. இதோ! இந்த குப்பைக்காரன்தான் உன்னை யழைத்துச் செல்வான் ஜாக்ரதை; புறப்படு. உன்னை யழைத்துச் செல்லவே அவன் வந்திருக்கிறான்." என்றாள்.

இதுவரையில் பையன் கோலியாடிக்கொண்டும், தெருவில் திரிந்தும் வந்ததால் ஒரு விதமான உணர்ச்சியு ன்றி கட்டைபோல விருந்தான். குப்பை வாரும் தொழிலில் சேரவேண்டுமென்று கூறக்கேட்டதும் அப்படியே நடுங்கிப்போய்! "ஐயோ! நான்

குப்பைக்காரனாகவா... வாருகிறவனாகவா-ஆகவேண்டும்?" என்று அலறிப்போய் தம்பித்து நின்றுவிட்டான்.

கல்யாண வீட்டின் ஆரவாரத்தைக் கேட்கவேண்டுமா! மேளமும்,தாளமும், ஜனங்களின் அலங்கார அழகும், விவாக மண்டபத்தின் ஜோடிப்பும் மணமகன், மணமகள் ஆகிய தம்பதிகளின் கண்கொள்ளா சிங்கார வனப்பும் ஒருங்கு கூடி மக்களின் மனத்தைப் பரவசப் படுத்தியது. அத்தகைய விவாக வீட்டில் கணக்கற்ற பணியாள்கள் இருந்தனர். அவர்களில் நமது பொன்னம்மாளும் ஒரு வேலைக்காரி யாதலால் அங்கு அவளுக்கு சற்று நேரமேனும் ஓய்ச்சலே இல்லாமையினால் அங்குமிங்கும் ஓடியாடி அலைந்து கொண்டே இருக்கிறாள். ஆனால் இடை இடையே அவளது விழிகளில் நீர் பெருகிக்கொண்டிருந்தது. அதற்குக் காரணம் என்ன விருக்கும்?

அவ்விவாகத்தில் சம்மந்தி வீட்டு உறவினளாய் நாகம்மாள் வந்திருந்தாள். அந்த அம்மாளின் கண்ணில் படாமலே பொன்னம்மாள் மறைந்து மறைந்து வேலை செய்துவந்தாள்; எனினும் தன்னைத் தெரிந்துகொள்ளாதிருக்கும் பொருட்டுத் தான் கீழே விழுந்து அடிபட்டதாகக் கூறி நெத்தியில் பத்து போட்டு கட்டு கட்டிக்கொண்டிருந்தாள். பெண்டுகள் எல்லோரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கையில் நாகம்மாளை நோக்கி ஒரு அம்மாள் "ஏனம்மா! உங்கள் உடன் பிறந்தான் ஒருவன் முன்பு.."

நாகம்மா: ஆமாம்! இதற்கு இத்தனை இழுப்பென்ன? அவன் காலந்தான் முடிந்துவிட்டதே! உம்! தங்கக் கட்டியைத் தணலாக்கி யாயிற்று.

வேறொருத்தி :- ஐயோ! பாவம்! அவருக்கு ஒரு குழந்தை இருந்ததல்லவா! அதுவும் அதன் தாயும் எங்கே இருக்கிறார்கள்?

நாகம் :- ஐயோ! அந்த வெட்கக்கேட்டைக் கேட்க வேண்டுமா? எல்லாம் குட்டிச்சுவராகிவிட்டது. அவனோடு பிறந்த பாசத்திற்காக நான் அந்த அனாதைகளை வீட்டில் வைத்திருந்தேன்! இதற்காக நான் என் மாமியார் நாத்தனார் புருஷன் முதலியவர்களிடம் பட்ட பாடு கொஞ்சமன்று. அந்த அல்ப முண்டையின் சகவாஸம் வெகு மோசமாயிருந்ததை நான் கவனிக்கவில்லை. வெட்கக்கேடு! என் பர்த்தாவையே அவள் வலையில் போட்டு என்னைத் தனக்கு அடிமையாக்கிக்கொண்டு நடத்த எண்ணினாள். இதற்கு அவளுடைய தறிதலை மகனே உள் கையாக விருந்தது.யார்தான் தன் வாழ்க்கையைப் பிறருக்கு மனமொப்பிக் கொடுப்பார்கள்! அவளுடைய ஆதிக்கம் நிலைக்கும் முன்னர் இவளை ஒட்டிவிடத் தீர்மானித்து ஓட்டியும் விட்டேன் ! பிறகு சனியன் எங்கு சென்றதோ! எவ்விதமாயிற்றோ யார் கண்டது. இன்னொரு பிள்ளையும் பிறந்திருப்பதாயும், இன்னும் எங்கெங்கேயோ செருப்படி வாங்கியதாயும் கேள்வி யுற்றேன்! காசுக்குதவாச் செருப்பு எப்படியாயின் என்ன பயன்! என்று அவர்களைப்பற்றி நான் கட்டோடு விட்டுவிட் டேன்!" என்று சற்றும் வாய் கூசாமல் கூறினாள்.

அப்போது அந்த இடத்திற்குப் பக்கத்து விடுதியில் உட்கார்ந்து பொன்னம்மாள் பலாப்பழத்தைத் திருத்தி சுளை எடுத்துக்கொண்டிருந்ததால் அவள் செவியில் இம் மொழிகள் யாவும் விழுந்தன. மனம் அப்படியே அனலிடைப்பட்டமெழுகென உருகியோடிற்று. "ஐயோ! நம் விதி இவ்வித அபாண்டமான வார்த்தைகளைக் கேட்பதிலா வந்து முடிந்தது. ஹா! கடவுளே! உனக்கும் இவ்வுலகத்திற்கும் சம்பந்தமில்லையா! நான் பரிசுத்தமான இருதயத்தை யுடையவள் என்பதற்கு உன் மனச்சாட்சி சட்டம் இல்லையா! என்னுடைய நிரபராதித்தனம் உனக்கும் தெரியாவிட்டால் உன்னுடைய மகத்துவத்திற்கு என்ன பெருமையுண்டு? ஹா..... என்னப்பனே! ஜகத்ரக்ஷகா! என் பேதைத் தனத்தை, அறிவீனத்தை மன்னிக்கவேண்டும்! என் விதியும் என் பாபமும் அன்றோ இவ்விதம் பழி கேட்கச் செய்தன?" என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு தனக்குள்ளேயே எண்ணாததும் எண்ணித் தவித்தாள். அக்காரணம் பற்றியே கண்ணீர் வடிந்துகொண்டே இருந்தது.

இந்த விவாக வீட்டில் நாகம்மாள் சொல்லிய வார்த்தையைக் கேட்ட ஏனையோரும் இதை நம்பியும் நம்பாமலும் இதைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். பொன்னம்மாள் தனக்கு இவ்விஷயத்தில் சம்பந்தமிருப்பதாகவே காட்டிக் கொள்ளாமல் தன் விதியைத் துலைத்து வந்தாள். அன்று முதல் பொன்னம்மாளுக்குத் தன் மகன் விஷயமான கவலையே அதிகப்பட்டுவிட்டது. தன்னை வீணான பழி சுமத்தி வைப்பதற்கேற்பத் தன் மகனும் சோதாவாகிவிட்டால் தான் பட்ட சிரமம் முற்றும் விழலுக்கிறைத்த நீர்போலாய்விடுமே! என் செய்வது? உலகத்தில் ஒரு பெண்பிள்ளை அனாதையாக விருந்து பல விதமான கஷ்டங்களை வித்து ஒரு மகனைக் காப்பாற்றி விருத்திக்குக் கொண்டு வந்தாள்! என்ற பெயர் தனக்கில்லாது போய்விடுமோ! என்று ஏங்கினாள்.

இந்த ஏக்கத்தினால் தான் முன்னதிகாரத்தின் இறுதியில் கூறியபடி குப்பைக்காரத் தொழிலை மேற்கொள்ளும் படி தன் மகனுக்குக் கூறினாள்! இதைக் கேட்ட தாமோதரன் சில நிமிஷ நேரம் கல்லாய்ச் சமைந்துவிட்டான்; ஒன்றுமே தோன்றாமல் தவித்தான். "சீச்சீ! நாம் குப்பை வாரும் தொழிலைச் செய்வதா?" என்று வெறுத்தான். உடனே தன் தாயாரை நோக்கி, "அம்மா! நீ எத்தனையோ கஷ்டப்பட்டு என்னை வளர்த்ததாகக் கூறுகிறாயே! கடைசியில் என்னைக் குப்பை வாரும் தொழிலில் விட்டு நீ வேடிக்கை பார்ப்பது உனக்கு தருமமா! இது மட்டும் தாயார் செய்யும் கடமையா!" என்று கேட்டு முறைப்பாக நின்றான்.

இதைக் கேட்ட பொன்னம்மாள் சற்று கோபத்துடன் "அப்பா! நான் என்னாலாகிய சகல வித மார்க்கங்களையும் பார்த்தாகி விட்டது. இனிமேல் நான் என்ன செய்யக் கூடும்? தான் ஜீவனம் செய்வதற்கு மோசம், திருடு, அனியாயம் முதலிய எக்காரியமும் செய்யாமல் எவ்விதமான ஈனத் தொழிலைச் செய்வதிலும் குற்றமே இல்லை; அவமானமும் இல்லை. ஒவ்வொரு தொழிலுக்கும் தனி கௌரவ முண்டு. அப்படி அது அகௌரவமாகத் தோன்றினால் பட்டினிதான் கிடக்க வேண்டும். இல்லை! நீ உலகத்தவர்களைப் போல கண்ணியமாக வாழ வேண்டுமென்று நினைத்தாயானால்

பள்ளிக்கூடத்தில் படிக்க வாரம்பி; சோதாக்களின் சகவாஸத்தை அறவே விட்டு ஒழித்து விடு. இவ்விரண்டு மில்லா விட்டால் கட்டாயம் குப்பைக்காரத் தொழிலில் உன்னையும் சேர்த்து நானும் சேரப் போகிறேன்; அந்தத் தொழிலை நீ செய்யாவிடினும் நான் செய்யப் போவதால் உன்னை எல்லோரும் குப்பைக்காரி மகன் என்றுதான் சொல்லுவார்கள். உன்னைக் கண்டு அருவருப்பார்கள். "அடேய்! விலகிப் போ! விலகிப் போ!" என்று அதட்டு வார்கள். நான் இத்தனை கஷ்டங்களையும் சகித்துக் கொள்வதெல்லாம் உன் பொருட்டாகத்தான் என்பதை மறக்காதே." என்று கூறினாள்.

மூளையே கலக்க மடைந்து விட்டதுபோலப் பிரமித்து நின்ற தாமோதரன் விம்மி விம்மி அழத் தொடங்கினான். "அம்மா! நான்...வார மாட்டேன்! நீயும் குப்பைக்காரியாக வேண்டாம்; நான் இன்று முதல் சமத்தாகப் பள்ளிக் கூடத்திற்குப் போகிறேன். ஏம்மா! எல்லார் வீட்டிலும் பையன்களுக்கு அப்பா இருக்கிறார் ; சம்பாதிக்கிறார். நம்ப அப்பா எங்கே! ஏன் அவர் சம்பாதிக்காமல் நீ சம்பாதிக்கிறாய்?" என்றான்.

பொன்னம்மா:- அப்பா! உனக்கு இக் கேள்வி கேட்பதற்கு அறிவு வர இத்தனை வருடங்களாயிற்றா! நீ பண்ணிய பெரும் பாவமும், நான் செய்த கர்மமும் ஒன்று கூடி உன் தந்தையை உலகினின்று ஓட்டி விட்டது. அவர் இறந்ததனாலேயே நான். பட்ட துன்பம் சகிக்கொணாது. உன் பொருட்டு படாத கஷ்டங்களைப் பட்டும் நீ தத்தாரியாய் – தறிதலையாய் – சோதாவாகி விட்டால் என் வயிறு எவ்விதம் எரியும். அதை நீ அறிய வேண்டாமா! நீ நல்ல புத்திசாலி யாய் சத் சகவாஸத்துடன் பிரகாசித்தால்தான் என் மனம் சந்தோஷ மடையும். இல்லையேல் நான் சொல்லாமல் கிணற்றிலோ, குளத்திலோ விழுந்து உயிர் துறக்க வேண்டியது தான். உன் விதிப்படி உனக்கு நடக்கட்டும். இதுதான்

என்னுடைய தீர்மானம். அதை வெளியிட வேண்டாம் என்று எண்ணி இருந்தேன்; இன்று கூறிவிட்டேன்'' என்றாள்.

இதுவரையில் ஏதோ மாதிரி இருந்த தாமோதரனுக்குச் சற்று விசனமும், மனத்தில் அவனை யறியாத உணர்ச்சியும் உண்டாயிற்று. தாயை வணங்கி தான் இனி படிப்பதாகக் கூறி வாக்குக் கொடுத்தான். பொன்னம்மாள் சொல்ப சந்தோஷ மடைந்தவளாய் அவனை தர்ம பள்ளிக் கூடத்தில் சேர்த்தாள்; பையன் அன்று முதல் முன் போல மோசம் செய்யாது, விடாமல் படித்து வந்தான். எனினும் சினேகிதர்களுடன் சுற்றுவதை மட்டும் விடவில்லை. பொன்னம்மாள் எத்தனையோ சிரமப்பட்டு 8 வகுப்பு வரையில் அவனைப் படிக்க வைத்தாள். அதற்குமேல் ஒரு வருஷம் அவன் தோல்வி யடைந்து விட்டதால் அவனை இலவசமாகச் சேர்த்துக் கொள்ள மறுத்து விட்டார்கள். பணங் கட்டினால் படிக்கலாம். பணம் கட்ட வகை யில்லாமையினால் நிறுத்தி விட்டாள்.

தாமோதரனுக்குத் தன் தாயாரிடத்து அன்பு மட்டும் குறையவில்லை. எனினும் நாம் முன்பு கதை யாரம்பத்தில் கூறியபடி துஷ்ட சகவாஸத்தை விடாமலிருந்தான். அவர்களுடன் சேர்ந்து செய்த வேலையில் கிடைக்கும் பணத்தை அவர்களைப்போல துர்வினியோகம் செய்யாமல் தாயாரிடத்தில் தான் வேலை செய்து சம்பாதித்ததாகக் கூறிக் கொடுத்து வந்தான். பொன்னம்மாளும் அது விஷயத்தில் மிகுந்த சந்தோஷமே அடைந்திருந்தாள்.

தான் செய்யும் தொழில் அக்கிரமம் என்பதை தாமோதரன் அறிவான். இருப்பினும் ஜீவனோபாயம் நடக்கும் வழி அதுவாகி விட்டதால் அந்தத் தொழில் விவரத்தைத் தாயாருடன் கூறாது அடியோடு ஒளித்து விட்டான்.

ஒரு தினம் பொன்னம்மாள் கடைக்குச் சென்று திரும்பி வருகையில் தாமோதரன் அந்த சோதாக்களுடன் திரிவதைக் கண்டு விட்டாள். ''ஐயோ! இன்னும் இவன் இவர்களை விடவில்லையே! என்ன செய்வேன்? இந்தச் சோதாக்களுடன் திரிந்தவாறு எப்படி சம்பாதிக்கிறான்; அவர்களின் சகவாஸத்தின்படி மோசமாகச் சம்பாதிக்கிறானோ!'' என்று சிந்தித்தாள்; பிறகு வீட்டிற்குப் போய் விட்டாள்.

அன்று தாமோதரன் வந்ததும் ''அப்பா! தாமோதரா! நான் ஒவ்வொரு தினமும் உனக்குச் செய்யும் உபதேசமெல்லாம் விழலுக் கிறைத்த நீர்போலாய்விட் டதே! சோதாக்களின் சகவாஸம் உதவாதென்று உனக்கு எத்தனை முறை சொல்லி இருக்கிறேன். அவற்றைக் கேளாது நீ இன்னும் அவர்களுடனேயே இன்று கூடத் திரிந்ததை நான் கண்ணால் கண்டேனே! தாமோதர ! அவர்களெல்லாம் கொலைக்கும் அஞ்சாத பாதகர்கள். அவர்களுக்கு அக்கிரமத்தைத் தவிர வேறு தெரியவே தெரியாது. அவர்கள் செய்யும் ஒவ்வொரு காரியமும் விஷம் போன்றதே யாகும். அவர்களை உலகத்தோர் இழிவாகக் கூறுவதைக் கேட்க என்ன வெறுப்பாக விருக்கிறது. அந்த கோஷ்டியில் நீயும் கூடி இருந்தால் உன்னையும் அது பாதிக்காதா! ஐயோ! நான் எண்ணி எதிர்பார்த்தெல்லாம் வீணாகி விட்டதே!'' என்று பொன்னம்மாள் கண்ணீர் விட்டாள்.

தாமோ:- ஏனம்மா நீ விசனிக்கிறாய் ? நான் நம் குடும்பத்தை சம்ரக்ஷிக்க வில்லையா ! நான் சம்பாதிக்காமல் சோம்பேறியாகத் திரிய வில்லையே! அவர்களை நீ ஏன் நிந்திக்கிறாய்? இத்தனை நாளாக நாம் சாப்பிடுவது அவர்களால்தான் என்ற ரகஸியத்தை நான் இன்றே கூறுகிறேன். வயிற்றுப் பிழைப்பு நடத்துவதற்கு ஆதாரம் வேண்டாமா? இக்காலத்தில் எத்தனையோ படித்தவர்களெல்லாம் வேலை கிடைக்காது திண்டாடுகிறார்கள்! என்னைப்போல சொல்ப படிப்பாளிகளின் பாடு எப்படியாவது?. அம்மா! இந்த விஷயமெல்லாம் ……" என்று இழுத்துக் கூறி முடிப்பதற்குள் பொன்னம்மாள் அலறியவளாய் "ஐயையோ! குடி கெட்டுவிட் டதே! அடே பாவி! நீ ஏதோதொழில் செய்து சம்பாதிப்பதாகச்சொன்னதெல்லாம்சுத்தப் புளுகா! அவர்களுடன் சேர்ந்து திருடியும், கேவலமானதொழிலைச்செய்தும் இவ்விதம் நீ வயிறு வளர்க்காவிடில் பிராணனை விட்டிருக்கலாமே! உம். இனி உனக்குச் சொல்வதும், இந்த சுவருடன் சொல்வதும் ஒன்றேயாகும். எத்தனை குடிகளைக் கெடுத்தும், கற்புள்ள மங்கைகளின் வயிறை எரித்தும், அவர்கள் மனந்தவிக்கச் சாபமிட்டுத் தாக்கியும் சம்பாதித்து வந்த பொருளும் – அதனால் தின்ற சோறும் – நரகலுக்கு ஒப்பானதே யாகும்: நரகலைத் தின்று வயிறு வளர்த்தாயிற்றே யன்றி வேறு இல்லை. நான் முன் செய்தபடி என்னுயிரை மாய்க்க வேண்டியதுதான் மிச்சம்" என்று ஏதேதோ திட்டினாள்.

தாமோதரனுக்கு மீண்டும் குழப்ப மேற்பட்டது. அவன் முன்பு சிறுவனாக விருந்தான்: இப்போது பெரிய ஆண்பிள்ளை யாகிவிட்டான். ஆதலால் கவலை யதிகரித்து விட்டது. தன் தாயார் சொல்வதெல்லாம் ஒரு சமயம் பார்த்தால் சரியாயும் ஒரு சமயம் பார்த்தால் குற்றமாயும் தோன்றுகிறது. இதற்குத் தான் என்ன செய்வது. நமக்காக அந்த அம்மாள் பட்ட சிறுமையை எண்ணிப் பார்த்தால் தான் தன் சரீரத்தை அந்த அன்னைக்குச் செருப்பாகத் தைத்துப் போட்டாலும் போதாது என்ற எண்ணமும் உதிக்கிறது. தன் தாயாருக்கு விஷயம் தெரிந்துவிட்ட பிறகும் தான் அவளுக்கு விரோதமாக நடந்தால் ஒருகால் அவள் உயிரை விட்டுவிடுவாளோ! என்ற பயமும் பாதிக்கின்றது.

ஒரு விதமும் தோன்றாமல் அச்சமயம் வேறு எந்த விதமான பதிலும் கூறாது மவுனமாகவே சென்று விட்டான்.

அன்று பொன்னம்மாள் வீட்டில் சமையலே செய்ய வில்லை: இந்த மகனைத் தான் எவ்விதம் திருத்தக்கூடும் என்கிற ஓர் பெரிய யோசனையிலேயே மூழ்கித் தன் போக்காக அழுதவாறு படுத்திருந்தாள்: பிறகு ஒரு தீர்மானத்திற்கு வந்தாள். அந்த சோதாக்களைப் பற்றி யார் யார் என்ன விதமாகத் திட்டுகிறார்கள் என்பதைக் கண்ட டறிந்து தாமோதரனையும் ரகஸியமாக உடனழைத்துச் சென்று நேரிலேயே காட்டி "அப்பா! பேமானிகளின் பவிஷைப் பார்த்தாயா! அவர்களுக்குள்ள மரியாதை யன்றோ உன்னையும் சாரும்! இந்த உத்தமியின் வயிறெரிய இவள் புருஷனுக்கு தாசி வீட்டுப் பழக்கத்தை உண்டாக்கி குடியைக் கெடுத்ததன் விபரம் பார்த்தாயா! இந்த அம்மாள் இனி என்ன செய் வாள்? உங்களைச் சாபமிட்டுத் திட்டி விட்டுத் தன் பிராணனை மாய்த்துக் கொள்வதாகக் கூறியதைக் கேட்டாயா! இந்த உத்தமி அனாயாஸ மரணம் அடைந்தால் அந்த பாபம் யாரைச் சேருமென்று நினைக்கிறாய்? அவை முற்றும் உங்க ளையே சாரும்.

மனித சமூகத்தில் நீங்கள் பகிரங்கமாகக் கொலை செய்யவில்லை என்று நினைத்து நீங்கள் இறுமாப்பு அடையலாம். ஆனால் கடவுளின் முன்னிலையில் நீங்கள் கொலையாளிகளே யாவீர்கள். அவரிடத்தில் மறைக்கவும் உங்கள் சாமர்த்தியத்தைக் காட்டவும் ஒருகாலும் முடி யாது. இப்படிப்பட்ட கொடுமைகள் எத்தனை இடங்களில் செய்திருப்பீர்கள் என்பதை நீயே சிந்தித்துப் பாரு" என்று கூறி, அடுத்தடுத்து சில சம்பவங்களை நேரிலேயே காட்டினாள். தாமோதரனை வெளியி லனுப்பாமல் காவலிருப்பது போல விருந்து அவனை வீட்டிலேயே மடக்கிப் போட்டு நற்புத்திகளைப் புகட்டினாள்; உபதேசங்களைச் செய்தாள்: தன் மகன் நல்வழிப்பட்டால்தான் தான் ஜீவிப்பது; இல்லையேல் மரிப்பது என்ற உறுதியைக் கூறிவிட்டாள்.

தாமோதரனின் மனம் இரு வகையிலும் செல்லாது குழம்பி நின்றது. தாயாரின் உயிரைக் காப்பாற்ற வேண்டுவதே தன் கடமை என்றதைமட்டும் அவன் தீர்மானமாகக்கொண்டான். தன்னுடைய சினேகிதர்களோ நிமிடத்திற்கு நிமிடம் வந்து கூப்பிடுகிறார்கள்; தாயாரோ கண்டித்ததுடன் அவர்களின் நேசத்தினால் விளையும் கேட்டை விளக்கிக் காட்டியும் இருப்பதால் அவன் முகம் மாறுதலையே அடைந்தது. ஆதலால் இனி தான் பிச்சை எடுத்தேனும் நன்மார்க்கத்தில் ஒழுகுவதாகத் தாயாருக்குச் சத்தியம் செய்து கொடுத்தான். அதன் பிறகே பொன்னம்மாளுக்கு மனது சற்று நிம்மதியாயிற்று.

ஒரு தினம் பொன்னம்மாள் தன் மகன் ஜீவனத்திற்கு வகை தெரியாமல் தவிப்பதைப் பார்த்துக் கண் கலங்கினாள்: எந்த விதம் ஜீவனத்திற்கு ஆதாரம் கிடைக்குமென்று ஏங்கினாள். தன் பாட்டனாரின் பூர்வீகமான பட்டிக்காட்டிற்குச் சென்றால் வயலில் உழும் வேலையாவது ஏதேனும் கிடைக் கமோ என்கிற எண்ணம் உண்டாகியது. ஆதலால் தாமோதரனையும் உடனழைத்துக் கொண்டு கால் நடையாகவே நடந்து அந்த கிராமத்தை யடைந்தாள்.

தன் பாட்டனாரின் வம்சமே விளங்காமல் பூண்டற்று விட்டதால் அவருடைய வீட்டில் அன்னியர் வாசம் செய்து கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் இவளுடைய பாட்டனார் நாட்டு வைத்தியம் செய்யும் முறையில் மிகவும் பிரக்யாதியுடன் விளங்கினாரெனினும் அவருடைய காலத்திலேயே அவருக் கேற்பட்ட கஷ்டம், நஷ்டம், தேக அசவுக்யம் முதலிய பல விதமான தொந்திரவால் வைத்தியத் துறையில் உழைக்கக் கூடாமல் போய்விட்டது. அதை அப் படியே விட்டுவிட்டார்கள்: அக்காலையில் பொன்னம்மாள் மிகவும் சிறியவளாகையினால் ஏதோ கனவு கண்டதுபோல நினைவிருந்தது. பொன்னம்மாளின் தாயார், பாட்டி முதலியோர்கள் சிறிய வயதில் இறந்து விட்டதனாலேயே பொன் னம்மாள் நாத்தியிடம் நலிய நேர்ந்தது.

அந்த கிராமத்திற்குச் சென்றதும் பொன்னம்மாளுக்குத் தான் பாலியப் பருவத்தில் இந்த வீட்டிற்கு வந்திருந்ததும் விளையாடியதும் சகலமும் நினைவிற்கு வந்தது. அந்த வம்சத்திற்குத் தன்னை யொருத்தியைத் தவிர வேறு லாது போய்விட்டதே!

கடன்காரர்களின் தொல்லையினால் கொஞ்சம் நஞ்சம் இருந்த பூமியும் வீடும் போய்விட்டதே! என்று எண்ணி விசனித்தாள். அவ்வீடு முற்றும் சுற்றிப் பார்த்தாள்.

தன் பாட்டனாரின் தகரப்பெட்டி யொன்று அங்கு ஓட்டையாகிக் கிடந்ததாக அவ் வீட்டுக்காரர்கள் கொண்டு வந்து "இதுதான் இந்த வீட்டுக்காரரின் பெட்டியாம்; அவருக்கு எதோ கெட்ட வியாதி வந்து இறந்துவிட்டாராம்! அவருடைய ஓலைச் சுவடிகளும், சில கந்தைத் துணிகளும் இதில் கிடக்கின்றன. இதை எடுத்து நெருப்பில் போட்டு நினைத்தோம்; அதற்குள் இவ்வூர் மணியக்காரர் அதைத் தடுத்ததோடு 'கிழவரின் பேத்தி ஒருத்தி இருக்கிறாள்; அவளிடம் அதைக் கொடுப்பதுதான் நியாயம்' என்று கூறினார். நீங்கள் யார், எங்கே இருப்பது என்கிற விவரமே தெரியாம லிருந்ததால் இதைப் பரண்மீது போட்டுவிட்டோம். குப்பைக்குக் கூட உதவாத சாமான்கள்தான் அதிலிருக்கின்றன. என்று" கூறினார்கள்.

அதைக் கேட்ட பொன்னம்மாவுக்கு மிக்க விசன முண்டாகிவிட்டது. 'இப்படி வமிசமே இல்லாது போய் விடுமா! ' என்று வருந்தியவாறு அப்பெட்டியை அப்படியே எடுத்துக்கொண்டாள். அங்கு வேலைக்கு ஏதேனும் ஆதாயம் கிடைக்குமோ என்று அலைந்ததெல்லாம் வீணாயிற்று. "இங்கிருப்பவர்களுக்கே வேலை யகப்படாமல் தத்தளிக்கையில் வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு எவ்விதம் வேலை கொடுக்க முடியும்? விளைவு வாசி ஒன்றுங்கிடையாது. கிஸ்தி கட்டுவதற்கும் திண்டாட்டமாக இருக்கிறது" என்று கூறியனுப்பிவிட்டார்கள்.

பொன்னம்மாள் தன் போதாக் காலத்தை எண்ணி மீண்டும் தன்னிருப்பிடம் வந்து சேர்ந்தாள். தான் கொண்டு வந்த பெட்டியை முழுதும் கிளறிப் பார்த்தாள். அதில் கிழிந்துபோன புத்தகங்களும், ஓலைச் சுவடிகளும் கிடந்தன! அவைகள் புராண விஷயமான புத்தகங்கள். அப்பெட்டியை முற்றுங் கிளறுகையில் அதன் அடிப்பாகத்தில் ஏதோ ஒரு விதமான மேடு தட்டுபட்டது. அதிலிருந்து அப்பெட்டியில் கள்ள அறை இருப்பதாகத் தெரிந்துகொண்டு தன் வீட்டுக் கதவைத் தாளிட்டுக்கொண்டு அதை நன்றாகக் கவனிக்கத் தொடங்கினாள்.

பெட்டியை நாற்புறமும் திருப்பியும் ஆட்டியும் பார்த்து அந்த கள்ள அறையைத் திறந்துவிட்டாள். அதற்குள் பணமிருக்குமோ என்கிற பேராவலுடன் திறந்தாள். இவள் எண்ணியபடி இல்லாது ஒரு கவரும் காகிதமும் இருந்ததைக் கண்டாள். பெரிய ஏமாற்றத்தை யடைந்து அதைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினாள். அது ஓர் பெரிய மகா யோகியினால் கூறப்பட்ட அவுடதங்கள் செய்யும் முறைகளும், மூலிகைகளின் பெயர்களும், அவை எங்கெங்கு கிடைக்கும் என்றதும் விவரமாக எழுதிய கடித மென்பதை யறிந்தாள்! அதைப் படித்ததும் முதலில் பொன்னம்மாளுக்குச் சந்தோஷமே உண்டாகவில்லை. "ஆமா! இந்த ஆகாத காரியத்திற்கு இத்தனை பந்தோபஸ்தும், கவரும் எதற்கு?" என்று வெறுப்புற்றுக் கூறியவாறு அப்படியே போட்டுவிட்டாள். பிறகு சற்று நேரங் கழித்து அதைக் கவனித்தாள். அதோடு மற்றொரு கடிதமிருந்தது. அது பின் வருமாறு:-

"இந்த அவுடத முறைகள் சாமானிய அல்பர்களால் தயார் செய்யப்பட்டவையல்ல! இவை மகா யோகி யொருவரால் தயார் செய்தவை! அந்த யோகி இவற்றைத் தாமே கண்டுபிடித்துக் கையாண்டு வந்தார்! அவருடைய காலத்திற்குப் பிறகு இவற்றை யோர் அறிவற்ற பெண்மணி தன் வசமடைந்தாளாதலால் இவற்றின் மகிமையை உணராது அசட்டையாய்ப் போட்டு விட்டாள். நான் அக்காலை நாட்டு வைத்தியம் செய்து கொண்டிருந்ததால் அந்த அம்மாள் வீட்டிற்கு வைத்தியம் செய்யும் முறையில் சென்றேன்; அப்போது மேற்படி பரம அவுடதங்களின் முறைகளடங்கிய காகிதம் இருந்ததைக் கண்டு அம்மாளிடம் கேட்டு பெற்றுக்கொண்டு வந்தேன்! இந்த மருந்துகளைத் தயார் செய்வதற்குள் எனக்குப் பலவிதமான கஷ்டங்களும் நஷ்டங்களும் வந்துவிட்டன. நானாக ச்வாதீனமாய் எந்த காரியத்தையும் செய்ய முடியாத விதமாய் வியாதியும் வந்துவிட்டது. பிறரைக் கொண்டு இதைத் தயார் செய்ய எண்ணினேன். அந்த மனிதன் என்னையே மோசம் செய்துவிடவும், தானே அதன் லாபத்தை யடையவும் எண்ணினான். உடனே நான் கண் விழித்துக்கொண்டேன். எனக்கு ஒரு கால மில்லாவிட்டால் ஒருகாலத்திலாவது கஷ்டம் விடியாதா, அப்போது செய்துகொள்ளலாம் என்று நான் இக்காகிதத்தை உடனே ஒரு பெட்டிக்குள் கள்ள அறையில் பத்திரப்படுத்திவிட்டேன்! அதை என்னிடம் இருப்பதை யறிந்த மேல்படி ஆசாமி அதைத் தான் பெறுவதற்கு எத்தனையோ முயற்சி செய்தான். என்னைப் பல விதத்திலும் மிரட்டிப் பார்த்தான். ஒன்றிற்கும் நான் அசையவில்லை. இந்த முறை இந்தப் பாவியைத் தவிர வேறு யாரிடம் கிடைத்தாலும் எனக்குச் சம்மதந்தான். அவனுக்குக் கிடைக்கக் கூடாதென்று எனக்குத் தோன்றிவிட்டது. அவனால் எனக்கு எப்போது என்ன தீங்கு நேருமோ என் பயம் என்னைச் சூழும்படியாக அவன் செய்துவிட்டான். ஆதலால் இக்கடிதத்தையும் எழுதி வைக்கிறேன். இது யாரிடம் அகப்பட்டாலும் என் சந்ததியாரில் யாரேனும் இருப்பின் அவர்களிடம் சேர்ப்பிக்கவும். ஒருவருமே இல்லையெனில் இதைக் கண்டு எடுக்கும் யாராயினும் இந்த மருந்துகளைத் தயார் செய்யும் முன்பு "ஜெயவீர யோகியார்" என்றவரே இதைக் கொடுத்தவராதலால் அவருடைய ஞாபகச் சின்னமாக அவரை ஆவாஹனம் செய்து, பூஜை பண்ணி அதற்கு மேல் ஆரம்பித்துச் செய்யவேண்டும். இது முக்கியமான வேலை என்பதை மறக்கவேண்டாம். எனக்கு அதற்குள் சரியாகிவிடின் நானே இவற்றைச் செய்வதில் தடை இல்லை. ஆண்டவனருள் எப்படியோ!

சாமிநாதன் வைத்தியன்."

என்றதைப் படித்ததும் பொன்னம்மாளுக்கு ஒரு புதிய உணர்ச்சி வந்தது. அவளுடைய சிறிய பிராயத்தில் கண்ட பாட்டனாருடைய உருவம் எதிரில் தோன்றி காட்சி கொடுப்பதுபோன்ற தோற்றம் உண்டாகியது. அவளையறியாது பழங்கதைகளை எண்ணியும், கடிதத்தைப் படித்த மனோ வேகத்திலும், உருவத்தைக் கண்ட உணர்ச்சியிலும் அப்படியே கலக்கமும், குழப்பமும் அடைந்து ப்ரமைகொண்டு விழுந்துவிட்டாள்.

– தொடரும்..

மரணித்த மலர்

ரோஜாவே
உனக்கு துணிவுடன் இப்பெயரைச் சூட்டியவர்
யார்?
உன்னிடம்
மலர்ச்சியும் இல்லை மென்மையும் இல்லை
இனிமையும் இல்லை
வெளிறிப் போய்க் கடினப்பட்டு
வறண்டு
வற்றல் கோதுமை போல் இருக்கிறாய்!
ஏழாண்டுகள் அடைக்கப்பட்டுக் கிடந்ததில்
உன் பெயர்கள் உன்னை வெட்கப்படுத்தின
உன் முட்களுக்கிடையே புகுந்து வந்த தென்றல்
உன் நறுமணத்தைச்
சந்து முழுக்க
நாள் முழுக்க
பரப்பி மகிழ்ந்தது.
இப்போது அந்தக் காற்று இங்கே வீசினால்
இனிமையின்மையே முந்தும்.
உன் கவர்ச்சியான தாழியின் மேல் விழுந்து,
தன் மகிமையைக் கலந்து,
தன் கதிர்கள் மலரும் வரை,
மலர் கருகும் வரை
உன் மீது வெயில் அடித்தது
ஆனால் இப்போது
உன் எந்த வண்ணமும் அதில் ஒளியேற்ற
வில்லை
உன்னை ஒரு ஆக்கிய பனித்துளி
முதலில் வெண்மையாகவும்
பின்பு இளம் சிவப்பாகவும் உன்னை மாற்றியது.
உன் சிவந்த இதழ் மீது
அது விழுந்து கிடந்தது!
இப்போது பனித்துளி விழுந்தால்
விழுந்த இடத்தில்
உன்னை கருஞ்சிவப்பாக்கி விடும்.
உன் இதழ்களின் தூய நுனியில் அமர்ந்து
தன் சிறிய கால்களில் இருந்து
உணர் நரம்புகளை நீட்டி உன்னை ஒளிர்வித்து
தன் அடையில் தேன் சேர்க்க
வரசனை அம்பர் கட்டியை உருவாக்க
உன்னை உறிஞ்சி எடுத்த தேனீ
இப்போது உன்னைக் கடந்தால்
பரரா முகமாய் பறந்து விடும்
ஜூலியா தன் நடனத்தின் போது
அணியும் புன்னகை பூக்கும் ரோஜாக்களை விட
பூத்திருக்கும் ரோஜாக்களை விட
செத்து நிற்கும் ரோஜாவான உனக்குத்தான்
என் இதயம் மிகவும் கடன் பட்டுள்ளது
என் இதயத்திலே தங்கிவிடு
அது உனக்காக உடைந்து நொறுங்கும் முன்பே.

எலிசபெத் பேரட் பிரௌனிங்
மொ.பெ. முனைவர் செ. ராஜேஸ்வரி

ARANYANI

VIJENI

CHAPTER - 13

1439, Purattaasi Maatham, Siddhārthi Aandu

Valasai Kingdom

Varaagur

"You dog!" Yogendhra yelled. "How much longer to reach the palace?"

"Ju-just a few-few more miles, Your Majesty." The mahout seated atop the elephant trembled, his every muscle tensed.

The king of Valasai along with his son was returning after hunting in the snow-capped mountains, a quarterly pleasure for the royals.

At the head of the procession was a man bearing the kingdom's banner fluttering in the wind, a portrait of a charging boar in the middle of the red flag. Following him were men in red turban hitting the kettledrums announcing the arrival of the king. Yogendhra was on an elephant, decorated with a silk cloth over its head, and Prince Jitendhra rode beside him, on his white horse, bearing a plume over its head. Behind them, several slavery men in teams carried the carcass of hunted animals attached to the long staffs on their shoulders. Fifteen knights on their black steeds brought up the rear of the procession.

The king turned towards his son. "I cannot wait to taste that meat..."

"Yes, yes, Father! That one—" The heron feathered turban turned behind, and pointed at the carcass of a white bear dangling in the middle, its feet secured to the long staff. "—I want a coat made of the skin of that animal, Father."

"Yes! Yes!" The king smiled, twisting the turned-up tip of his thick moustache. "You earned it my son!"

As the procession passed through the massive gate, the guards with spears lined along the ramparts gave a loud cry and saluted. The white stoned palace with its many pointed towers, and iron spikes gave it the look of a terrorised graveyard, a place known for cruelty and torture.

The elephant that had Yogendhra on its back gracefully moved from the gate until the palace door. It walked past the lined warriors making the royal salute and knelt for the majesty to alight.

"Hey dog!"

The mahout jolted and without thinking jumped down and knelt on fours before him. Yogendhra stepped on him. The mahout swayed, and his hands and legs trembled under the weight of the stout king.

"Will you do your duty only when called upon?" The king kicked him, sending him flat to the ground. "Guards!" he bellowed, and instinctively two warriors stood in front of him, bowing low. "Take this dog away and teach him a lesson that he will never forget."

The lean man got up, face covered with mud. "Mercy Maharaja," the rider cried, tears filling his eyes. "Please spare me, Your Highness." He pressed his hands together, begging for forgiveness. "Spare me... spare me... please..."

The king raised his palm, and without paying any heed to the mahout's piteous cries, the guards dragged him to the underground cell to fulfil their ruler's bidding.

Beautiful young girls lined the palace corridor, welcoming the king and prince with flowers and perfume. Yogendhra and Jitendhra made their way towards their chambers, allowing their footsteps to echo off the building, announcing their arrival to all in the palace.

The royal chamber was floored with pristine white marble and was big, so big that an entire village could be accommodated inside it. All the furniture was handmade by master artisans. Nothing ever got dirty. The royals had never seen even a speck of dust in the palace. The air was scented with fresh flowers every day of the year, yet they had never seen a flower ever die or wilt.

"Eh!" Jitendhra clouted his young assistant across her head. "Wake me up when the meal is ready," he ordered.

The girl lifted the gold jari antariya from his ankle and removed his sandals. She got up to her feet, bowed, and left the chamber, taking his sandals to wash in rose water.

***

The royal kitchen bustled with activity; any time now the royals would be here for the meal. The cook admonished one of his minions for adding more salt in the buttermilk. When he had instructed to add only one and a half spoon, the minion had added two spoons. He did not have the right to taste it too; thankfully, it was a spiced drink. "Add more spices and churn it well, it will compensate," he ordered.

"Do not puff the flames." He directed at another minion squatting at the hearth, fanning the flames. "The fat from the meat will cause the flames to shoot up, it will be sufficient. And you—" He pointed at another minion rotating the meat on the metal rod. "—rotate it well and roast it on all sides, do not miss even a nugget of the meat."

He scrupulously inspected the array of dishes placed on the peacock shaped golden table. Everything had to be perfect, and he cannot take chances, especially when the royals returned from hunting, with high expectations to devour the meat.

The cook went back to the kitchen, turned to a girl stirring the ladle inside a pot filled with payasam. "Did you make the mint chutney?"

"Oh!" The girl closed her mouth with her palm. "I-I forgo—"

"You senseless girl!" The cook fumed with anger. "The royals will not have the meat without the chutney! Are you planning to take the life out of me?"

She shuddered and cringed her small bird-like body. "Sorry Master, I—"

"Do not waste time, you fool!" he screamed again. "They will be here anytime, hurry!"

Handing the ladle to another girl, she hurried towards the ammikallu, the pair of black stones. "Radha!" she yelled, hastily placing the chopped ingredients over the heavy rectangular base stone. "Peel the garlic cloves." She started rolling the cylindrical stone over the base, crushing the ingredients into a paste.

"Soon girl, soon," she hushed, "I can hear their footsteps..."

"Yes, yes, Pushpa. Done, almost done, just one more clove to peel."

“Did I add salt Radha? What did I put? How many chillies?” The sheer panic made her gibber. “Oh my god! I am going to be killed by the king today!”

The king and prince were seated, silver plates in front of them. While the cook poured liquor into their golden goblets, his assistant began to serve the meal.

“No, not the rice!” The king shook his head. “I do not want to fill my stomach with rice! Bring the meat,” he ordered.

“At once, Your Majesty.” The cook clapped his hand. Two men brought a large platter, filled with roasted meat garnished with herbs, and placed it on the table.

Once the finest pieces were served, the king looked up at the cook in expectation.

The cook shuddered. “Yes, yes... Your Majesty. The chutney is being prep—”

“It is here, Master!” Pushpa rushed in with a bowl, panting and puffing, and placed it down near the meat platter.

“You fool, what are you waiting for? Will the chutney crawl itself to my plate?”

“Mercy Highness, Mercy.” The cook immediately served the chutney on their plates. He walked to the corner and bowed down, waiting for further service.

As soon as the royals began to eat, Pushpa rushed back to the adjoining kitchen.

“Did you go on time?” Radha asked.

“Yes, yes...” She knotted and unknotted the pallu of her sari. “I think I added extra chilli Radha. The prince will not be able to bear it, and he is—”

“Who made this chutney?” She heard the prince’s voice booming in the dining area, and her mouth rounded in horror.

“It is over, Radha! Over! They are going to behead me!” she cried over her friend’s shoulder.

One of the minions entered the kitchen. “Pushpa, the master is calling for you.”

Tears whelming in her eyes, she followed the minion to the dining area. “Maharaja, I did not—”

He raised his hand. “Did you make this chutney?”

“Yes, Maharaja.” She gulped and stood staring at her toes.

“Hmm, it is very good.” He signalled the cook for a second helping. “Make sure you prepare it exactly like this hereafter!”

The cook smiled and turned towards her, indicating that everything went well, but she knew it did not. In a rush, she had no idea what ingredients she had put. She was doomed!

***

Inside the durbar, seated on his throne, Yogendhra demanded, “Summon the cases one by one.”

Instinctively, one of the ministers came forward with the charge sheet. “Case 1: Subramanian.”

The guards dragged a small boy handcuffed in chains, into the durbar. They made him stand on a small circle podium meant for offenders.

“When our kaavalar went to collect the taxes, this siruvan’s mother gave less than asked, on demanding for more, he had assaulted our kaavalar with a stone.” The guard ended with a bow and retired to his position.

“What atrocious!” The king stomped his feet on the semicircular dais. “This worthless crap had the guts to hit my men?”

The little boy winced at the shrillness in his voice. “Mercy Maharaja, the kaavalargal abused my mother in front of my eyes. I got angry and hit them with a stone. I know it is my mis-mistake, but please forgive me, Your Majesty.”

“Forgive?” He sneered and cast a withering look at him. “Despite knowing about me, you have performed this horrendous act! There is no room for forgiveness in my durbar.” He looked to his right at the guards waiting to fulfil his order. “Cut his right hand and make him serve in the stable!”

“Mercy Highness!” he cried, tears flowing down his bony face and hands folded in a plea. “Please, I will never do it again, please, please, Maharaja, mercy... merc—”

He raised his hand. “Am I here to listen to this stupid laments?”

The guards immediately rushed to him. The boy fell, rolling on the marble floor, imploring, pleading, crying, begging, and requesting to forgive him. When the stonehearted guards dragged him by his legs towards the exit, a woman stormed out of the crowd, pushing and shoving everyone in her way.

"No!" she cried, "Highness, please forgive my son, please..." She knelt in front of him. "I have no one left, Maharaja! No one... he will not do—"

"No one?" The king leered at the woman. "Then I think you should serve too, but not in the stable!"

Jitendhra burst out laughing.

The king laughed too and waved at the guard to take him away. "Make sure you punish him in front of everyone. The people should know what will happen if anyone outwits my rule." He tilted his head back and playfully pinched the cheeks of a lady who whisked a peacock feather fan over his head.

Seeing her son being dragged by the floor, she gave a piercing shriek, beating her palms on her chest. "My kanna... my kanna... my child... Kannaaaa" She kept wailing and ran behind the guards.

In minutes, the durbar drowned into deep silence with little murmurs in the crowd. Breaking the stillness, the king asked, "Is there any other case to be dealt with?"

The guard came forward and bowed at him. "No Majesty, that is all for today."

"Then why are these foolish inhabitants still here?"

Immediately, the guards ushered all the people towards the door. There were commotions as people left the durbar talking about the terrifying boy's incident.

"Eh ministers."

All the ministers who had started to leave the durbar turned around at the king.

"You all stay back." The king leaned back on his throne. "How is the spring palace construction going on?"

Drawing in a deep shuddering breath, one of the ministers stood up. "Majesty, we have not started the construction yet."

"What?" The prince sitting on a smaller throne screamed. "Despite knowing that it is designed for me, how dare you have the guts to delay it?"

"No... no... Yuvaraja, we are not deliberately delaying it." The cowardly minister's heart throbbed in fear. "A few families are living in the place where we have planned for the construction. We are in the process of shifting them to an alternative place."

"Just kick them off," the king bawled. "You have postponed the construction of my son's palace for those slaves?"

"Eh Minister!" The prince stepped down from the dais and walked to him. "Don't you know the punishment for not fulfilling my wish?" With his long sinewy arms, he caught the old man's neck.

The minister's large bushy tuft of white hair on the sides of his head fluttered. "I-I- so-me—" He tried to plead, but the hold was so firm that it was challenging for him to utter any word.

As Jitendhra was crushing his neck a little harder, the durbar door came open.

"Your Majesty." A messenger stepped forward. "There is a message for you."

"Bring it in."

The messenger briskly walked towards the king and handed the tray with a rolled parchment. The king opened the cotton twine and read.

"NNNNOOOOO!" he screamed, shaking his head in anger. The crown rolled from his head to the floor. One of the ministers rushed to pick it up and then placed it on the small podium.

"Father?" Jitendhra turned to the king, leaving the minister to wince in pain as he coughed and cleared his throat.

"They have found her again!" he yelled.

"Who, Father?"

"ARAVAS!" Unconsciously, the king traced a scar that ran across his tonsured head, pure rage kindling within him.

"Father?"

"Aravas have found Aranyani again!"

Hearing the name from his lips, his heart turned cold as a stone. They were the reason for everything that happened to his ancestors! Not one dynasty combated against Valasa's wrath, but they did, Aravas did! The secret they had, the secret they thought no one knew, he knew, he knew many things that they themselves did not know about her, about Aranyani!

Jitendhra gasped. "Everything has gone waste, all our efforts, all the preparations, everything to crush them, to conquer them, Father! We are back to square one! We have again lost! Father! What do we do? That Mayachandra gave us hope! He has cheated us! Father! Are you listening? FATHER?"

In response to his anxiety, the king just raised his hand to stop his prattle. He stared at the flickering lamp for moments without uttering any word.

Another guard entered the vicinity. "Highness..."

"What?" the prince yelled.

"Maharani Swapnaragini has given birth to a baby boy!" he announced.

The king's gloomy face instinctively took a hue of happiness. Yogendhra had many wives, some with the title Maharani, and many without. There were many children for him too, but only Jitendhra was titled as a prince since the rest were girls. For years, he had been waiting for a prince, someone with the rage as him. He could never imagine Jitendhra ruling the kingdom. His son was just bulky, muscular, and fleshy, but did not know the politics of ruling. Now, that a son was born, he knew he was going to get back everything he had lost.

"Ministers," he yelled. "Make sure you get ready for the construction of another palace." He shook Jitendhra by his shoulders. "It is the time for celebration, my son. After years, a boy is born!"

"But Father—"

"My son! Cheer up!" He howled with laughter. "A son after all these years, signifies that we will capture Arava along with Aranyani." He whispered with a maniac gleam in his eyes. "Aranyani..."

பெண் என்பவள் வெறும் உடலா?
வசை மொழிகளில் பெண்கள்

சோஃபியா சாக்ரட்டிஸ்
சென்னை

சமுதாயத்தில் தவறு செய்தவர்களையும் தாம் வெறுப்பவர்களையும் ஒருவர் வைது திட்டி இழித்துப் பழித்து ஏசும்போது சில சொற்களை தொடர்ந்து வசை சொற்களாக இழி சொற்களாக பயன்படுத்தி வருகின்றனர். இவற்றில் பெண்ணின் உடல் உரிமை சார்ந்த வசை மொழிகள் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

இழித்துப் பழித்துப் பேசும் சொற்கள் பலவகைப்படும்.

ஒன்று ஒரு ஆளுக்கு ஆயுள் குறைய வேண்டும் உறுப்பு குறைபாடு ஏற்பட வேண்டும் என்பதாகும்

இரண்டு எதிராளி குடும்பத்தில் உள்ள ஒரு பெண்ணோடு உறவு கொண்டதாக ஏசுவதாகும்

மூன்று, பெண்ணுக்கு பெண்ணே ஏசப் பயன்படுத்தும் வசை மொழிகள் ஆகும்

இவற்றில் தமிழ்ச் சொற்களும் உண்டு வடமொழியில் இருந்து கடனாகப் பெற்று தமிழுக்கு மாற்றிப் பயன்படுத்தும் சொற்களும் உண்டு

ஒருவனுக்கு ஆயுள் குறைய வேண்டும் உறுப்பு குறைபாடு ஏற்பட வேண்டும் தீராத நோய் ஏற்பட வேண்டும் என்று திட்டுவர். இவ்வகையின சாபம் கொடுப்பதாகவே அமைகின்றன. பெண்ணோடு தொடர்பு படுத்தி நீ தவறான உறவு கொண்டவன் ஆவாய் என்றும் தவறான பழக்க வழக்கங்கள் பின்பற்றுகின்றவன் ஆவாய் என்றும் வசை பாடுவது ஒருவனின் ஒழுக்கத்தை இழிவுபடுத்தும் வசை மொழிகள் ஆகும்.

நாசமாகப் போவாய் ஒழிந்து போவாய் அழிந்து போவாய் பொட்டு பொடுக்குன்னு போவாய், போன வழி திரும்பாமல் போவாய், உன்னை புதைச்ச இடத்தில் புல் முளைக்க போன்றவை ஆயுள் கண்டம் /ஆயுள் குறைபாட்டை விரும்பி வைது இழித்துச் சொல்வதாகும்

நோய் ஏச்சுக்கு உரிய பின்னணி

ஒருவன் தனக்கு வேண்டாதவனை நோக்கி நோய்த் தாக்குதலுக்கு ஆளாவாய் என்று வைவதுண்டு. பேதியில போவாய் கொள்ளையில் போவாய் ஒரு நாள் பேதியில் போவாய் போன்றவை நோயினால் ஒருவன் அழிந்து போக வேண்டும் என்று இழித்துப் பேசுவதாகும். இவ்வகைச் சொற்கள் பிரிட்டிஷார் காலத்தில் இந்தியாவில் கொள்ளை நோய் எனப்படும் ப்ளேக் நோய் பரவியது. காலரா பேதி பரவியது. அப்போது கொத்துக்கொத்தாக ஆங்காங்கே மக்கள் செத்துக் கிடந்ததை பார்த்து மக்கள் அஞ்சினர். இவ்வாறு ஏற்பட்ட அச்சத்தினாலும் இயலாமையினாலும் மக்கள் மனதில் பதிந்து விட்ட மரண பயமே வசைமொழிகளாக மாறிப்போயின.

உறுப்புக்குறைபாட்டு வசைச் சொற்கள்

தன் எதிராளிக்கு உறுப்புக் குறைபாடு ஏற்பட வேண்டும் செயலற்றுப் போக வேண்டும் என்று சபித்து இழித்துப் பேசும் சொற்களும் நடைமுறையில் உள்ளன. உனக்கு கை கால் விளங்காமல் போக உனக்கு ரெண்டு கண்ணும் அவிஞ்சு போக, உனக்கு கண்ணு கெட்டுப் போக போன்ற வசை மொழிகளும் பழக்கத்தில் உள்ளன.

சமய நடைமுறை ஏச்சு

சில இந்து சமயப் பழக்கவழக்கங்கள் சார்ந்த வசை மொழிகளும் நடைமுறையில் உள்ளன. அவற்றில் முக்கியமானது கங்கை கரையில் வைத்து காராம்பசுவை கொன்ற பாவத்தில் போவாய் என்பதாகும். ஒருவன் கங்கைக்குத் தன் பாவத்தைத் தொலைக்க போவான். ஆனால் அங்கே சென்ற பிறகும் கங்கை கரையில் வைத்து பசுவை கொன்றால் அவன் அதுவரை செய்த பாவமும் தீராது புதிய பாவமும் சேர்ந்து கொள்ளும். மேலும் காராம் பசு என்பது உடல் முழுக்க கருப்பாகத் தோன்றும் கருப்பு வண்ணப் பசுவாகும் இது வழிபாட்டிற்குரிய பசு. திருவானைக்கா கோவிலில் தினமும் உச்சிப் பொழுதில் காராம் பசுவுக்கு பூசை நடக்கும். கோயில் பூசாரி சிவப்பு சேலை அணிந்து அம்பாளாக வந்து பூஜை செய்வார். எனவே காராம்பசுவைக் கொல்வது ஏழேழு தலைமுறைக்கு பாவத்தைச் சேர்த்து வைப்பதாகும். இக கொடிய பாவத்திற்கு ஆளாவாய் என்று திட்டுவதும் உண்டு.

ஒருவரை ஒருவர் நாயே பேயே பிசாசே எருமை பன்றி என்று வசை பாடுவதும் நடைமுறையில் உள்ளது.

பெண் சார்ந்த வசைமொழி

பொதுவான வசை மொழிகள் தவிர பெண்கள் உடலை மையப்படுத்திய வசை மொழிகள் பல நடைமுறையில் உள்ளன. இவற்றை மூன்று வகையாக பிரிக்கலாம்

1. பெண் நுகர்ச்சி பற்றிய வசை மொழி

2. பெண் உறுப்புக் கசிவு தொடர்பான வசை மொழி

3. பெண்களுக்குள் பயன்படுத்தும் வசைச் சொற்கள்

4. வடமொழியில் இருந்து தமிழுக்கு வந்த வசைச் சொற்கள்

5. பாலுறுப்புகளைச் சுட்டி விளித்தல்

1. பெண் நுகர்ச்சி பற்றிய வசைமொழி

நில உடைமை சமுதாயம் தோன்றிய போது பெண்ணும் உடைமை பொருளாக நுகர் பொருளாக போகப் பொருளாக வணிகப் பொருளாக மாறிப் போனாள். மன்னர்கள் பகைவர் நிலத்தைக் கைப்பற்ற படையெடுத்து வந்த வேளையில் பகைநாட்டு மன்னர்களின் பெண்களைக் கைப்பற்றினர். அரச மகளிரின் கூந்தலை அறுத்துக் கயிறாகத் திரித்து வெற்றி பெற்ற மன்னரின் பட்டத்து யானையின் காலில் கட்டினர். பகையரசரின் அரண்மனைப் பெண்களை தங்கள் அரண்மனை அரசிமாருக்கு தாதிப் பெண்களாக நியமித்தனர். மற்ற பெண்களை பிடித்து வந்து பொதுப்பணிகளுக்குப் பயன்படுத்தினர். தமது இனத்தின் தூய்மை கெட்டுவிடும் என்பதால் ரத்த கலப்பு கூடாது என்ற நோக்கில் இவர்களுக்குத் திருமண உரிமையும் கிடையாது. இவர்கள் கொண்டி மகளிர் எனப்பட்டனர்.

1. பெண் நுகர்ச்சி பற்றிய வசவுச் சொற்கள்

பெண் நுகர்ச்சி என்பது ஆணுக்குரிய அங்கீகாரமாக நில உடமை சமுதாயத்தில் கருதப்பட்டது அன்று தொடர்ந்து இன்று வரை இவ் அங்கீகாரம் தொடர்கின்றது. மதங்களும் புணர்ச்சி என்பது ஆண்களின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகவே சுட்டுகின்றன. இந்து சமயமும் இந்திய சட்டமும் கணவனுடைய பாலியல் தேவைகளை எந்த நேரமும் தீர்த்து வைக்க வேண்டியது மனைவியின் கடமை. அதிலிருந்து அவள் தவறினால் அவளைத் திருமண உறவிலிருந்து விலக்கி விடலாம் என்கிறது. இஸ்லாமியச் சமயம் பகலிலும் இரவிலும் எந்த நேரத்திலும் கணவன் அழைப்புக்கு இணங்க வேண்டியவளே மனைவி அதற்கு அவள் மறுத்தால் அவளை விவாகரத்து செய்துவிடலாம் என்று அனுமதி அளிக்கின்றது. எதற்குமே விவாகரத்து அழிக்காத கிறிஸ்தவ சமயம் ஒரு மனைவி தன் கணவனுக்குத் துரோகம் செய்து பிற ஆடவனுடன் தொடர்பு கொண்டிருந்ததாக நிரூபிக்கப்பட்டால் அவளை விவாகரத்து செய்யலாம் என்கிறது. ஆக எல்லாச்சமயங்களும் சட்டங்களும் பாலுறவு என்பதை ஆண் சார்ந்ததாகவும் அவனுக்கு கொடுத்த அங்கீகாரமாகவும் அதிகாரமாகவும் மட்டுமே கருதுகின்றன. இவ்வகையில் பெண் என்பவள் ஓர் உடலாக மட்டுமே சமுதாயத்தால் கருதப்படுகின்றாள்.

விலக்கப்பட்ட மண உறவு *(incest)*

ஒரு பெண்ணின் உடலை யார் யார் அனுபவிக்க வேண்டும் என்பதில் சமூகத்தில் சில வரையறைகள் விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. பெரியப்பா சித்தப்பா போன்ற தந்தை

உறவு உள்ளவர்கள், சகோதர முறை உள்ளவர்கள் மகன் உறவு கொண்டவர்கள் ஒரு பெண்ணுடன் பாலுறவு கொள்ளக் கூடாது. இதனை மீறி உறவு கொண்டால் அது சமுதாயத்தில் இழிவாகஉன் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே இவ் உறவுகளை இழிச்சொல்லாக வசை மொழியாக ஆண்கள் பயன்படுத்தினர்.

மாபாதகம்

தாயைப் புணர்ந்தவன் தமக்கையைப் புணர்ந்தவன் என்ற சொற்கள் வசை மொழிகளாக இன்றைக்கும் நடைமுறையில் உள்ளன. சென்னை பகுதிகளில் தாயைக் குறிக்கும் ஆத்தா என்ற சொல் கூட வாத்தா என ஒலிக்கப்பட்டால் அது தாயைப் புணர்ந்தவன் என்ற பொருளை சுருக்கித் தருவதாக

பயன்படுகின்றது. திருவிளையாடல் புராணத்தில் மாபாதகம் தீர்த்த படலத்தில் ஒருவன் தன் தாயோடு கூடியிருக்கும் கொடுமையை ஊரார் அறிந்தும் அவனை அடித்து உதைத்து திருத்தாமல் அவர்கள் தங்களுக்குள் பேசி வேதனைப்பட்டுக் கொள்வதாகவே கதை எழுதப்பட்டுள்ளது இப் புராணத்தில் இருக்கும் கதைகள் அனைத்தும் வடமொழிக் கதைகள் என்பதால் சிலவற்றை மட்டுமே மதுரைக்கு ஏற்றபடி மாற்றி அமைத்தார். மற்ற கதைகள் வடநாட்டுச் சாயலுடன் உள்ளன. இவ்வாறு மாபாதகம் செய்தவனை மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் உள்ள பொற்றாமரை குளத்தில் குளித்து அங்கு சொக்கநாதரைத் தொடர்ந்து வழிபட்டு வந்தால் அவனுடைய பாவம் தீரும் என்று கதை முடிக்கப்படுகின்றது.

அதுவும் உன் தாயை புணர்வேன் தமக்கையை நான் புணர்வேன் என்று சொல்வது என்று வசை என்ற வசை மொழியை பயன்படுத்துவது அதைக் கேட்பவனுக்கு மிகுந்த வேதனையையும்தரும்என்பதால்தனக்குப்பிடிக்காதஒருவனைகேவலப்படுத்துவதற்கும் இழிவு செய்வதற்கும் சீண்டுவதற்கும் வம்பு சண்டை இழுப்பதற்கும் உன் தாயை புணர்வேன் உன் தமக்கையை புணர்வேன் என்ற சொற்கள் பயன்படுகின்றன.

கன்னிப் பிணத்துக்கு சாந்தி

ஒருவனை ஒரு வேலைக்கும் லாயக்கில்லாதவன் எந்தத் தொழிலும் செய்ய தெரியாதவன் அறிவு நுட்பம் இல்லாதவன் மண்ணுக்குச் சமமானவன் என்று பல வகையிலும் குறைத்து பேசுவதற்கு இழித்துச் சுட்டுவதற்கு பயன்படுத்தப்படும் ஒரு சொல் வெங்கம் பயல் என்பதாகும். கன்னிப்பெண்கள் இறந்து போனால் அவர்களின் கன்னித்தன்மை கழிக்க இவனை அழைத்து கன்னிப் பிணத்துடன் உறவு கொள்ளும் படி ஊரார் வற்புறுத்துவர். இவ்வாறு கன்னிப் பிணத்துடன் உறவு கொண்டு அவளது கன்னித்தன்மையை நீக்கி புதைத்தால் மட்டுமே அவள் பேயாக பிசாசாக நிறைவேறாத ஆசையுடன் ஊரில் உலவமாட்டாள் . அவ்வாறு செய்து புதைக்காவிட்டால் அவளால் மற்றவர்கள் பயந்து நடுங்கி காய்ச்சல் ஜன்னி கண்டு இறந்து போவார்கள் என்ற அச்சம் காரணமாக இந்தப் பழக்கத்தை முன்பு பல ஊர்களிலும் கடைப்பிடித்தனர். கன்னிப் பெண்ணைப் புணர்வதற்கு தயாராக இருப்பவனை வெங்கம் பயல் என்றனர். இவன்

வேறு எந்த வேலைக்கும் லாயக்கில்லாதவன் என்பது இதன் பொருளாகும். ஆக பெண்ணின் பிணத்தை கூட இச்சமுகம் ஒரு பெண் உடலாகவே கருதுகிறது. பெண் உடலின் பாலுணர்ச்சி தணிக்கப் பட வேண்டும். இதுவே சாந்தி செய்தல் எனப்படும் உயிரோடு இருந்தால் அதற்கென நல்ல வேளை (முகூர்த்தம்) பார்த்துக் கொடுப்பார்கள். இறந்த உடலுக்கு சாந்தி செய்ய முகூர்த்தம் தேவைப்படவில்லை.

பெண்ணுக்கு ஒரு மனமுண்டு ஆத்மா உண்டு என்பதை எல்லாம் ஆடவர் சமுதாயம் ஏற்றுக் கொள்வது கிடையாது. பெண் என்பவள் ஒரு உடல். அந்த உடலை அமைதிப்படுத்துவதற்கு அவள் கணவன் அவளோடு கலவி புரிந்து அவளை மகிழ்விக்க வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் அவள் பேயாக பிசாசாக ராட்சசியாக மாறிவிடுவாள் என்பதுதான் ஆணாதிக்க சமுதாயம் பெண்ணைப் பற்றி கொண்டிருந்த ஆழமான நம்பிக்கையாகும்.

அக்கா , அம்மா மட்டும் ஏன்?

தாய் அல்லது தமக்கையைப் புணர்வேன் என்று சொற்கள் மட்டும் புழக்கத்தில் இருக்க, வசை மொழிகளில் தங்கை அத்தை, சித்தி, பெரியம்மா போன்ற சொற்கள் ஏன் பயன்படுவதில்லை. நில உடமை சமுதாயத்திற்கு முந்திய வேட்டை சமுதாயக் காலத்தில் ஒரு தாய் தன் பிள்ளைகளையும் தனக்கு கணவன்மாராக இருந்தவர்களையும் ஒரு கூட்டமாக வழிநடத்தினாள். அந்தக் கூட்டத்தில் இருந்த ஆண்கள் அவளுக்குக் கணவனாகவும் இருந்திருக்கலாம். அவளோடு புணர்ந்து பிள்ளைகளாகவும் இருக்கலாம். வேட்டை சமுதாயத்தில் இனக் குழுக்களில் ஆண்களில் யாருக்கும் கணவன் என்ற தகுதியோ உறவோ மனைவி மகன் என்ற தகுதியோ உறவோ கிடையாது. எனவே தாயைப் புணர்தல் என்பது ஒரு கூட்டத்தை வெற்றி கொள்வதாகும். குழுவின் தலைவியைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு அக் குழுவே வென்றவனுக்கு அடிமையாகி விடுகிறது. இதனுடைய *refined version* ஆக மீனாட்சி திருக்கல்யாணத்தைக் காணலாம்

தற்போதைய கேரளா வரை உள்ள குமரி நாட்டை ஆட்சி செய்து வந்த பாண்டிய அரசி காஞ்சனமாலையின் மக்கள் மீனாட்சியை வடக்கே இருந்து வந்த சொக்கநாதர் என்ற சுந்தரர் தோற்கடித்துத் திருமணம் செய்துகின்றார். தோற்றவள் வெற்றி பெற்றவனுக்குக் கட்டுப்படுகின்றாள். அவளைத் திருமணம் செய்து கொண்டு அவள் நாட்டையே ஆவணி மூலத் திருநாள் அன்று செங்கோல் பெற்று ஆட்சி செய்கின்றான். அவளுடைய கூட்டத்தாருக்கு அவன் தலைவனாகின்றான். அவள் அவனுக்கு மட்டும் பிள்ளை பெறும் மனைவியாகின்றாள். சுந்தரேஸ்வரருக்கும் மீனாட்சிக்கும் பிறந்த குழந்தை உக்கிர பாண்டியன் ஆவான். சுந்தரேஸ்வரருக்கு அடுத்து அவருடைய மகன் உத்திரபாண்டியனுக்கு முடிசூட்டப்படும் நிகழ்வை திருவிளையாடல் புராணம் விளக்குகின்றது.

திருவிளையாடல் புராணம் வடமொழியில் எழுதப்பட்ட ஹாலாசிய புராணம் என்பதன் தமிழாக்கமே ஆகும். தமிழில் மூன்று மொழிபெயர்ப்புகள் வந்தாலும் பரஞ்சோதியாரின் நூலே அதிகம் வாசிக்கப்பெற்றது. இந்நூல் மதுரையில் நடந்த

சிவனுடைய திருவிளையாடல்களைப் பற்றிய நூல் அன்று. எங்கேயோ வடக்கே நடந்த பல கதைகளைத் தொகுத்த நூல். இதனை மதுரைக்கு ஏற்றபடி சில ஆட்பெயர்களையும் ஊர் பெயர்களையும் மாற்றி மொழிபெயர்க்கப்பட்ட புராணமாக திருவிளையாடல் புராணம் இன்று விளங்குகின்றது. அன்னையை,, தலைவியை மணத்தல் என்பது அவளுடைய உடைமைகளையும் மக்களையும் குழு கூட்டத்தையும் சேர்த்து அடிமைப்படுத்துவதாகும்.

தம் அக்கை, த(ம்)அவ்வை,

வேட்டைச் சமுதாயத்திற்கு முந்தைய உணவு தேடும் சமுதாயத்திலும் ஆண்களும் பெண்களும் கூட்டமாக உணவைத் தேடி உண்டு வந்தனர். அப்போது அவர்களுக்கு நெருப்பின் பலன் தெரியவில்லை. எனவே உணவுகளைச் சேகரித்து குகைகளுக்குள் வைத்து பாதுகாத்து காய போட்டு அவற்றையும் இயன்றவரை பாதுகாத்து வைத்து உண்டு வந்தனர். ஓர் இனக்குழுவினர் உணவு தேடி செல்ல தலைமை தாங்கி நடத்திச் சென்றவள் ஓர் பெண். அப்பெண்ணை தங்கள் கூட்டத்தில் மூத்தவள் என்ற பொருளில் அக்கை அல்லது அவ்வை என்று அழைத்தனர். தம் அக்கை என்பவள் தம் இனக்குழுவின் தலைவி. மூத்தவள் அவ்வை எனப்பட்டாள். தம் அவ்வை - தவ்வை ஆவாள். அக்கை அல்லது தவ்வை என்ற மூத்தவள் கூட்டத்தின் தலைவியாக இருந்து அனைவருக்கும் உணவு பகிர்ந்து அளித்து முதியவர் முதல் குழந்தை வரை காப்பாற்றி வந்தாள்.

கொல் தவ்வை -கொற்றவை

இனக்குழு உணவு தேடி அடுத்தடுத்த இடங்களுக்கு இடம் மாறிய போது முன்பிருந்த இனக்குழுவோடு புதிதாக வந்த இனக்குழுவினர் சண்டையிட்டு அந்த இடத்தைக் கைப்பற்றினர். இவ்வாறான சண்டையில் தவ்வை கூட்டத்தின் தலைவியாக மாறி விலங்குகளையும் பிற இனக்குழு மனிதர்களையும் கொலை செய்ய வழிகாட்டினாள். எலும்பாலும் கற்களாலும் ஆன கருவிகளை கூர் தீட்டி வழங்கினாள். (சக்தி முருகனுக்கு சூரசம்ஹாரத்துக்கு வேல் படை கொடுத்தனுப்பிய புராணக் கதை இங்கிருந்து வளர்ந்தது தான்). கொலைக்கான திட்டங்களை தீட்டிய போதும் போர் முறைகளை எடுத்துக் கூறிய போதும் இவள் கொல் தவ்வை அல்லது கொற்றவை எனப்பட்டாள்.

தமக்கை உணவு சேகரிப்புக்கும் அவற்றைப் பகிர்ந்து அளிப்பதற்கும் உரியவள். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்பது தமக்கையின் தலையாயப் பணியாகும். உணவளிப்பதால் அவள் அவ்வை அல்லது தவ்வை என்பவள் மூத்தவள் ஆனாள். இவளே பின்னர் ஜேஷ்டா தேவி என்று வட மொழியில் அழைக்கப்பட்டாள். பகைவர்களைக் கொன்று குவிக்க உதவிய போது கொற்றவை எனப்பட்டாள்

செல்வாக்குக் குறைந்த அக்கா, அம்மா

உணவு சேகரிப்புக் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த அக்காவும் வேட்டைச் சமுதாயத்தின் வணங்கப்பட்ட அம்மாவும் நில உடமை சமுதாயத்தில் தங்கள் சமூக

மதிப்பை இழந்தனர். பெண்கள் அக்காவாகவும் அம்மாவாகவும் போற்றப்பட்டு வந்த காலம் முடிந்து போனது. ஆண்கள் அவர்கள் மீது அதிகாரம் செலுத்துபவராக மாறிவிட்டனர். எனவே உன் அம்மாவை புணர்தல், உன் அக்காவை புணர்தல் என்பது உன் இனத்துக்கு இழிவு சேர்த்தல், உன் குடும்பத்துக்கு இழிவு சேர்த்தல், உனக்கு இழிவு சேர்த்தல் என்ற அடுத்த கட்ட பொருண்மையை மறைமுகமாக உணர்த்தியது. இதனால் தான் அத்தை பெரியம்மா தங்கை போன்ற சொற்கள் வசை மொழிகளில் இடம் பெறவில்லை.

அக்காவும் அம்மாவும் ஆதி கால வரலாற்றில் இனக்குழுவின் தலைமைப் பதவிக்குரிய சொற்களாகும்.

2. பெண் உறுப்புக் கசிவு பற்றிய வசவுச் சொற்கள்

பெண்களின் உடல் மீதான அதிகாரம் குறித்த இரண்டாவது வகையான வசைச் சொற்கள் பாலுறுப்பும் அதன் கசிவும் சுரப்பும் பற்றியவை ஆகும். இவை முந்தைய காலத்தில் இருந்த தாந்த்ரீகம் முறைகளில் போற்றப்பட்டு. தாந்திரீகம் சக்தி/பெண் உறுப்பு (யோனி) வழிபாட்டை மையப்படுத்தியது. ஆனால் பின்னர்த் தோன்றிய சைவ வைணவ சமயமும் சிவன் விஷ்ணு வழிபாடுகளும் ஆண் கடவுளரை முதன்மை கடவுளாக வலியுறுத்தின. இவை பெண் வழிபாடு சார்ந்த தாந்திரீக முறைகளை இழிவாக மக்கள் மத்தியில் எடுத்துக் கூறி நம்ப வைத்தன. வஜ்ராயன பௌத்த சமயம் தாந்த்ரீக முறைகளைத் தங்களுடைய சமயச் செயற்பாட்டுகளில் ஒன்றாகக் கொண்டிருந்தது. பௌத்த சமயம் செழித்து வளர்ந்த வங்காளத்திலும் கேரளாவிலும் இன்றைக்கும் பாலுறுப்புக் கசிவு, சுரப்பு பற்றிய வழிபாட்டு நம்பிக்கைகள் தொடர்கின்றன.

பூப்புக் குருதி/தூமை

பெண்களின் பாலுறுப்பு சுரப்பு பற்றிய வசை மொழிகளாக வழங்கும் தூமையக்குடிக்கி, தூமச் சேல ஆகிய இரண்டும் பெண்ணின் பூப்பு குருவி தொடர்பானவை. பூப்புக் குருதியை குடித்தல் அல்லது மாதவிடாய்த் துணியை அலசிக் குடித்தல் கவுலாகமம் என்ற தாந்திரிகச் சமயப் பிரிவினரின் சமய நடைமுறை ஆகும்.

பெண்களின் பூப்புக்குருதிக்கு மந்திர ஆற்றல் இருப்பதாக நம்பிய மக்கள் தூமத் துணியைக் கொண்டு புதிர வண்ணாரிடம் கொடுத்து செய்வினை ஏவல் பில்லி சூனியங்கள் வைக்கும்படி செய்தனர். இதனை முட்டுத்துணி என்று அழைத்ததால் இவ்வாறு செய்யப்படும் செய்வினையை முட்டுப்புள்ளி வைத்தல் என்றனர். இதற்கு அஞ்சிய கிராமத்துப் பெண்கள் இத்துணிகளைப் பிறர் கண்களில் படாமல் எரித்தனர்.

பௌத்த சமயம் பின்பற்றப்படும் சீனாவில் பூப்புக் குருதியைப் பயன்படுத்திப் பின் இன் (pin yin) என்ற மருந்தைத் தயாரிக்கின்றனர். இம்மருந்து ஆட்களின் ஆயுட்காலத்தை நீட்டிக்கும் என்ற நம்பிக்கையும் அங்கு உண்டு.

தூமையின் மந்திர சக்தி

வங்காளத்தில் உள்ள கவுல் (Gaul) என்ற சமூகத்தினர் பூப்புக் குருதியுடன் நீரும் பாலும் கலக்கும் போது யோக சித்தி அல்லது யோகானந்தம் கிடைக்கும், என்று நம்பினர். பெண்களின் பூப்புக் காலத்தில் அவர்களுடன் தேக சாதனம் (புணர்ச்சி) செய்யும் போது மகாயோகம் கிட்டும் என்றும் நம்பினர். பூப்புக்காலத்தின் முதல் நாளை அமாவாசை ஏன்றும் மூன்றாம் நாளை பௌர்ணமி ஏன்றும் அழைத்தனர். இம்மூன்று நாட்களுக்குள் கலவியில் ஈடுபட்டால் தெய்வீகப் பிரேமமும் ஆன்மீகப் பரவசமும் கிட்டும். இதுவே மனித வாழ்வின் மிகப்பெரிய யோக (Yoga practice) சாதனை என்று பவுல் பிரிவினர் நம்பினர். பெண் மேலே இருந்து பரவச நிலையை அடைய ஆண் அந்நிலையை அடையாமல் தன் மூச்சுப் பயிற்சியின் மூலமாக முதுகுத்தண்டுவடத்தில் மேலும் கீழுமாக மூச்சை ஏற்றி தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவள் அவனுக்கு தனது சக்தி முழுவதையும் வழங்க முடியும் என்பதால் இத் தேக சாதனை போகம் சார்ந்ததன்று, முழுக்க முழுக்க யோகம் சார்ந்ததாகும். (மருத்துவ முறைப்படி இது மிகவும் தவறு என்று இன்றைக்கு மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்).அசாமில் உள் காமாக்யா கோயிலில் யோனி பூஜை பூப்புக் குருதி வழிந்த தோற்றத்தில் தான் செய்யப்படுகிறது. அங்கு பாயும் பிரம்மபுதிரா நதி ஆண்டுக்கு மூன்று நாட்கள் பூப்படைவதால் சிவந்து காணப்படுகிறது.

கவுலாகமத்தில் தூமையைக் குடித்தல்

கவுல் ஆகம (Gaulakama) முறைப்படி யோனி பூஜை செய்வோர் பூப்புக் காலம் தவிர்த்து வேறு காலத்தில் செய்வதில்லை. அதனால் பயன் ஒன்றும் கிடையாது என்பது பூப்பு குருதியின் முக்கியத்துவத்தை விளக்குகின்றது. இக்குருதியைப் பருகலாம், தொழலாம் என்பதால் மாதவிடாய் துணியைத் தேன் மற்றும் மஞ்சள் பொடி கலந்த பாலில் நனைத்து பின்பு அந்தப் பாலை பிரசாதமாக பருகக் கொடுத்தனர். இதனால் தொழுநோய், காச நோய் போன்ற உயிர்கொல்லி நோய்கள் அண்டாது என்றும் நம்பினர். கவுல் ஆகமம் என்று அழைக்கப்பட்ட இந்த பூசை தாந்த்ரீக சாஸ்திரம் தொடர்பானது. சாம்பல், சுரதம், விந்து, பூப்புக்குருதி மற்றும் நெய் ஆகிய ஐந்தையும் புனிதப் பொருட்கள் என்று அறிவிக்கின்றது இவற்றில் விந்து மற்றும் பூப்புக்குருதியை பருகுவது தான் கவுலாகம பூஜை முறை ஆகும். தூமையைக் குடித்தல் என்பது உயர்கொல்லி நோய்க்களுக்குரிய மருந்தாகப் பயன்பட்டுள்ளது.

ரஜஸ்/ ரேதஸ்

தாந்திரீகத்தில் பூப்புக்குருதிக்கு பதிலாக பெண்ணின் சுரத நீரைக் குறிக்கும் சாண்டு என்ற சொல் பலம், உறுதி என்ற பொருள் உடையது. (ஜண்டு பாம்- zandu balm). கேரளாவில் Chaanda என்ற ஆட்பெயர்கள் உண்டு. வேத உபநிடதங்களில் ஒன்றான யோக உபநிடதம் பூப்புக்குருதியை ரஜஸ் என்றும் விந்துத் துளியை ரேதஸ் என்றும் குறிப்பிடுகின்றது. ரஜசும் ரேத்தஸும் இணைவதே ராஜ யோகம் ஆகும்.

தாந்திரீகர் சாண்டைப் பருகுவதையும் சிறந்த பூஜைப் பிரசாதமாக ஏற்றுக் கொள்கின்றனர். இத்தகைய பழஞ்சமய மரபுகள் மாறி வைதீக மரபுகள் வந்த பின்பு இவர்கள் தூமையைக் குடிப்பதும் சாண்டை குடிப்பதும் இழிந்தவை என்ற கருத்தைப் பரப்ப விரும்பி இவற்றை வசைச் சொற்களாக மாற்றி விட்டனர். ஆக தூமைக்குடிக்கி, சாண்டகுடி, தூமச்சேலஆகியசொற்கள்மிகவும்கேவலமானபழக்கவழக்கமுடையவனைக் குறிக்கு வசை மொழியாகப் பயன்படுகின்றன இதற்கு முக்கிய காரணம் தமிழகத்தின் சமய மரபுகள் மாறியதுதான்.

தூமை ஓர் மருந்து

மச்சேந்திர நாத் எழுதிய கவலஞான நிர்ணயம் *(Gaula gnana nirnaya)* என்ற நூலில் எட்டாம் பகுதியில் நெற்றித் திலகம் பூப்புக் குருதி என குறிப்பிடப்பட்டுள்ளது.. நெற்றியில் பூப்பு குருதியைத் திலகமாக இடுகிறவனை அம்மை நோய் தொழுநோய் போன்ற நோய்கள் தாக்காது என்றும் பாம்பு தன் தோலை உரிப்பது போல் நோய் இவனை விட்டு அகன்று விடும் என்றும் சொல்லப்படுகின்றது.

நெற்றியில் குங்குமம் வைத்துக் கொண்டு வந்த அந்தியூர் எம்எல்ஏவை பார்த்து என்னையா நெற்றியில் ரத்தம் வழிகிறது என்று கலைஞர் கேட்டதாக ஒரு சம்பவம் உண்டு. இதே நம்பிக்கை தாந்திரீகம் அல்லது பௌத்தம் மரபுகள் மறைந்து சைவ மரபு தோன்றிய காலத்தில் எழுதப்பட்ட புராணக் கதையில் நெற்றி குங்குமம் என்பது உமாதேவியின் பூப்புக்குருதி என்று குறிப்பிட்டது. வாமா சாரம் (இடது மரபினர்) அல்லது வாம மார்க்கத்தினர் வாமை எனப்படும் பூப்புக்குருதியை மது மற்றும் விந்துடன் சேர்த்து உட்கொள்ளும் போது தான் ஆன்மீகம் முழுமை பெறுகிறது என்றனர். தாந்திரீக சமய மரபைப் பின்பற்றும் மக்களிடையே இந் நடைமுறை இருந்தது.

வாமாசாரத்தை கண்டித்த ஆதி சங்கரர்

ஆதி சங்கரர் கிபி ஏழாம் நூற்றாண்டில் இந்திய நாட்டில் ஆங்காங்கே பல வகையான வழிபாட்டு முறைகள் பின்பற்றப்பட்டதை அறுவகைச் சமயங்களாகப் பகுத்தார். அப்போது அவர் வாமாச்சாரம் என்பது வேதம் சார்ந்ததல்ல, அதனைப் பின்பற்றலாகாது என்று கண்டித்து ஒத்துக்கினார். வேதம் சார்ந்த வைதீக மரபுகளான சைவம் வைணவம் தழைக்கத் தொடங்கியதும் தாந்த்ரீக மரபு அல்லது வாமச்சாரம் என்பது கடுமையான கண்டனத்திற்கு உள்ளாகி இழிந்த நடைமுறையாக கேவலமான பழக்க வழக்கமாக வசைமொழியாக் மாறிவிட்டது.

உபநிடதங்கள் கூற்றில் தீட்டு

வேத உபநிடதங்களில் பெண்கள் பற்றிய தகவல்களை கூறும் மாந்திரீக உபநிடதம் கன்னி தீட்டு எனப்படும் முதல் குருதியை சுயம்பு என்கிறது. திருமணத்திற்கு முந்தையான குருதியை குண்டம் என்கிறது. குண்டம் மனிதர்களின் ஆசைகளை நிறைவேற்றும் சக்தி பெற்றதாகும். விதவையால் வளர்க்கப்பட்ட பெண்ணின் குருதியான கோலா என்பது

கடவுளரையும் கட்டுப்படுத்த வல்லது. இதனை வசியக் கட்டு போன்ற மாந்திரிகத்துக்கும் ஆவிகளைக் கட்டவும் பயன்படுத்தினர். திருமணமான பின்பு வரும் முதல் பூப்புக்கு ஸ்வ புஷ்பம் என்று பெயர். இவ்வாறு ஒரு காலத்தில் போற்றப்பட்ட பெண்களின் பெண் உறுப்பின் ரத்தக் கசிவு மற்றும் மதன நீர் சுரப்பின் பயன்பாடும் இவை சார்ந்த சமயப் பழக்க வழக்கங்களும் வைதீக சமயங்கள் நடைமுறைக்கு வந்த பிறகு வசைச் சொற்களாக மாறிப் போயின.

தற்போது வெளிவந்த தாய்க் கிழவி படத்தில் தூமச் சேலை என்ற வார்த்தை பயன்படுத்துவதை பார்க்கலாம்

பெண்களுக்குள் பயன்படுத்தப்படும் வசைச் சொறகள்

பெண்கள் தமக்குள் பயன்படுத்தும் வசைச் சொற்கள் அவிசாரி, தேவடியா , சக்களத்தி, முண்டை (அறுதலி) போன்றவை ஆகும். பெண்களை ஏசுவதற்கு பயன்படுத்துகின்ற அவிசாரி என்ற சொல் அபி சாரிகா என்ற வடமொழிச் சொல்லின் தமிழாக்கம் ஆகும் இச்சொல் பெண்ணின் பாலுறவு தேட்டத்தை இழிவுபடுத்தும் வசைச் சொல்லாகும் வசை சொல்லாகும்.

ஒரு பெண் தன் கணவனுக்குக் கட்டுப்பட்டு தன் கணவனோடு மட்டுமே அவன் விரும்பிய நேரங்களில் மட்டும் உறவு கொண்டு வாழ்ந்தால் அவள் சிறந்த பெண்மணி என்றும் தனக்கு விருப்பமான நேரத்தில் தன் கணவனை அவள் நேரடியாகவோ மறைமுகமாகவோ அழைக்கவும் நிர்பந்திக்கவோ கூடாது என்றும் என்பதும் நல்ல குடும்பப் பெண்ணுக்குரிய இலக்கணங்களாக ஆணாதிக்க சமுதாயம் நடைமுறைப்படுத்தி வருகிறது. இதனை மீறி அவள் பிற ஆண்களுடன் தொடர்பு கொண்டால் அவளை தாசி வேசி என்று வசை பாடுவது உண்டு.

தேவதாசி/ தேவரடியார்

தேவதாசி தேவரடியார் போன்றோர் சோழர்காலம் தொட்டு கோயில் சார்ந்தும் கோயில் அதிகாரிகள் சார்ந்து வாழ்ந்து வந்தனர். பின்னர் கோயில் அமைப்புகள் நிர்வாகங்கள் சிதைவுற்றபோது இப்பெண்கள் ஊர் பிரமுகர்களின் விருப்பத்திற்கு உரியவர்களாக (அபிமான ஸ்திரீ) தங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொண்டனர். சிலருடைய வாழ்வில் பிரமுகர்கள் மாறிய காரணத்தினால் ஒரு கணவனுடன் வாழும் வாய்ப்பு கிடைக்காத இப்பெண்கள் தேவடியாள் என்று சமுதாயத்தினர் இழித்தும் பழித்தும் பேசினர். ஒரு பெண்ணின் உடல் பலருடைய நுகர்ச்சிக்குப் பயன்படும் போது அவள் நடத்தை கெட்டவளாகக் குற்றம் சாட்டப்பட்டு ஊரை விட்டு விலக்கி வைக்கப்படுகிறாள். தேவ்டியாளை 'தொழில்' செயபவள் என்று ஏசுவர். தொழில் என்ற சொல் சில 16,17,18ஆம் நூற்றாண்டுகளில் பாலியல் தொழிலை மட்டுமே குறித்தது.

பெண்ணின் நடத்தையைக் கேவலப்படுத்தும் சொல்லாக தேவடியாள் என்ற சொல் விளங்கியதால் சில சமயம் ஆண்களைக் கேவலமாகச் சுட்டுவதற்கும் தேவடியாள் மகன் என்ற சொல் பயன்பட்டது.

தேவடியாள் (விபச்சாரி/ வேசி) என்பதற்கும் அவிசாரி என்பதற்கும் முக்கிய வேறுபாடு உண்டு. தேவடியாள் என்பவள் பணத்துக்காக வாழ்க்கை வசதிகளுக்காக கணவன் அல்லாத ஒருவனுடனும் அல்லது பலருடனோ பாலுறவு கொண்டு வாழ்க்கை நடத்துவாள். இன்றைக்கு இவர்கள் பாலியல் தொழிலாளர்கள் என்று அரசால் அழைக்கப்படுகின்றனர். இவர்களுக்கென்று பல நாடுகளில் சட்டங்களும் சலுகைகளும் அரசு அங்கீகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அவிசாரி என்ற சொல் வேறு பொருளுடையது. வடமொழி சொல்லான அபிசாரிகா என்பது இரவில் தன்னுடைய பாலியல் தேவைக்காக ஒருத்தி வீட்டை விட்டு எழுந்து தெருவில் நடந்து சென்று ஏதேனும் ஒரு ஆண்மகன் திண்ணையில் தூங்கிக் கொண்டிருப்பதை பார்த்து அவனைத் தட்டி எழுப்பி அவனுடன் உறவு கொள்ளும் பெண் ஆவாள். ஆக வசைச் சொல்லான அவிசாரி என்பது தன்னுடைய பாலியல் தேவைக்காக தனக்கு விருப்பமான ஒரு ஆணை அல்லது தனக்கு தொடர்பில்லாத ஒரு ஆணை வற்புறுத்துகின்ற பெண்ணைக் குறிக்கும் மிகப்பெரிய இழிசொல் ஆகும் இச்சொல் மதுரைக்கு அருகே உள்ள சில ஊர்களில் வாழும் மக்களிடையே பரவலாக வழங்கி வருகின்றது.

பாரதிராஜா எடுத்த படங்களில் தெற்கு சீமையிலே என்ற படத்தில் இச்சொல்லை ராதிகா பயன்படுத்தியிருப்பதைக் காணலாம். இச்சொல் பெண்கள் தங்களுக்குள் இன்னொரு பெண்ணை கேவலமாகத் திட்டும்போது பயன்படுத்தும் சொல்லாகும். இச்சொல்லை ஆண்கள் பயன்படுத்துவது கிடையாது.

4. வடமொழியில் இருந்து தமிழுக்கு வந்த வசைச் சொற்கள்

வடமொழியில் இருந்து தமிழுக்கு வந்த அவிசாரி, முண்டை (விதவை) போன்ற சொற்களை போல் மற்றொரு வசைச்சொல் ஜாரி என்பதாகும். இச்சொல்லை ஆண்கள் மட்டுமே பயன்படுத்துகின்றனர். தன் விருப்பத்திற்கேற்ப தான் விரும்பிய ஆண்களோடு வாழும் பெண்ணை ஜாரி என்று இழித்துரைப்பர். .

வைப்பாட்டி என்ற தமிழ்ச்சொல் ஒரு ஆணுக்கு முறையாக மணந்த சமூக அங்கீகாரத்துடன் கூடிய ஒரு மனைவி இருக்க அவனுடன் கள்ளத்தனமாக அல்லது சமூக அங்கீகாரம் இன்றி அவனுடன் சேர்ந்து வாழ்ந்து அவனுக்குக் குழந்தைகள் பெற்றுத் தரும் பெண்ணை அல்லது பெண்களைக் குறிக்கின்ற சொல்லாகும். இதுவும் சமூகத்தில் இழி சொல்லாகவே பயன்படுகிறது. வைப்பாட்டி மகனே என்பதும் ஒருவனைக் கேவலப்படுத்தும் நோக்கத்துடன் பயன்படுத்தும் இழிசொல்லாகும். ஜோதிடத்தில் ஜார புருஷன் என்ற வடமொழிச் சொல் கள்ளக்காதலன் என்ற பொருளில் பயன்படுகிறது. சமூக அங்கீகாரம் இன்றி ஒருவனோடு உறவு கொள்வதைக் கள்ளக்காதல் என்ற பெயரில் அழைக்கும் இச்சமுகம் திருட்டுத்தனமாகப் பாலுறவு கொள்ளும் பெண்ணை ஜாரி என்று

குறிக்கிறது. இச்சொல்லும் பெண்ணின் உடல் சார்ந்த உரிமையை குறிக்கும் சொல்லாகவே புழக்கத்தில் உள்ளது.

வடமொழியில் இருந்து வந்த மற்றொரு வசைச் சொல் பெண்களிடம் மட்டுமே பயன்படும் சக்களத்தி என்பதாகும். இச்சொல் சக களஸ்திர என்ற வடமொழிச் சொல்லின் தமிழாக்கம் ஆகும். களஸ்திர என்பது கணவன் அல்லது மனைவியை குறிக்கும். சோதிடத்தில் லக்கினத்திற்கு ஏழாம் இடத்தைக் களத்திர ஸ்தானம் என்பர். அவ் இடம் வாழ்க்கைத் துணை நலத்தைக் *(spouse)* குறிக்கும். இச்சொல் வசை மொழியில் பெண்ணைக் குறிக்க மட்டுமே பயன்படுகிறது. தன் கணவனுக்கு மனைவியாக இருக்கும் இன்னொரு பெண் என்பதை குறிக்கின்றது. தன் கணவனின் வைப்பாட்டி என்பதை சக்களத்தி என்ற சொல் குறிக்கின்றது. பெண்கள் தங்களுக்குள் இழித்துப் பழித்துப் பேசும் போது ஒருத்தி இன்னொருத்தியை சக்களத்தி என்றால் நீ என் கணவனோடு உறவு கொண்டவள் அல்லது உறவு கொள்ள விரும்புகின்றவள் என்று நேரடியாக அவளுடைய ஒழுக்கத்தின் மீது குற்றம் சுமத்துவதாகும். இச்சொல் கேட்பவளின் மனதை ஆழமாகக் காயப்படுத்தும் என்பதால் ஒரு பெண்ணை இழிவு படுத்த வேண்டும் என்று நோக்கில் அவளைத் தன் கணவனுடன் பாலுறவு/ கள்ள உறவு கொண்டவளாகச் சமூகத்தில் சித்தரிக்கின்றாள்.

அவிசாரி, சக்களத்தி, முண்டை போன்ற சொற்கள் இரண்டிரண்டாக சேர்ந்து வரும். இவை பெண்களுக்கு உள்ளே புழங்கினாலும் கூட ஒரு பெண் இன்னொரு பெண்ணை இழித்துப் பழித்துப் பேசும்போது அவளுடைய பாலுறவு நடைமுறையை சுட்டிக்காட்டி பேசுவது பெண்ணினத்திற்கே கேவலமாகும்.

இவ்வாறு பெண்ணின் உடல் சார்ந்த வசை மொழிகள் பெண்ணையும் ஆணையும் கேவலப்படுத்தும் நோக்கில் சமுதாயத்தில் இன்றைக்கும் நடைமுறையில் உள்ளன. பெண்ணை சக மனுஷியாகக் கருதாமல் வெறும் உடலாகக் கருதி இன்னாருடன் மட்டுமே உறவு கொள்ளவேண்டும். பெண்ணின் விருப்பம் ஒரு பொருட்டே கிடையாது. பெண் தன் விருப்பப்படி வாழ சட்டமும் சமயமும் சமுதாயமும் இடம் கொடுக்கவில்லை. அவளைக் கடுமையான இழி சொற்களைப் பேசி அவமானப்படுத்தியது. இன்றைக்கு இந்நிலையில் சில மாற்றங்கள் காணப்படுகின்றன. *1940,50, 60* களில் திரைப்படத்தில் குடும்பத்தினர் ஒரு பெண்ணை விபச்சாரி, வேசி என்று ஏசினர். இன்றைக்கு அவ்வாறு ஏசினால் குடும்ப வன்முறை சட்டத்தின் *(domestic violence)* கீழ் வழக்குத் தொடுக்கலாம். எனினும் இன்று பெண்கள் தங்கள் உடலை பொது மக்கள் பார்க்கும்படி வெளிப்படுத்துவதை சமூகம் நாகரிகம் என்று ஏற்றுக்கொள்கிறது. இத்தகைய மாற்றம் மீண்டும் பெண் ஒரு உடலாகவே பார்த்து (அவள் சம்மதத்துடன்) ரசிக்கப்படுகிறாள் என்ற கருத்துடன் ஒன்றிணைகிறது.

புதிய வெளியீடுகள்







விலை ரூ120

சத்திரோதயம் பதிப்பகம், மதுரை -18. போன் 7010997639